மலர் - 04 இதழ் - 01 ஜூலை 2026

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைவமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

- **சோழங்கநல்லூரின் கதை**
  மு. நளினி, இரா. கலைக்கோவன்
- **பாலினப் பொருளாதாரம்**
  பேராசிரியர் முனைவர் ச. அய்யம்பிள்ளை
- **அனைத்துலக மனிதனை நோக்கி - பரூக் ஸ்பினோசாவும் திருவள்ளுவரும்**
  முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
- **அவிழும் முடிச்சுகள் – சுலாவேசி பாறை ஓவியங்கள்: ஓர் பார்வை**
  அ திவ்யகுமாரி கண்ணம்மா .
- **எளிய முறையில் யாப்பறிவோம்**
  நெருப்பலையார் இராம இளங்கோவன்
- **ஆபன்னூர் தமிழி நடுகல் கல்வெட்டு**

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் – 04 | இதழ் – 01
ஜூலை 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
ஜெஸிலெட் M.A., NET.,

செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by:
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madurai – 625 018,
Tamil Nadu.
Ph: +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப:

rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் சொந்தக் கருத்துகளாகும். அவற்றிற்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

– இதழாசிரியர்

உள்ளடக்கம்

1. **சோழங்கநல்லூரின் கதை**
முநளினி . இராகலைக்கோவன் . 4

2. **From Silver Screen to Secretariat: A Mass Psychological Analysis of the People's Journey in Creating a Leader**
C. Rajasahasranamy 8

3. **பாலினப் பொருளாதாரம்**
பேராசிரியர் முனைவர் ச. அய்யம்பிள்ளை 13

4. **அனைத்துலக மனிதனை நோக்கி பரூக் - ஸ்பினோசாவும் திருவள்ளுவரும்**
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி 23

5. **குருபெயர்ச்சிவிண்வெளி நகர்வும் மனித : !மனங்களின் வாழ்வியல் மாற்றமும்**
அண்ணாமலை சுகுமாரன் 36

6. **அவிழும் முடிச்சுகள் – சுலாவேசி பாறை ஓவியங்கள்: ஓர் பார்வை**
அ திவ்யகுமாரி .கண்ணம்மா 41

7. **பேரறிஞர் அண்ணா** 53

8. **மருத நில நெல் வேளாண்மைக் கலைச்சொற்கள்**
பொதிகை குடும்பன் சண்முகக்குமார் - 54

9. **எளிய முறையில் யாப்பறிவோம்**
நெருப்பலையார் இராம இளங்கோவன் 59

10. **தமிழ்ப்புலவர் சரித்திரம் -சி வை தாமோதரம் பிள்ளை**
பரிதிமாற் கலைஞர் 62

11. **சுதந்திரத்தின் கனவிலிருந்து உலகளாவிய செல்வாக்கு வரை — 250 ஆண்டு அமெரிக்காவின் வரலாறு**
முனைவர் தேமொழி 68

12. **ஆபன்னூர் தமிழி நடுகல் கல்வெட்டு**
சிஅபிஷேக் . 75

13. **கற்றதும் பெற்றதும் -2**
முனைவர் திருமதி செராஜேஸ்வரி . 92

அன்புடையீர் வணக்கம்

சக்தி பெண்ணிதழ் வெற்றிகரமாக தன்னுடைய மூன்றாம் ஆண்டுப் பயணத்தைத் தொடங்க உள்ளது. இதனை ஒட்டி இரண்டு ஆண்டுகளாக நம்முடைய இதழுக்கு அதிகளவில் பங்களித்த கவிஞர் மற்றும் எழுத்தாளர்களுக்கு விருது அளித்துச் சிறப்பிக்க விரும்புகின்றோம் .

சக்தி விருது பெறுகின்ற அவர்களின் பெயர்கள் வருமாறு

1. கவிஞர் வித்யா மனோகர்
2. முனைவர் இல. ஜெயந்தி
3. எழுத்தாளர் ரம்யா நடராஜன்
4. முனைவர் சாந்தினி பீ
5. முனைவர் சைலஜா சக்தி
6. கவிஞர் சக்தி சுரேஷ்
7. மாலதி ராமலிங்கம்

இது தவிர தமிழில் ஆர்வமும் பிறதுறையில் வெற்றியும் பெற்றவர்களுக்கு சக்தி சாதனையாளர் விருது வழங்கிச் சிறப்பிக்க இருக்கின்றோம். அவர்களின் பெயர்கள் வருமாறு:

சக்தி சாதனையாளர் விருதுகள்

1. இயக்குனர் மிருத்திகா சந்தோஷினி
2. வழக்கறிஞர் சந்திரிகா
3. ஆராய்ச்சியாளர் தேமொழி
4. வழக்கறிஞர் வேலா ஸ்ரீ
5. தொழில் முனைவோர் சம்சுல் ஹுதா பானு
6. இசைஞர் டாக்டர் மேனகா நரேஷ்
7. பேரா. முனைவர் மரிய தெரேசா

விழா ஜூலை 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 3 மணி சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள மனிதநேய ஐஏஎஸ் அகாடமி விழா அரங்கில் நடைபெறும். விழாவுக்குத் தங்களை அன்புடன் அழைக்கிற

சோழங்கநல்லூரின் கதை

மு. நளினி, இரா. கலைக்கோவன்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்.
திருச்சிராப்பள்ளி

சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூர் வட்டத்திலுள்ளது திருப்பைஞ்ஞீலி. ***‘காதல் செய்பவர் பெறுவதென், சொலும் ஆரணீயவிடங்கரே’*** என்று ஏழாம் திருமுறையில் சுந்தரர் கேள்விகேட்டு, மறுமொழிக்காய் நின்றது இவ்வூர் நீலிவனநாதர் கோயிலில்தான். அப்பருக்குச் சோறூட்டியதால் சோறுடைநாயனாராய் அறியப்படுபவரும் இக்கோயில் இறைவன்தான். சம்பந்தரின் பிள்ளைத் திருவடிகளும் இவ்வளாகத்தில் பதிகம் பாடப் பதிந்து சென்றன. தேவார மூவராலும் பாடப்பெற்ற தமிழ்நாட்டின் பெருமை மிகு சில கோயில்களுள் இப்பைஞ்ஞீலிப் பெருங்கோயிலும் ஒன்று.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வர்களின் களஆய்வுகள் இங்குப் பதிவாகியுள்ள 71 கல்வெட்டுகளின் பாடங்களையும் வெளிக் கொணர்ந்துள்ளன. ***'திருப்பைஞ்ஞீலி - கோயிலும் கல்வெட்டுகளும்'*** என்ற அம்மையத்தின் அண்மை வெளியீட்டில் கண்கள் பரவிய போதுதான் சோழங்கநல்லூரின் கதை வடிவமானது.

திருப்பைஞ்ஞீலிக் கோயிலில் இரண்டு அம்மன் திருமுன்கள் உள்ளன. இரண்டிலும் நீள்நெடுங்கண்ணி என்ற திருப்பெயருடனேயே இறைவி எழுந்தருளியுள்ளார். புதியவர் வடகிழக்கிலும் பழையவர் வடமேற்கிலும் திருமுன் பெற்றுள்ளனர். சோழங்கநல்லூரின் வரலாறு பேசும் கல்வெட்டுகளுள் இரண்டு, பழைய அம்மன் திருமுன் வடசுவரில் பதிவாகியுள்ளன. தெற்கில் செட்டிமங்கலம், உலகளங்காறநல்லூர் எல்லைகளாக, மேற்கில் சிற்றாம்பூரும் கிழக்கில் பைஞ்ஞீலியும் சோழங்கநல்லூரின் எல்லைகளாக இருந்தன.

இவ்வூரின் வடக்கு எல்லையாகப் பைஞ்ஞீலிக் கோயிலின் தேவதான ஊர்களான குன்றத்தூரும் குளக்குடியும் அமைந்தன. இந்த நான்கு திசை ஊர்களுக்கும் இடையிலிருந்த சோழங்கநல்லூரின் நிலம், குடியிருப்பான நத்தம், குளம் உட்பட்ட அனைத்தும், சுருங்கச் சொல்லின் மொத்த ஊரும் நெடுங்காலத்திற்கு முன்பே இறைவன் பெயரில் திருநாமத்துக்காணியாகக் கோயிலாரால் விலைக்குப் பெறப்பட்டு கோயிலுக்கு உரிமையுடைய ஊராக அவர்கள் பயன்பாட்டில் இருந்தது. வெங்காநத்தம் என்ற இவ்வூரின் பழம்பெயர் சோழங்கநல்லூரானது இந்த விற்பனைக்குப் பிறகுதான். புதிய பெயரேற்றபோதும் வெங்காநத்தம் முன்னொட்டாகவே தொடர்ந்து பயன்பாட்டில் இருந்தது.

இறைவன் பெயரில் கோயில் நிலமாக விளங்கியபோதும் இவ்வூருக்கான வரிகளைக் கோயில் செலுத்தவேண்டியிருந்தது. மூன்றாம் குலோத்துங்கசோழர் ஆட்சிக்காலத்தில் (பொ. கா. 1178-1218) அரசுஅலுவலராக இருந்த சோழகோன் என்பார் இக்கோயில் மீது மிகுந்த அக்கறை கொண்டதை இங்குப் பதிவாகியுள்ள கல்வெட்டுகள் சிலவற்றால் அறியமுடிகிறது. அவரே நேரடியாகவும் சில போதுகளில் தம்மினும் அரசருக்கு அண்மையராக இருந்த மற்றோர் உயர் அலுவலரான வாணாதராயர் வழியாகவும் மன்னரிடம் பரிந்துரைத்து இக்கோயில் நிலத்தொகுதிகள் சிலவற்றுக்கு வரி நீக்க ஆணை பெற்றுள்ளார்.

சோழங்கநல்லூர் மீதும் சோழகோனின் கண்கள் விழுந்தன. இறைவனின் வழிபாட்டிற்கும் கோயில் திருப்பணிகளுக்கும் உதவுமாறு சோழங்கநல்லூர் நிலம் 415 வேலியையும் தேவதான இறையிலியாக்கி ஆணை பிறப்பித்தருளுமாறு வாணாதராயர் வழிச் சோழகோன் மூன்றாம் குலோத்துங்கரிடம் வேண்டுதல் வைத்ததை,

'இந்நிலம் இத்தேவற்கு பூசைக்குந் திருப்பணிக்கும் உடலாக தேவதான இறையிலியாக நிற்கக் கடவதாகப் பெறவேணுமென்று சோழகோன் சொல்லி வரக்காட்டினானாக வாணாதராயன் நமக்குச் சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவதாகச் சொன்னோம்.'

என்ற மன்னரின் வாய்மொழி ஆணை தெளிவாகப் படம்பிடிக்கிறது.

அரசரின் இந்த வாய்மொழி ஆணையை ஓலையாக எழுதியவர், திருமந்திரஓலை எனும் பொறுப்பிலிருந்த மீனவன் மூவேந்தவேளார் ஆவார். அரசரின் திருமுகமாக அழைக்கப்பெற்ற இந்த ஓலை, கோயில் ஆட்சியருக்கான அறிவிப்பாக அமைந்தது. இத்திருமுகத்தை மேற்கோள் காட்டிக் கோயில் ஆட்சியருக்கும் கணக்கருக்கும் உயர்அலுவலர் வாணாதராயன் ஓலை அனுப்பினார். ***'வெங்காநத்தமான சோழங்கநல்லூர் நன்செயும் காடும் குளமும் கொல்லையும் நத்தமும் உள்பட திருநாமத்துக்காணியாக விலைகொண்ட நிலம் நானூற்று ஒருபத்தையர் வேலியும் இக்கோயிலுக்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாகப் பெறவேணுமென்று சோழ கோனார் நாயனார்க்கு விண்ணப்பஞ் செய்கையாலே தேவதான இறையிலியாக நிற்பதாக பிரசாதஞ் செய்தருளி திருமுகம் போந்தது இத்திருமுகப்படியே தேவதான இறையிலியாகக் கைக் கொண்டு பூஜையுந் திருப்பணியும் தாழவுட்டாமல் பண்ணுக'*** என்று அவ்வோலை கோயிலாருக்கு வழிகாட்டியது.

பைஞ்ஞீலிக் கோயில் இறைவனின் வழிபாட்டிற்கும் கோயில் திருப்பணிக்குமாய்த் தேவதான இறையிலியாக்கித் தரப்பட்ட திருநாமத்துக்காணியான சோழங்கநல்லூர், மாறவர்மர் வீரபாண்டியர் காலத்தில் (பொ. கா. 1178-1218) மற்றோர்

அரசாணைக்கு உட்பட்டது. அவர் ஆட்சிக்காலத்தில் பைஞ்ஞீலிக் கோயிலில் அவரது சிறப்புப் பெயர்களுள் ஒன்றான கலியுகராமன் எனும் பெயரில் சிறப்பு வழிபாடு அமைக்கப்பட்டது.

'**கலியுகராமன் சந்தி**' என்று கல்வெட்டுகள் கொண்டாடும் அச்சிறப்பு வழிபாட்டிற்கான செலவினங்களுக்கும் கோயில் திருநாள்களுக்கும் இறைவனுக்கான நித்த வழிபாடு, படையல் ஆகியவற்றுக்குமாய் மன்னர் தம் 29ஆம் ஆட்சியாண்டின் (பொ. கா. 1449) கார்த்திகைத் திங்கள் முதல் பயன்படுமாறு கோயில் சார்ந்த மூன்று ஊர்களை வரி நீக்கப்பட்ட தேவதானங்களாக மாற்றித்தந்தார். அவற்றுள் சோழங்கநல்லூரும் ஒன்று.

வீரபாண்டியரின் இந்த அரசாணைக் கல்வெட்டால், பொ. கா. 15ஆம் நூற்றாண்டில் மக்களிடமிருந்து பெறப்பட்ட 15க்கும் மேற்பட்ட வரியினங்களின் பெயர்கள் கிடைக்கின்றன. அவற்றுள் காவேரிக்கரைத் தேவை குறிக்கத்தக்கது. காவிரியாற்றின் கரையைப் பராமரிக்கவும் நாணல் பயிரிட்டு அதை வலிமைப்படுத்தவும் தேவையான ஆள் உழைப்பை இது குறிப்பதாகக் கொள்ளலாம். இத்தகு ஆள் உழைப்புத் தொடர்பான பல வரிகளை முற்சோழர் காலத்திலிருந்தே காணமுடிவது குறிப்பிடத்தக்கது. இவை நீர்நிலைகளைப் பராமரிக்கவும் அவற்றை எப்போதும் பயன்பாட்டில் இருக்குமாறு கண்காணிக்கவும் ஊரவைகளுக்கு உதவின.

இந்தப் பதிவால், மூன்றாம் குலோத்துங்கர் காலத்திலேயே வரிநீக்கம் பெற்றிருந்தபோதும், சோழங்கநல்லூர் பின்னாளைய ஆட்சியர் காலத்தில் மீண்டும் வரிசெலுத்தும் நிலைமைக்கு ஆளாகியிருந்ததும் வீரபாண்டியர் அந்நிலை மாற்றி மீளவும் அவ்வூரை இறையிலித் தேவதானமாக்கியதும் தெரியவருகிறது. கோயில் ஆட்சியருக்கு வழங்கப்பட்ட இந்த அரசாணை அரசின் வருவாய்த் துறையினருக்கும் அனுப்பப்பெற்று அவர்கள் தங்கள் வரிப்பொத்தகங்களில் உரிய மாற்றங்களைச் செய்வதற்கும் வழிவகுத்தது.

ஓர் அரசரின் ஆணை தொடர்ந்து வருபவர்களால் பின்பற்றப்படுவதும் உண்டு. மாற்றத்திற்கு உள்ளாவதும் உண்டு. இது காலந்தோறுமான நடைமுறை என்பதை இப்பைஞ்ஞீலிக் கல்வெட்டுகள் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

From Silver Screen to Secretariat: A Mass Psychological Analysis of the People's Journey in Creating a Leader

C. Rajasahasranamy,
namygopal@gmail.com

The journey from the silver screen to the secretariat is not merely the journey of an individual, it is the story of a society searching for representation, hope and a new political expression.

Political leadership is not created only through party structures, ideology or election campaigns. Once in a generation, a leader may emerge through a deeper psychological process within society, shaped by collective emotions, social expectations and public aspirations. The transformation of a popular personality from the world of cinema into a political figure capable of attracting mass support has to be understood through the psychology of collective emotional connections.

The journey from the silver screen as an actor Vijay to the secretariat as the Hon'ble Chief Minister of Tamilnadu, Mr. C. Joseph Vijay, is not merely the journey of an individual. It represents the story of a society seeking a new voice, a new hope and a new political expression. Human psychology has always carried the desire for the emergence of a "Krishna" when society wishes to overcome forces perceived as

“Kamsa” or “Narakasura”. It is a combination of two powerful emotions working simultaneously — dissatisfaction or rejection towards an existing situation, and admiration or hope towards a new possibility.

Emotional Polarisation:

One of the strongest psychological forces shaping contemporary politics is emotional polarisation. When societies experience prolonged ideological conflicts, social divisions, or dissatisfaction with existing political choices, many citizens begin searching for an alternative that appears to represent a different direction. A personality who is perceived as offering a new political language can become a symbol of that collective expectation. The emotional appeal often becomes the foundation upon which political support begins to develop.


1. EMOTIONAL POLARISATION
Political identities are shaped more by emotions and narratives than by policies alone.
US vs THEM
MY IDEOLOGY IS RIGHT
THEY ARE WRONG
THEY ARE WRONG
STRONG EMOTIONS
DIVISION
ANGER
FEAR
REJECTION
THEM vs US
MY IDEOLOGY IS RIGHT
MY IDEOLOGY IS RIGHT
WHEN SOCIETY EXPERIENCES DIVISIONS AND DISAPPOINTMENT...
People feel exhausted by continuous conflict.
Trust in existing political choices decreases.
A desire for change and unity grows.
A NEW ALTERNATIVE EMERGES AS A SYMBOL OF HOPE.
Seen as a bridge above existing divisions.
Represents a different political language.
Becomes a symbol of hope, unity and a new possibility.
Emotional polarisation creates fertile ground for a new leadership that promises to rise above division and represent collective aspirations.

Emotional Fatigue and the Search for a Saviour Figure:

Another significant psychological factor is emotional fatigue. When people repeatedly experience traditional political systems associated with allegations of corruption, internal conflicts, or public dissatisfaction, a sense of frustration gradually develops. This frustration creates a psychological desire for renewal — a hope that someone outside the conventional political framework can bring change. In such situations, society often looks towards a "saviour figure" — someone perceived as honest, powerful and capable of breaking the existing pattern. This does not necessarily mean that every aspect of a new leader's policy vision or administrative capability has already been fully examined by the public. At the emotional level, the individual becomes a symbol of hope, change, and the possibility of transformation.


2. EMOTIONAL FATIGUE AND THE SEARCH FOR A SAVIOUR FIGURE
CORRUPTION
CONFLICTS
DISSATISFACTION
ENOUGH IS ENOUGH
WE WANT CHANGE
WE DESERVE BETTER
EMOTIONAL FATIGUE
Energy, trust and hope get depleted over time.
People begin to long for someone who is different, honest, strong and capable of bringing real change.
Repeated disappointment and frustration create emotional fatigue in society.
The search for a "saviour figure" becomes a source of hope and the possibility of renewal.
At the emotional level, the individual becomes a symbol of hope, change and the possibility of transformation.

Hero Identification Psychology:


3. HERO IDENTIFICATION PSYCHOLOGY
The values of a reel hero are transferred to the real person.
CINEMATIC HERO ON SCREEN
TRANSFER OF QUALITIES
from reel hero to real person
IDENTIFICATION WITH THE REAL PERSON
COURAGE
FAIRNESS
COMPASSION
PROTECTION
INTEGRITY
LEADERSHIP
For years, audiences watch the hero fight injustice, protect the weak and stand for truth and fairness.
People unconsciously associate these qualities with the individual they admire on screen.
The public connects with the real person, believing that the same values and strengths exist in real life.
Hero identification bridges the world of fiction and reality, creating an emotional foundation for trust, admiration and support.

Cinema has a unique influence on collective imagination. For decades, audiences have witnessed heroes on screen fighting injustice, protecting ordinary people, and challenging powerful forces. When a popular actor enters politics, the psychological image created through years of cinematic experience can influence public perception. People may unconsciously transfer qualities associated with the fictional hero — courage, fairness, compassion, and protection — onto the real individual. This process is known as hero identification. The audience does not merely remember the actor; they connect with the values, emotions, and ideals represented by the characters portrayed by that actor. Therefore, the transition from cinema to politics is strengthened by an already existing emotional relationship between the personality and the public.

Para-Social Bond:

A significant reason for the initial political appeal of celebrities is the para-social bond. This refers to a one-sided psychological relationship where people develop a feeling of emotional connection with a public figure without having direct

personal interaction. Through films, interviews, television appearances and continuous public visibility, people may develop a feeling that they know the personality for many years.



The public may experience familiarity, trust, and emotional closeness despite never having met the individual personally. This psychological familiarity can become an important factor in generating early political support. The public does not always perceive the person as a complete stranger entering politics; instead, they may feel they are supporting someone they have already known emotionally.

To conclude - People are the Creators of Political Destiny. The creation of a leader is ultimately a collective psychological process. Emotional polarisation, political fatigue, hero identification and para-social bonding combine to influence how societies accept and elevate personalities into leadership roles.

The movement from the silver screen to the secretariat is therefore not merely about an actor entering politics. It reflects the emotions, hopes, frustrations and expectations of lakhs and lakhs of people searching for a figure who represents their desired future. A leader is not created only on a political stage, a leader is first created in the minds of people.

பாலினப் பொருளாதாரம்

பேராசிரியர் முனைவர் ச.அய்யம்பிள்ளை,
பொருளாதார துறை
மேனாள் பேராசிரியர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

இப்போதுள்ள அரசியல், சமூக, பொருளாதார அமைப்பில் எளியோரை வலியோர் ஏமாற்றுவது இயல்புதான் என்று ஏற்றுக்கொள்ளும் சூழலைக் காண்கிறோம். அறம், தர்மம், நீதி,நேர்மை, நியாயம் என்றெல்லாம் பேசினாலும், செல்வம், அதிகாரம் மிக்கவர்கள் தம் அரசியல் மற்றும் பொருளாதார இலாபத்திற்கு விளிம்பு நிலையில் உள்ளோரைப் பகடைக் காய்களாக ஆட்டிப்படைப்பது, சர்வ சாதாரணமாக நடக்கிறது. சட்டம் என்பது ஒரு சிலந்தி வலை; அதில் சிறிய பூச்சிகள் சிக்கிக்கொள்ளும், பெரிய பூச்சிகள் தப்பித்துவிடும் என்று ஓர் அறிஞர் சொன்னது இன்னும் சரியாகத்தான் இருக்கிறது. இச்சூழலில், வறுமைக்குள்ள்ளும் பிற்போக்கான சமூகச்சிந்தனைக்குள்ளும் சிக்கியுள்ளவர்கள், குறிப்பாக, பெண்கள், மிகவும் பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களை ஒரு கேடயமாகப் பயன்படுத்தி, தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்பவர்கள் பலர். அவர்களுள் அரசியல்வாதிகளும் முதலாளிகளும் எவ்வாறு செயல்படுகின்றனர் என்று சுருக்கமாக இங்கே காணலாம்.

நம் நாட்டில் (குறிப்பாகத் தமிழகத்தில்) பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு உயர்ந்துள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. பெண்களின் உச்சி முதல் உள்ளங்கால் வரையிலான அழகு, ஆபரணம், ஆரோக்கியம் ஆகியவற்றிற்காக

ஏகப்பட்ட முதலீடுகள் செய்யப்படுகின்றன; உற்பத்தி மற்றும் வியாபார நிறுவனங்கள் வந்துவிட்டன; விளம்பரங்கள் மிகுந்துவிட்டன; வேலை வாய்ப்புக்கள் பெருகிவிட்டன; பெண்களிடம், பெண்களுக்காகப் பணப்புழக்கம் அதிகரித்துள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அலுவலகங்கள், வணிக மையங்கள், மருத்துவமனைகள், பேருந்து, தொடர்வண்டி, வானூர்தி நிலையங்கள் என எல்லா இடங்களிலும் காணப்படும் பெண்களின் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வருகிறது. ஆண்களுக்காக மட்டும் தொடங்கப்பட்ட பல கல்லூரிகள் இன்று, பெண்களையும் சேர்த்துக்கொண்டு, இருபாலர் கல்லூரிகளாக மாறி வருகின்றன. எங்கெங்கு காணினும் (சக்தியடா) பெண்களடா என்றே சொல்லலாம். பெண்கள் இல்லையெனில் பல கல்வி நிலையங்கள் மூடப்படலாம்.

பெண்களின் சராசரி திருமண வயது உயர்ந்துள்ளது; பெண்கள் குழந்தை பெறுவது குறைந்துவிட்டது; வீட்டைவிட்டு வெளியே சென்று பணம் ஈட்டும் பணி, தொழில், வியாபாரம் செய்யும் பெண்களின் எண்ணிக்கையும், திருமணத்திற்குப் பின்னும் பெற்றோரைப் பேணும் பெண்களின் எண்ணிக்கையும் கூடியுள்ளது. ஆண்களின் தேவை குறைந்துவிட்டது. ஆண்களின் இடத்தைப் பெண்கள் பிடித்து வருகிறார்கள் என்றால் மிகையாகாது.

பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையை விட பல இடங்களில் அதிகமாகவே உள்ளது. கிராமப் பஞ்சாயத்து தேர்தலில், சமீப காலமாக, முப்பது சதவீதத்திற்கும் மேல் பெண்கள் போட்டியிடுகின்றனர்; வெற்றியும் பெறுகின்றனர். இவையெல்லாம் வரவேற்கத்தக்க மாற்றங்கள்; முன்னேற்றங்கள்.

ஆனாலும், கூடவே சில ஐயப்படுகளும், சவால்களும் உள்ளன. கிடைக்கிற புள்ளி விவரங்களின்படி, பெண் சிசுக்கொலை, கருக்கொலை இன்னும் தொடர்கிறது; மொத்தமக்கள் தொகையில், ஆண்களின் எண்ணிக்கையை விடப் பெண்களின் எண்ணிக்கை, (பொருளாதரத்தில் வளர்ந்துள்ள பஞ்சாப், ஹரியானா மாநிலங்கள் உட்பட), பல மாநிலங்களில் குறைவாகவே உள்ளது; ஆறு வயது நிரம்பாத பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, அதே வயதுடைய ஆண் குழந்தைகளின் எண்ணிக்கையைவிடக் குறைவாகவே (முன்னேறிய மாநிலமான கேரளாவிலும்) இருக்கிறது.

ஆராய்ச்சிக் கல்வியில், அனேகமாக எல்லா பாடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், மாநிலங்களிலும் கடந்த ஐந்தாண்டு புள்ளிவிவரப்படி (Source: All India Survey of Higher Education)பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ஊதியத்திற்காக வேலை தேடும் அல்லது வேலையில் இருக்கும் பெண்களின் சதவீதம் நகரங்களில் வெறும் 22 மட்டுமே (Periodic Labour Force Survey 2025, released by the Ministry of Statistics and Programme Implementation). கிராமங்களில் குறைவான கூலிக்குப் பெண்கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். பெண்கள் மீதான தாக்குதல்கள், வன்முறைகள் குடும்பங்களுக்குள்ளும் வெளியிலும் அதிகரித்துள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

மக்களவை மற்றும் சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடுவோரில், பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக (பத்து சதவீதத்திற்கும் குறைவாக) உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெண்களின் எண்ணிக்கை 78 லிருந்து, 2024 தேர்தல்களுக்குப் பின் 74 ஆகக் குறைந்தது. 2024-2025 ஆம் ஆண்டு 10 மாநிலங்களில் 1,276 சட்டசபை இடங்களுக்கான தேர்தல்களில், பெண் உறப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 123 மட்டும்தான் (10 சதவீதத்திற்கும் குறைவு).



தமிழகத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்போவதாகச் சொல்லி, வெற்றிபெற்ற அரசில், 12.05.2026 அன்றைய நிலவரப்படி, தெரிவு செய்யப்பட்ட 10 அமைச்சர்களில் ஒருவரே (10%) பெண் (திருமிகு எஸ்.கீர்த்தனா, 29 வயது, மிக இளையவர்). இக்கட்டுரையை முடிக்கும்போது (10.06.2026 அன்று), இருந்த 35 அமைச்சர்களில் 4 பேர் மட்டுமே (11.5%) பெண்கள். மொத்தமுள்ள 234 தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை 23 (10%); அதில் புதிதாக தொடங்கப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தில் மட்டும் 13 பேர்; 10% ஐ விடச் சற்று அதிகம்; மற்ற பெரிய, பழைய கட்சிகளில் இந்தஎண்ணிக்கை 10% ஐ விடக் குறைவுதான். இதுதான் அரசியலில் பெண்களின் நிலைமை. இது ஏன்?

வாக்களிக்க பெண்கள் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் வரும்போது, பெண்வேட்பாளர்களின், அமைச்சர்களின் எண்ணிக்கை ஏன் குறைகிறது? பெண்கள் ஏன்வருவதில்லை? வருவதில்லையா? வர விரும்பவில்லையா? வரமுடியவில்லையா? மக்களவை மற்றும் சட்டசபை உறுப்பினர்கள், அதிக அரசு அதிகாரம் பெறலாம் (அதிகப் பணமும் சம்பாதிக்கலாம், சொத்தும் சேர்க்கலாம்) என்பது உண்மையாக இருந்தபோதும், பெண்களுக்குஅந்த அதிகார, பண, சொத்து மீது ஆசை இல்லையா? இல்லை, இருக்கிற சூழல் பெண்களுக்கு உகந்ததாக இல்லையா?

இது தொடர்பான சில செய்திகளை Lokniti-CSDS ஆய்வு தருகிறது. (Krishangi Sinhaand Sanjay Kumar, Why quotas alone won't increase women's representation, The Hindu, 23.4.2026, p.5). அதன்படி, சுமார் எழுபது விழுக்காட்டிற்கும் மேலான பெண்கள், தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டியிட விருப்பம் இல்லை என்றே கூறுகின்றனர். இந்த சதவிகிதம், அனேகமாக எல்லாத் தரப்பு {கிராம (76%), நகர (80%), படிப்பறிவு இல்லாத (84%), பனிரண்டாம் வகுப்பிற்கும் மேல் படித்த (75%), கல்லூரிப் படிப்புப் படித்த (78%), 18 முதல் 25 வயது நிரம்பிய (83%), 55 வயதிற்கும் மேற்பட்ட (75%), மேல் ஜாதி (78%), பட்டியலின (81%), முகமதிய (70%), ஏழை (83%), நடுத்தர (74%) மற்றும் உயர் வருமானம்பெறும் (78%)} பெண்களுக்கும் (சிறு வேறுபாடுகளுடன்) அதிகமாகவே உள்ளது. இது, சமூகக் கட்டமைப்பில், பெண்கள் மீதான பார்வையில், விழுமியங்களில்,

மதிப்பீடுகளில், கருத்துருவாக்கத்தில் மாற்றம் வரவேண்டும் என்பதையே காட்டுகிறது. இவற்றில் மாற்றம் வராமல், வெறும் இட ஒதுக்கீடு எதிர்பார்க்கிற பயனைத் தராது.

உதாரணத்திற்கு, சமீபத்திய செய்தி ஒன்றைப் பார்ப்போம். பிகாரில் *Gopalganj* மாவட்டம் *Baikunthpur* தொகுதியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளாதாரத்தில் இளநிலைப் பட்டம் பெற்ற கல்வி அமைச்சர், *"Our daughters are our strength; they are foundation of our society; what is the need for girl education; girls are not required to study, as they should remain within the four walls of the house" (The New Indian Express, 12.05.2026, p.10),* என்று கூறியுள்ளார். இவர் பெண்களைப் பாராட்டுகிறாரா? இழிவுபடுத்துகிறாரா?.

கள நிலவரம் இப்படி இருக்கிறபோது, அரசுகள் நீண்ட காலமாகப் பெண்களுக்கு மக்களவை மற்றும் சட்டசபைகளில் அதிக இட ஒதுக்கீடு அளிக்கவேண்டும் என்று பரப்புரை செய்வதன் உண்மையான பொருள், நோக்கம் என்ன? இந்த வினாவிற்கு, சமீபத்தில் (கடந்த16.04.2026 அன்று) சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நம் மக்களவைக் கூட்டத்தில் நடந்தநிகழ்வு, ஒரு பொருத்தமான பதிலாக அமைகிறது.

வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது என்று தெரிந்தே, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த தேர்தல்களில், பெண்கள் வாக்கைப் பெறும் ஒரே நோக்கத்தோடு, மக்களவையில் உள்ளமொத்த இடங்களை 850 ஆக உயர்த்தி, அதில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்து பெண்களை அதிகாரப்படுத்துவதென்ற ஒரு மாபெரும் (புரளியைக் கிளப்பி), நல்ல(!) நோக்கத்தோடு, 16.04.2026 அன்று ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது (131 st Amendment Bill, 2026 and a companion Delimitation Bill).

அனைவரும் எதிர்பார்த்தபடி, மசோதா தோற்றுப்போனது. மசோதா தோற்றுப்போன பிறகு பேசிய உள்துறை அமைச்சர்....., **"தோற்கும் என்று தெரிந்தே இந்த மசோதாவைக் கொண்டு வந்தோம்"**, என்று குறிப்பிட்டுள்ளார் *(சமரசம்,1-16, 2026, பக்கம் 8).*

மொத்த இடங்களை *850* ஆக உயர்த்துவதிலும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டிலும் உள்ள சிக்கல்களைச் சரி செய்யாமலேயே ஏற்பாடுகள் நடந்தன. மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது போலச் செய்தால், சில மாநிலங்கள் – குறிப்பாக, தமிழ்நாடு, கேரளா –பாதிக்கப்படும்; சில சமூகக் குழுக்கள் – குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் –பாதிக்கப்படுவார்கள். எனவே, அந்த மசோதாவை நிறைவேற்றத் தேவையான அளவுக்கு உறுப்பினர்கள் ஆதரவு அளிக்கவில்லை; மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை: *528*; மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது :அல்லது தேவையான வாக்குகள் *352*; ஆனால் பதிவான சாதகமான வாக்குகள்: *298*. எனவே, மசோதா நிறைவேறவில்லை. இது ஒரு திட்டமிடப்பட்டசெயல் எனப் பலரும் தெரிவித்தனர்; எழுதினர்.



"மக்களவையிலும் சட்டமன்றத்திலும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு" என்னும் தலைப்பு நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வந்தாலும், தேசிய அளவிலும் மாநிலங்களிலும் ஆளும் கட்சியாக இருந்துவந்த / இருந்துவரும் எந்தப் பெரிய அரசியல் கட்சியும், சுமார் பத்து விழுக்காட்டிற்கும்மேல் பெண் வேட்பாளர்களை தேர்தல் களத்தில் இறக்கவில்லை என்பது தான் உண்மை. இது இப்படியிருக்க, ஒவ்வொரு கட்சியும், மற்ற கட்சிகளைக் குறைகூறுவது ஏன்? பெண்களை ஏமாற்றவா? இந்த வெளிப்படையான

பித்தலாட்டங்களைக் கூடப் புரிய முடியாத அளவிற்குப் பெண்கள் இன்னும் அரசியல் அறிவில் பின்தங்கி உள்ளார்களா?

தேர்தல் சமயங்களில், பெண்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, பெண்கள் மீது பாசம்பொங்கி, அரசும், கட்சிகளும் பணம் கொடுப்பதும், பல (இலவச) திட்டங்களை அறிவிப்பதும், பெண்களை ஏமாற்றி வாக்குப் பெற முயற்சிப்பதும் தமிழகத்தில் மட்டும் அல்ல, வட இந்தியாவிலும் வழக்கமாக ஆகிவிட்டது. குடும்ப நிகழ்வுகளுக்கு ஒரு சிறு அளவு (தாலிக்குத்) தங்கம் (யானைப் பசிக்கு சோளப்பொறி) அளிப்பது, பெண்களின் நிலையை உயர்த்திவிடுமா? பெண்கள் கட்டாயம் (தங்கத்தில்) தாலி போட்டுக்கொள்ள வேண்டும் என்ற ஆணாதிக்க, தவறானகருத்தை வலியுறுத்துவதாகவே இது அமைகிறது. அது (ஏழைப்) பெண்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி, அப்பெண்களை ஏமாற்றும் செயலேயாகும். அதற்குப் பதிலாக, அவர்களுக்குத் தரமான கல்வியையும் மருத்துவ வசதியையும், பாதுகாப்பான சூழலையும், பணியினையும் அளிக்கலாம். அவை பற்றி எந்த அரசும் பேசுவதாகத் தெரியவில்லை.

குடும்ப வேலைகளுக்குத் தேவையான உபகரணங்களை (Eg. Mixi, grinder...)தேர்தல் சமயங்களில் இலவசமாக வழங்குவது, குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தாலும், அது பெண்களுக்குச் செய்யும் உதவியாகவே சொல்லப்படுகிறது. இதன் மூலம்,வீடுகளில் துணி துவைப்பதும், சமைப்பதும், பாத்திரம் விளக்குவதும், வீடு சுத்தம் செய்வதும்,மாவு அரைப்பதுவும் பெண்களின் வேலைதான் என்கிற ஆணாதிக்கச் சிந்தனை பரவலாக இருப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

Nari Shakti VandanAdhiniyam (106 th Amendment 2023) எனும் திட்டம் 2024 இல் மக்களவைத் தேர்தலில் பெண் வாக்காளர்களைக் ஈர்ப்பதற்காகவே அவசர அவசரமாகசிறப்பு அமர்வில் கொண்டு வரப்பட்டது. ஆனால், ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறாகப் பெண்களை அதிகாரப்படுத்துவதாகக் கூறி, அவமானப்படுத்துவது நியாயமாகுமா? இதைப் பெண்கள் புரிந்துகொள்ள மாட்டார்களா?

கல்வியில், முதுநிலைப் பட்டப் படிப்பு வரையிலும் அதிகமாகக் காணப்படும் பெண்கள்,பின்னர் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர்வது குறைந்துவிடுகிறது; திருமணம் பெண்பிள்ளைகளுக்கு அவசரமாகவும் அவசியமாகவும் கருதப்படும் அளவிற்கு, ஆண் பிள்ளைகளுக்குக் கருதப்படுவது இல்லை; ஆண்களின் சராசரி திருமண வயதைவிட, பெண்களின் சராசரி திருமணவயது குறைவாகவே இருக்கிறது; மணப்பெண் வீட்டார், மணமகன் வீட்டாருக்கு வரதட்சனை கொடுப்பது, குறிப்பிடும்படியாகக் குறையவில்லை.

இதற்கெல்லாம், சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமானால், நம் (மூளையில்) சமூக அமைப்பில், சமூக நோக்கில், சமூகக் கருத்துருவாக்கத்தில், விழுமியங்களில், மதிப்பீடுகளில் தேவையான அளவுக்கு மாற்றங்கள் வரவில்லை எனச் சொல்லலாம். முதியோரைப் பேணல், குழந்தைகளை வளர்த்தல், வீடுகளில் சமைத்தல் (உணவகங்களில் ஆண்கள் சமையல்காரர்களாக இருப்பார்கள்), பாத்திரம் கழுவுதல், ஆண்களுக்குப் பணிவிடை செய்தல் போன்றவற்றில் பெண்களுக்கு நிகர் பெண்களே என்று புகழப்படுவதன்(!) உண்மையான நோக்கம் என்ன?. பெண்களைப் பணம் ஈட்ட முடியாமல் தடுக்கும் உள் நோக்கமா? இது ஆண்களின் ஆதிக்கம் இல்லையா?

நம் நாட்டில், பெண்கள் பாதுகாப்பிற்காக எவ்வளவோ திட்டங்கள் சட்டங்கள், அமைப்புக்கள் வந்துள்ளன. தமிழ் நாட்டில் 1989 ஆம் ஆண்டு பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டது. இப்போதுள்ள அரசாங்கமும், பெண்களுக்கு அதிக உதவிகள் அளிப்பதாகக் கூறிவருகிறது. சிங்கப் பெண் சிறப்புத் திட்டமும் வந்துள்ளது. இருப்பினும், இந்தியாவில் பெண்கள் மதிக்கப்படுகிறார்களா? துதிக்கப்படுகிறார்களா? பெண்களுக்கு உரிய இடம் கிடைக்கிறதா? பெண்கள் மீதான வன்முறைகள், கட்டுப்பாடுகள் குறைந்துவிட்டனவா? என்று கேட்டால், அவரவர் அனுபவத்திற்கேற்ப பலவிதமான பதில்கள் வரலாம். ஆனால், சமூகத்தில், பொருளாதாரத்தில், அரசியலில் பெண்கள் உரிய இடத்தைப் பெறுகிறார்களா? இடத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்றால் இல்லை என்பது தான் புள்ளிவிவரங்கள் சொல்லும் உண்மை.

குடும்ப வருமானத்தில் பெண்களின் பங்கு சமீப காலமாக உயர்ந்துள்ள போதும், ஆண்களின் வருமானத்துக்குச் சமமாக இல்லை. அசையாச் சொத்து ஆண்களின் பெயரிலேயே அதிகமாக உள்ளது. பெண்களுக்கு, வேலையை விட திருமணத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பொருத்தமான வரன் வரும் வரையில் காத்திருக்கும் இடமாகவே அநேக மாணவியருக்கு கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் அமைகின்றன. ஆனால், ஆண்களுக்கு மாறாகவே உள்ளது. கல்லூரிப் படிப்பிற்குப் பின் வேலையா? திருமணமா? என்று கேட்டால், ஆண்களின் பதில் வேறு; பெண்களின் பதில் வேறு.

மேலே கூறியவாறு, அரசியல் லாபத்திற்காக, அரசியல்வாதிகள் பெண்கள் மேல் அன்பைப்(!) பொழிவது போல ஏமாற்றுகின்றனர். அதேபோல, முதலாளிகளும் தம் சுய நலனுக்காக லாபத்திற்காக பெண் தொழிலாளர்களுக்கே முன்னுரிமை அளிப்பதுபோலச் செய்து ஏமாற்றுகின்றனர். தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களில், ஆண்களைவிட அதிகமாகப்பெண்களைக் காணலாம்.

இதற்குக் காரணம்:

(அ) ஆண்களைவிடப் பெண்களை எளிதாக ஏமாற்றமுடியும்; வேலைவாங்க முடியும்; பெண்களின் உழைப்பைச் சுரண்டுவது எளிது என்ற கருத்து நிலவுகிறது. இன்று, குடும்பப் பாரம் சுமக்க இயலாத, விரும்பாத (குடிகார) கணவன்களுக்கு உதவ, குடும்பச் சுமையைத் தாங்க, பெண்கள் இரவு நேரப் பணியையும், வேறு வழியின்றி, ஏற்றுச் செய்கிறார்கள். இது முதலாளிகளுக்கு வசதியாகிவிட்டது.

(ஆ) முதலாளிகளுக்குப் போட்டியாகத் தனியாகத் தொழில் தொடங்குவதில் பெண்களுக்குசமூக, பொருளாதாரச் சிரமங்கள் இருப்பதாலும், பெண்கள் வேலை மறுப்பு / நிறுத்தம் போன்ற சிரமங்களைத் தர மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாலும், பெண்களுக்குத் தனியார் துறைகளில் முன்னிரிமை கொடுக்கப்படுகிறது; அதுவன்றி, பெண்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்றோ, அவர்களின் குடும்பங்களை பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும் என்றோ அரசியல்வாதிகளோ, முதலாளிகளோ நினைப்பது இல்லை என்றுதான் களநிலவரம் சொல்கிறது.

பெண்களின் அரசியல், சமூக, பொருளாதார அந்தஸ்து சிறிது சிறிதாக உயர்ந்துவருகிறது என்பதில் ஐயமில்லை. ஆனாலும், ஆணுக்கும் பெண்ணுக்கும் உடற்கூறில் உள்ள ஒரு சிறுவித்தியாசம், ஏகப்பட்ட அரசியல், சமூக பொருளாதாரப் பின்னடைவுகளை, தடைகளைப் பெண்களுக்குக் கொண்டு வருவதே கவனிக்கப்பட வேண்டிய கருத்தாக உள்ளது.

அனைத்துலக மனிதனை நோக்கி –
பரூக் ஸ்பினோசாவும் (Baruk Spinoza)
திருவள்ளுவரும்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

ஸ்பினோசா என்ற தத்துவ இயல் அறிஞர் ஆம்ஸ்டர்டாம் நகரில் 1632 இல் பிறந்தவர். இவர் அங்கு வாழ்ந்த போர்ச்சுகீசிய யூத சமுதாயத்தைச் சேர்ந்தவர். சமயப் பள்ளியில் படித்து போதகர் பட்டம் பெற்று ரபியாக வாழ்வதற்கு பயிற்சியும் பெற்றார். ஆனால் இவரது 17வது வயதில் சமயத் தத்துவப் பயிற்சிகளை விட்டுவிட்டு குடும்பத்தின் இறக்குமதி வணிகத்தை கவனித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்.

1656 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் நாள் இவரை ஆம்ஸ்டர்டேம் நகரை விட்டு கிறிஸ்துவ திருச்சபையார் வெளியேற்றினர். இவ்வெளியேற்றத்துக்கு ஹரம் (பாவம்) என்று பெயர். இஸ்லாமியர் இதை ஹராம் என்பர். யூதர்கள் ஹரம் என்பர். இரண்டுக்கும் ஒரே சொல் தான் ஹெச் - ஆர் - எம்.

இதில் உயிர்க் குறியீடுகளை சேர்க்கும்போது யூதர்கள் அ என்னும் உயிரொலியைச் சேர்த்து ஹரம் என்பர் இஸ்லாமியர் ஆ என்னும் உயிரொலியைச் சேர்த்து ஹராம் என்பர். இரண்டுமே பாவம் என்ற பொருளைக் குறிக்கின்றது.

ஸ்பினோஸாவை ஏன் வெளியேற்றினர்?

ஸ்பினோஸா 'இறைவனும் இயற்கையும் ஒன்று. பைபிள் இறைவன் கூறியது அல்ல மனிதர்களால் தொகுக்கப்பட்டது. ஒரு நாட்டின் அரசாங்கம் சமயத்தலைவர்களின் கருத்துக்களை

அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. அன்பு, நீதி, அறிவு ஆகியவற்றை மக்களாட்சி தன் கொள்கைகளாக கொள்ள வேண்டும்'. போன்ற கருத்துக்களைப் பரப்பினார். அறிக்கைகளாக வெளியிட்டார். அதனால் ஆம்ஸ்டர்டேம் நகரில் இருந்து அவர் வெளியேறும்படி உத்தரவிடப் பட்டார். அரசாங்கம் கிறிஸ்துவ சபையின் கட்டளையே ஏற்று இவரை வெளியேற்றியது. ஸ்பினோசாவோடு யாரும் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது. இவருடைய எழுத்துக்களை படிக்கக்கூடாது. அது குறித்து எவரும்பேசக்கூடாது என்றும் உத்தரவுகள் வந்தன.

ஸ்பினோசா இறைவனின் எல்லாம் வல்ல இயல்பினை என்பதை மறுத்தார். ஆத்மா அழியாதது என்பதை மறுத்தார்.

தோரா சட்டமும் நியாயாதிபதிகள் என்று சமயத்தலைவர்களைக் கருதுவதும் தவறு என்றார். தோரா சட்டம் கடவுளால் கொடுக்கப்பட்டது அல்ல. காலத்திற்கு ஏற்ப சமயத் தலைவர்கள் சமூகத்திற்கு தேவையான சட்டங்களைத் தொகுத்து இறைவனின் பெயரால் வந்த தோரா சட்டங்களுடன் இணைத்து விட்டனர் என்றார்.

இச்சட்டங்களைக் கடவுளின் பெயரால் நடைமுறைப்படுத்தி வருகின்றனர் என்றார். இக்கருத்துகளை அறிக்கைகளாக வெளியிட்டார்.

டிஸ்கார்டேஸ் என்பவரின் **பிரின்சிபில்ஸ் ஆஃப் ஃபிலாசஃபி** பற்றி ஸ்பினோஸா விமர்சனம் செய்தார். அதனை 1663 இல் விமர்சனக் கட்டுரையாகத் தன் பெயரில் வெளியிட்டார். **ஜியாலஜிக்கல் பொலிட்டிக்கல் ட்ரீட்டிஸ்** என்ற கட்டுரையை 1670 ஆம் ஆண்டில் தன் (ஆசிரியர்) பெயர் தெரிவிக்காமல் வெளியிட்டார். டட்ச் நாட்டு மறுமலர்ச்சி திருச்சபையும் அரசாங்கமும் இணைந்து செயல்படுவதை இவர் எதிர்த்தார். இவருடைய கருத்துக்கள் பலவும் இவருக்கு முன்பே தமிழகத்தில் திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளில் எடுத்துரைத்துள்ளார்.

1.பூசைக்கு முக்கியம் கடவுளா? மழையா?

ஸ்பினோசா அன்பு அறிவு நீதி இவையே நாட்டின் அரசியல் கொள்கைகளாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். சமயத்தலைவர்களின் கடவுளும் கடவுள் கொள்கைகளும் வழிபாடுகளும் மக்களுக்குப் பெரிய நன்மைகளை தந்து விடாது என்றார். வள்ளுவரும் இக்கருத்தை தன்னுடைய திருக்குறளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெரிவித்துள்ளார்.

சிறப்போடு பூசனை செல்லாது வானம்/
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு (18)

இத்திருக்குறள் வானம் வறண்டால் மழை பெய்யாது ஒழிந்தால் நாட்டில் கோவில்களில் கடவுளுக்கு நடக்கும் பூசைகள் சிறப்பாக நடைபெறா என்ற கருத்தைத் தெரிவிக்கின்றது. மக்கள் ஏதோ பெயரளவில் ஒரு பூசை செய்வார்களே தவிர சிறப்பாக செய்ய இயலாது. காரணம் மழை இல்லையேல் பயிர் இல்லை; பயிர் இல்லையேல் உணவில்லை; உணவில்லையேல் உடல் நலமில்லை; உடல் நலிந்து போயிருக்கும் மக்களால் பூசை வழிபாடு விழா கொண்டாட்டம் போன்றவற்றில் ஈடுபாடு கொள்ள இயலாது. சமய நடைமுறைகளுக்கும் கோவில் பூசைகளுக்கும் இன்றியமையாத் தேவையாக இருப்பது கடவுளோ திருநூலோ அல்ல. இயற்கையின் கொடையே என்ற கருத்தில் வள்ளுவரும் ஸ்பினோசாவும் இணைகின்றனர். ஸ்பினோஸா கடவுளும் இயற்கையும் ஒரு தன்மைத்து என்கிறார். ஆனால் திருவள்ளுவரோ இன்னும் ஒரு பிடி மேலே போய் கடவுளுக்கு பூசை செய்யக்கூட இயற்கையின் கருணை தேவை என்கிறார்.

2. தானம், தவம்

மனிதரின் சமூக வாழ்வுக்கு சகமனிதரை நேசிக்கும் தானமும் ஆன்மிக வாழ்வுக்கு கடவுளைத் தியானிக்கும் தவமும் (ஜெபமும்) தேவை. இவ்விரு வகைப்பட்ட வாழ்வும் சிறக்க இயற்கையின் அருங்கொடை தேவை என்கிறார் திருவள்ளுவர்.

தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்/
வானம் வழங்கா தெனின்

இத்திருக்குறள், வானம்மழை பெய்யாது ஒழிந்தால் நாட்டில் எவரும் தவம் செய்ய மாட்டார்கள். யாரும் தானம் கொடுக்கவும் மாட்டார்கள். இவை இரண்டையும் நாட்டில் காண இயலாது என்கிறது.

இந்தியாவில் சாஸ்திரங்கள் கூறுகின்ற அன்னதானம், வஸ்திரதானம், பூதானம், கன்யாதானம், வித்யாதானம் போன்றவற்றிற்கு மழையே பிரதானம். மழை இல்லாவிடில் செல்வம் இருக்காது மேற்கூறிய எந்தத் தானமும் செய்ய இயலாது. தவம் செய்யும் பெரியோர்கள் உலக ஆசைகளை வெறுத்தவர்கள் என்றாலும் கூட அவர்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் இல்லறத்தாரின் பொறுப்பு என வேதவ ஞானியருக்கும் இல்லறத்தார் உதவி தேவைப்படுகிறது. மற்றவர்களை பராமரிக்கவும் பாதுகாக்கவும் இல்லறத்தாருக்குச் செல்வம் தேவைப்படுகிறது. இச்செல்வம் வேளாண்மை, கைவினைத்தொழில், வணிகம் போன்ற தொழில்களால் கிடைக்கும். இத்தொழில்கள் சிறப்புற வானம் மழை பெய்ய வேண்டும் எனவே மழையில்லாத ஊரில் செல்வ வளம் இருக்காது. பஞ்சமும் பட்டினியும் தான் இருக்கும். அங்கு இறை வழிபாடு குன்றிவிடும். தானம் செய்வோர் காணாமல் போவர். தவம் செய்வோர் குறைந்து விடுவர். ஆக குடும்ப நலத்துக்கு மட்டுமல்ல துறவுக்கும் கோயில் பூசைக்கும் மழையே இன்றியமையாத் தேவையாகும் என்பதை வலியுறுத்தும் வள்ளுவர் இன்னொரு கருத்தையும் மறைமுகமாகச் சுட்டுகிறார்.

மழை எப்படி வரும்?

கடவுள் நம்பிக்கை உள்ள சமூகத்தில் முனிவர்களும் சமயப் பெரியவர்களும் பிரார்த்தனைகள் சிறப்பு வழிபாடுகளும் பூசைகளும் யாகங்களும் நடத்தினால் மழை வரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. வருண ஜெபம் செய்தால் மழைவரும். அமிர்த வர்ஷினி ராகம் வாசித்தால் மழை வரும் என்ற கருத்துக்களை வள்ளுவர் ஏற்கவில்லை என்பதனை இவ்விருகுறள்களும் எடுத்துரைக்கின்றன.

வருண ஜெபமும்

வருண ஜெபம் செய்தால் மழை வரும் என்பது உண்மை என்றால் நாட்டில் வறட்சி நிவாரண நிதி, வறட்சி நிவாரணத் திட்டம், வறட்சி நிவாரணப் பணிகள் என்ற அரசாங்கத் திட்டங்களை தேவையில்லை. வறட்சி என்பதே இருக்காது. ஆனால் ஒவ்வொரு

அரசாங்கம் வரும்போதும் வறட்சி நிவாரணத்திற்கென்று தனிநிதி ஒதுக்கின்றது. அவற்றைக் கொண்டு பல திட்டங்களை நிறைவேற்றுகின்றது. எனவே அரசாங்கம் செயல்படுவதற்கு துறவிகளும் பூசைகளும் கோவில் வழிபாடுகளும் எந்த வகையிலும் உதவப்போவதில்லை. மக்கள் நலத்திட்டங்களே அரசாங்கம் சிறப்பாக செயல்பட உதவும், என்று மறைமுகமாக வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

திருவள்ளுவர் சமயச் செயற்பாடுகள் பற்றிய கருத்தை ஸ்பினோசாவும் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தை நடத்த சமயப் பூசாரிகளை நம்பவேண்டாம். அவர்களிடம் ஆலோசனை கேட்கவேண்டாம். மக்கள் பிரதிநிதிகளை அழைத்து ஆலோசனை நடத்தி அன்பும் அறிவும் நீதியும் சார்ந்த திட்டங்களை உருவாக்குங்கள் என்று ஸ்பினோசா தெரிவிக்கின்றார்.

கடவுள் மக்களைக் காக்கிறாரா? இயற்கை (மழை) மக்களைக் காக்கின்றதா? என்ற கேள்விக்கு இயற்கை (மழை) என்று திருவள்ளுவர் விடை அளிக்கின்றார். மேலும் இயற்கை (மழை) மக்களை மட்டுமல்ல, கடவுளுக்கு நடைபெறும் பூசை, துறவிகளின் வாழ்க்கை, தவம் ஆகிய எல்லாவற்றிற்கும் இயற்கையாகப் பெய்யும் மழையே அடிப்படைத் தேவை என்றும் கூறுகிறார். இதனையே ஸ்பினோசாவும் 17ஆம் நூற்றாண்டில் வழிமொழிகின்றார்..

3.சமய உரிமை (Religious Freedom)

பக்தி என்பது மனிதனின் தனிப்பட்ட சொந்த அனுபவம் ஆகும். அரசாங்கமோ சட்டமோ இதில் தலையிடக் கூடாது என்பது ஸ்பினோசாவின் கருத்தாகும். ஒரு அரசாங்கம் சமயத் தலைவர்களின் அறிவுரையைக் கேட்டு ஒரேமாதிரி அனைவரையும் பேசவோ சிந்திக்கவோ செயல்படவோ வற்புறுத்தக்கூடாது. நாட்டு மக்களின் சிந்தனையும் செயல்பாடுகளும் அவரவர் அறிவுக்கு அனுபவத்திற்கும் ஏற்றதாக இருக்க வேண்டுமே தவிர ஒரு மதம் சார்ந்ததாக மதத்தலைவர் அவர்கள் மனதுக்குள் திணிப்பதாக இருக்ககூடாது. மக்களாட்சியில் ஒருவர் தான் விரும்பும் மதத்தைப் பின்பற்றலாம் என்ற மனித உரிமை குடிமக்களுக்கு வழங்கப்பட வேண்டும், என்கிறார் ஸ்பினோஸா.

அரசாங்கத்திற்கும் தேவாலயத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கக்கூடாது. சமயச் சடங்குகளால் சமூக அமைதி உண்டாவதாக பிரச்சாரம் செய்யக்கூடாது என்கிறார் ஸ்பினோஸா. சமயத்தலைவர் மற்றும் துறவிகளைக் கலந்து ஆலோசித்து அரசாங்கம் சட்டங்களையும் விதிகளையும் அறிவித்தால் சமயவிதிகள் அரச உத்தரவு போலச்

செயற்படும். இதனால் மக்கள் மதத்தின் பேரால் அடிமைகளாக நடத்தப்படுவர். மனிதராக வாழும் உரிமை பெற்றவரகளாக அவர்கள் நடத்தப்படுவதில்லை.

சமயத்தாரின் அறிவுரை பயனற்றது

கடவுளின் சட்டம் (இந்தியாவில் சனாதனம் -மனுதர்மம்) என்ற பெயரால் மக்களை ஒடுக்குவதும் அடக்குவதும் மக்களாட்சித் தத்துவத்துக்கு விரோதமானதாகும் என்பது ஸ்பினோசாவின் கருத்தாகும். இத்தகைய கருத்துக்களை திருவள்ளுவர் பல அதிகாரங்களில் ஆங்காங்கே தன்னுடைய நூல் நெடுகிலும் எடுத்துக்கூறியுள்ளார். ஒரு நாட்டில் மக்களாட்சி சிறப்பாக நடைபெறுவதற்கு துறவிகளோ சமயப் பெரியவர்களோ துணையாக வேண்டியதில்லை. குடும்பத்தாரின் கருத்துக்களுக்கே அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனெனில்

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்/
இல்வாழ்வான் என்பான் துணை (42)

என்கிறார் திருவள்ளுவர். துறவிகளுக்கும் துறவிகளாகப் போகாதவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் கூட இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு இருப்பவனே உறுதுணையாக விளங்குவான். இக்கருத்து துறவிகளுக்கு படுக்கைகளை மலைப்பாறையில் அமைத்துக் கொடுப்பதும், காடுகளில் கொடிய விலங்குகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற அவ்வப்போது வேட்டையாடுவதும் இறந்தவர்களுக்கு ஈமக்கடன் செய்வதும் ஆண்டுதோறும் திதிதர்ப்பணம் நினைவுநாள் அனுசரிப்பதும் இல்லறத்தாரின் முக்கியக் கடமைகளாக இருந்து வருகின்றன. எனவே துறவிகளைப் பாதுகாக்க இல்லறத்தாரிடம் அறிவுரை கேட்க வேண்டுமே தவிர இல்லறத்தார்களைப் பாதுகாக்க துறவிகளிடம் அறிவுரை கேட்பது கூடாது. அதுபயனற்றது.

இல்லறத்தாரே முக்கியம்

தென்புலத்தார் தெய்வம் விருந்துமக்கள் தான்என்றாங்கு/
ஐம்புலத்தார் ஓம்பல் தலை (43)

இக்குறள் விருந்தினர், சுற்றம், கடவுள், இறந்தவர்கள், தன் குடும்பம் ஆகிய ஐவருக்கும் இல்லறத்தவரே கடமைப்பட்டவர் ஆகின்றார் என்கிறது, இவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை இல்வாழ்வான் என்பவன் தன் தலையாயக் கடமையாகக் கொண்டு செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர் தெய்வத்தைப் பாதுகாப்பது

இல்லறத்தானின் பணி. கோவில்களைப் பராமரிப்பது இல்லறத்தானின் கடமை. கோயில் பூசாரிகளுக்கு வேண்டிய செய்து கொடுப்பதும் இல்லறத்தானின் கடமை ஆகும். இந்நிலையில் சமயத்தலைவர்களும் துறவிகளும் எவ்வாறு நாட்டின் விதிகளையும் சட்டதிட்டங்களையும் உருவாக்க முடியும். அவர்களே தம் தேவைக்காக இன்னொருவரை எதிர்பார்த்துத்தானே இருக்கின்றனர். அவர்களுக்கு இல்வாழ்வானின் தேவைகள் எவ்வாறு புரியும் என்ற நியாயமான கேள்வியை திருவள்ளுவர் வாசகர் மனதில் எழுப்புகிறார்.

தியாலஜிக்கல் பொலிடிகல் டிரிட்டிஸ் என்ற அறிக்கையின் மூலமாக ஸ்பினோசா அரசாங்கத்திற்கும் இறைஇயலுக்கும் இடையிலான தொடர்பு பற்றி விளக்குகின்றார். சமயத் தலைவர்கள் தலையிடுவதால் அரசாங்கத்தின் உரிமைகள் பறிபோகின்றன என்கின்றார். மக்களாட்சித் தத்துவத்தில் இறையாண்மை, சமயப்பொறை போன்றவை முக்கியப்பங்கு வகிக்கின்றது. சமயம் மற்றும் வேதாகமம் பற்றிக் குறிப்பிடும் போது சராசரி கடவுள் நம்பிக்கை உடையவர்களின் உணர்ச்சிகளோடு விளையாடும் அல்லது அவர்களின் பயம் மற்றும் வருத்தம் போன்ற உணர்ச்சிகளை பயன்படுத்திக் கொள்கின்ற சமயதலைவர்களை கடுமையாக எதிர்க்கிறார். மூடநம்பிக்கை சார்ந்த சமயநம்பிக்கை மற்றும் சடங்குகளைச் சாடுகின்றார். ஒரு மனிதனின் அச்சத்தைப் பயன்படுத்தி அவனுக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் அவர்களைத் தன் வசப்படுத்துவது சமயத்தலைவர்களின் அன்றாடப் பணியாக உள்ளது. இதனை அரசியலிலும் அவர்கள் புகுத்துகின்றனர். அரசியலும் அரசாங்கமும் சமயமும் ஒன்று சேர்ந்து சிந்திப்பது மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிரானதாக முடிந்துவிடும்.

இலட்சியவாதியாக விளங்கும் சமயத்தலைவர் ஒருவர் தங்களின் நம்பிக்கை மற்றும் செயற்பாடுகளை ஊக்குவித்து மக்களின் பயத்தையும் துக்கத்தையும் அரசாங்கத்தில் அடகுவைத்து தான் சுகவாசியாக வாழ்கிறார். இதுகூடாது. சமயத்தை முதலீடாகக் கொண்டு சமயச் சடங்குகளில் ஆடம்பரங்களைப் புகுத்துவதை ஸ்பினோசா எதிர்க்கின்றார். இவர்கள் சமயத்தை ஒரு போதையாக மக்களுக்கு ஊட்டுகின்றனர். மதம் ஒரு அபின் என்று மார்க்ஸ் சொன்ன கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது. இதனால் ஒரு அரசாங்கம் பின்பற்றக்கூடிய மதம் என்பது பகுத்தறிவு அடிப்படையில்லாமல் பரவசத்துக்கு மதிப்பு தரும் வகையில் உள்ளது. சமயத்தை அரசாங்கத்துடன் இணைப்பதை எதிர்ப்பவர்களும் மறுப்பவர்களும் கடவுளுக்கு விரோதிகள் என்ற பெயரில் தேசத் துரோகிகள் என்று முத்திரை குத்தப்படுகின்றனர். ஸ்பினோஸா 17-ஆம் நூற்றாண்டில்

கூடிய இக்கருத்து இன்றைக்கு இந்தியாவுக்கும் இந்திய அரசியல் நடைமுறைக்கும் பொருந்தி வருகின்றது.

சனாதன தர்மத்தை நடைமுறைக்குக் கொண்டுவரத் துடிக்கும் ஆர் எஸ் எஸ் அமைப்பும் இந்துத்துவா கொள்கையும் காசிநகரை இந்தியாவின் தலைநகராக மாற்ற முயல்கிறது. குலக்கல்வியை வலியுறுத்தும் சனாதன தர்மத்தை அரசியல் சட்டமாக்கவும் திட்டமிட்டுச் செயல்படுகிறது. ஸ்பினோஸா கிறித்துவ மதம் ஹாலந்து நாட்டின் அரசாங்கத்தில் எவ்விதத்தில் பங்கேற்கக்கூடாது என்கிறார்

திருநூல் ஆராய்ச்சி

ஸ்பினோஸா அரசாங்கத்திற்கு நன்மை தரும் வகையில் வேதாகமத்தைப் புதிதாக ஆராயவேண்டும். உண்மையான மதம் எது என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் புதிய கொள்கைகளை வேதாகமத்திலிருந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்கிறார். மதம் மக்களுக்கானது என்பதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். கடவுளின் பேரில் உண்மையான மதிப்பும் மரியாதையும் கொள்ளும்படி அவரை ஒரு நியாயாதிபதியாக மக்களுக்குக் காட்ட வேண்டும்.

4 **ஆண்டவர் முன் அனைவரும் சமம்**

இஸ்ரவேலர் ஆண்டவருக்குப் பிரியமானவர்கள் என்ற கருத்து ஆண்டவரைப் பாரபட்சமுள்ளவராகக் காண்பிக்கின்றது. சனாதன தர்மத்தில் பிராமணர்கள் இறைவனின் தலையில் இருந்து பிறந்தவர்கள் எனவே அவர்கள் மட்டுமே கோயிலில் இறை விக்கிரகங்களைத் தொட்டுப் பூசிக்க வேண்டும் என்ற கருத்தும் கடவுளைப் பாரபட்சமானவராகக் காட்டுகின்றது. திருவள்ளுவர்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா/
செய் தொழில் வேற்றுமையான்

என்றார். மனிதர் யாவரும் பிறப்பால் ஒரே தன்மையினர் ஆவர். மன்னனாக இருப்பவனும் படைவீரனாக இருப்பவனும் அவனது தொழிலுக்கு ஏற்ப மக்களிடம் மரியாதை பெறுகின்றான். மன்னன் இறைவனிடம் இருந்து பிறந்தவன் என்று உயர்த்திக் கருதக்கூடாது. ஸ்பினோஸா ஆண்டவர் பெயரால் மனிதருக்குள் பிரிவினை

உண்டாக்காதீர் என்று தெரிவித்தார். இதனால் இவர் வேதாகமத்தை எதிர்த்து விமர்சிக்கிறார், கேள்வி கேட்கிறார் என்று நாட்டை விட்டு வெளியேற்றினர்.

மறுவாசிப்பு

அள்ஜிரியாவைச் சேர்ந்த ழாக்கஸ் தெரிதா 'முற்காலத்தில் முன்னோர் சொன்னதையே நம்பிக் கொண்டிராமல் தற்காலத்துக்கு ஏற்ப நூல்களை மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டும். இதனால் காலத்துக்கு ஏற்ற புதிய கருத்துகள் கிடைக்கும். நூலும் காலம் கடந்து வாழும். பழைய ஒரே பொருளை/கருத்தை இன்றைக்கும் நாம் நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். புதியபொருள் உள்ளே பொதிந்திருக்கும் . கண்டுபிடியுங்கள்' என்றார். இவர் 1930 இல் பிறந்தவர். ஸ்பினோசாவுக்கு முந்நூறு ஆண்டுகள் பிந்தியவர். நூல் வாசிப்பில் ஸ்பினோசாவின் வழித்தோன்றலாக இவர் விளங்குகிறார்.

வேதாகமப் புத்தொளி பரவட்டும்

ஸ்பினோசா சிந்தனை மற்றும் பேச்சுரிமை கடவுள் பக்திக்கு எதிரானது அல்ல என்பதை வேதாகமத்தை ஆராய்ந்து அதன் மூலமாகவே மக்களுக்கு எடுத்துச் சொல்லலாம் என்றார். அப்படிச் சொல்வதால் மட்டுமே கடவுள் கோட்பாடும் வேதாகமக் கருத்துக்களும் காலம்கடந்தும் நிற்கும். வேதாகமம் 'கர்த்தருக்குக் கீழ்ப்படிதலே ஞானத்தின் ஆரம்பம்' என்கிறது. அதனை 'அறிவுக்குக் கீழ்ப்படிதல்' என்று விளக்க வேண்டும். மூட நம்பிக்கைகளுக்குக் கீழ்படியக் கூடாது.

5 அறிவொளி

திருவள்ளுவர் ஸ்பினோசவுக்கு முன்பே

> **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்/**
> **மெய்ப்பொருள் காண்ப தறிவு**

என்றார். ஸ்பினோசாவும் வேதாகமத்தில் இருப்பதால் ஒரு கருத்தை உண்மை என்று நம்பவேண்டாம். மறுவாசிப்புக்கு உட்படுத்துங்கள். புதிய பொருண்மையைக் கண்டறியுங்கள் என்றார். ஏனெனில் மக்களாட்சித் தத்துவம் பகுத்தறிவு சார்ந்தது. இதில் குருட்டு நம்பிக்கைகளுக்கும் மூட பழக்க வழக்கங்களுக்கும் இடமில்லை. அனைத்து தரப்பு மக்களையும் இனம், மொழி வேறுபாடின்றி நேசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்இதுவே மக்களாட்சி தத்துவம்ஆகும்.

அரசாங்கம் பாரபட்சமின்றி நடைபெற உதவும் வகையில் கடவுள் பக்தியும் வேதாகமக் கருத்து விளக்கங்களும் அமைய வேண்டும் என்றார் ஸ்பினோஸா. வேதாகமம் மக்களுக்கானது. கடவுளை பற்றியது என்றாலும் அது கடவுளுக்கு உரியது ஆல் என்பதை வலியுறுத்தினார். ஆன்மாவை மறுத்துவிட்டு வெறும் சடங்குகளைப் பின்பற்றுவதில் அர்த்தமில்லை என்பது அவருடைய வாதமாக இருந்தது.

ஸ்பினோஸா வேதாகமம் கூறும் தீர்க்கதரிசிகள் அறிவுத்திறன் அற்றவர்கள். அவர்களிடம் இருப்பது தீவிரபக்தி மட்டுமே. இந்த பக்தியைக் கொண்டு அறிவின் எல்லைக்கு அப்பால் அவர்கள் கற்பனை செய்து கூறிய எல்லாவற்றையும் உண்மை என்று நம்பவேண்டிய அவசியம் இல்லை என்றார். வேதாகமத்தில் உள்ள தீர்க்கதரிசனத்தையும் அற்புதங்களையும் பகுத்தறிவுப் பார்வையுடன் அணுக வேண்டும். மீவியற்கைப் பண்புகளை நீக்கிப் பார்க்க வேண்டும். இதனை *De mystification* என்கிறார்.

படிக்காதவர்களை பாமரர்களை கடவுள் நம்பிக்கை என்ற பெயரால் மேலும் மேலும் முட்டாள் ஆக்குவதை ஸ்பினோஸா எதிர்க்கின்றார். இம்முட்டாள்தனத்தை வளர்ப்பதற்காக நம்ப இயலாத பல கற்பனைக் கதைகளை, கடவுள் கதைகள் என்று எழுதிப் பரப்புவதை சாடுகின்றார். ஸ்பினோசாவின் கருத்துக்களை இன்று படிக்கும் போது இந்தியாவிலும் இதே அச்சுறுத்தல் இருப்பதை உணர முடிகிறது.

இந்தியாவில் ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் புராணங்கள் பிரச்சார நோக்குடன் தோன்றின. ஆயிரம், பதினாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை என்று பொய்பிரச்சாரம் செய்யப்பட்டன. சமயத்தின் பெயரால் பகுத்தறிவுக்குப் பொருந்தாத பலகதைகளை உருவாக்கினர். இக்கதைகளில் வரும் நிகழ்வுகள் அனைத்தும் தேவர்கள் அசுரர்கள் எனப்படும் மனிதர்கள் அல்லாத பிறவிகளால் மட்டுமே நடைபெற்றன. இவற்றைப் படித்தும் கேட்டும் வியந்த சராசரி மக்கள் இவைதான் இந்துமதம் என்று நம்பி மூடப்பழக்க வழக்கங்களில் தோய்ந்து போயினர்.

நம்பஇயலாத அறிவுக்குப் பொருந்தாத வக்கிரம் நிறைந்த புராணக்கதை நிகழ்ச்சிகளைத் தெய்வங்கள் நிகழ்த்தி காட்டியதால் அவற்றை அதிசயங்கள் என்றனர். அதை நம்புகின்ற மக்களை உண்மையான பக்தர்கள் என்று சமயத் தலைவர்கள் பிரச்சாரம் செய்தனர். இன்று புராணங்களை எதிர்த்தால் வழக்கு. சநாதனத்தை எதிர்த்தால் தேசவிரோதம் போன்ற அச்சுறுத்தும் முத்திரைகளும் மிரட்டல்களும் சராசரி மக்களின் பேச்சுரிமைக்கு வாய்ப்பூட்டு போட்டு விட்டன. இந்நிலை இன்று இந்தியாவில். மக்கள்

மனதில் ஓர் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையை ஸ்பினோசா விளக்கமாக எடுத்துரைக்கின்றார்.

6. அன்பு

இறைச்சட்டம் என்பது இறைவனின் அன்பையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டதே தவிர கொண்டது. இறைஅன்பை அச்சுறுத்தும் சட்டங்களால் பெற இயலாது. அச்சுறுத்தும் சட்டங்களுக்கும் அபராதங்களுக்கும் அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை. அண்டை அயலாரை சகமனிதர்களை நேசித்தால் அதுவே இறை அன்பைப் பெற்றதற்கு இணையானதாகும் என்றார்.

வள்ளுவரோ இக்கருத்தை

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு/
என்புதோல் போர்த்த உடம்பு.

என்றார். அன்பு இல்லாத வன்மனிதனே அல்ல. சகமனிதனை நேசிக்காத வன்வெறும் உடம்பு (பிணம்) என்றார். அன்பு இல்லாத இடத்தில் ஆண்டவனே இருந்தாலும் உயிர் வாழமுடியாது என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

இறைச்சட்டம் என்பது உண்ணா நோன்பு, உபவாச ஜெபம், உயிர்ப்பலி போன்ற வழிபாட்டுச் சடங்குகள் பண்டிகைகள் போன்றவற் வளர்க்க உருவானதல்ல. தோரா சட்டத்தில் உள்ள 613 கருத்துக்களுக்கும் அறத்துக்கும் இறைவனின் ஆசிக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது என்று ஸ்பினோசா உறுதிபடத் தெரிவித்தார். சமயத் தலைவர்கள் கொந்தளித்தனர்.

மக்கள் வாழ்க்கையில் அன்பே பிரதானமாக இருக்க வேண்டும் அவர்கள் எதையும் அறிவுடன் சிந்திக்க வேண்டும். சமயத்தலைவர்கள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்/
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற வள்ளுவரின் கருத்தை ஸ்பினோஸாவும் கூறியுள்ளார்.

இஸ்ரவேலர்கள் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்பதை ஸ்பினோஸா பொய் பிரச்சாரம் என்றார். கேரிஸ் என்ற கிரேக்க வார்த்தை விவிலியத்தில் தேர்ந்தெடுத்த

அன்பு, தனிப்பட்ட அன்பு என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் காணப்படும் இச்சொல் ஆண்டவர் இஸ்ரவேலர்களைத் தெரிவு செய்து அன்பு செலுத்தினார் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறது.

கேரிஸ் என்ற சொல்லின் பயன்பாடு ஆண்டவர் மற்றவர்களைச் சற்றுதூரத்தில் வைத்து அன்பு செலுத்தினாரோ இவர்களை மட்டும் தன் அருகில் வைத்து அவர்களிடம் அன்பு செலுத்தினாரோ என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கின்றது.. இறைவன் முன் எல்லோரும் சமம் என்றால் அவர் ஒரு இனத்தாரை தேர்ந்தெடுத்தார் என்று சொல்வது தவறாகி விடும்.

ஆண்டவர் அன்பு என்பது இறைவனின் அன்பு என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஒரு தரப்பினரை ஒரு நாட்டினரை ஒரு இனத்தினரை அவர் தேர்ந்தெடுத்து அன்பு செலுத்துகிறார் என் என்று கூறுவது பொருளற்ற கருத்து. மக்களாட்சிக்கு பொருந்தி வராத கருத்து, என்பது ஸ்பினோசாவின் வாதம். இதனைக் கேட்டு கொந்தளித்த சபையோர் இவ ர் இறைவனுக்கு விரோதமாக விவிலியத்துக்கு விரோதமாக பேசுகிறார் என்று குற்றம் சுமத்தினர்.

7 யார் கடவுள்?

மக்கள் போற்றும்படி வாழ்வதில் தான் ஒருவன் தெய்வத்திற்கு நிகரான தன்மையை அடைகின்றான் என்கிறார் வள்ளுவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்/
தெய்வத்துள் வைக்கப் படும் *(50)*

என்ற குறள் வாழும் வகை தெரிந்து வாழ்பவன் தெய்வம் ஆகிறான் என்கிறது. 'வாழும்வகை' என்றால் மற்றவர்கள் மீது அன்பும் அக்கறையும் செலுத்துவது பாரபட்சமாக நடந்து கொள்ளாமல் நேர்மையாக நடந்து கொள்ளுவது மூடநம்பிக்கைகளை ஏற்றுக் கொள்ளாமல் பகுத்தறிவுடன் செயல்படுவதாகும்.

அன்பு, அறிவு, நீதி ஆகியவற்றைப் பின்பற்றி வாழ்கின்றவன் இறைவனுக்கு நிகரானவன். கடவுளை வேதகமங்களில் தேட வேண்டாம். கோயிலில் போய்காண வேண்டாம். மக்களிடம் அன்பு செலுத்துபவனே இறைவன். அவனே கண்கண்ட கடவுள். ஸ்பினோசா இறைவனுக்கு வேண்டப்பட்டவர்கள் என்று ஒரு பிரிவினரை அரசியலில் ஈடுபடுத்துவது மக்களை முட்டாளாக்கி சுகவாழ்வு வாழும் நுண்அரசியல் ஆகும்.

சுயஅறிவு படைத்தவன் முரடாகவும் முட்டாளாகவும் கருதப்படுவான் சமயமும் சமயம் சார்ந்த அரசாங்கமும் சொல்வதை அப்படியே கேட்டு வாழ்பவன் நல்லவனாகவும் நாட்டிற்கு வாழத்தகுதி படைத்தவனாகவும் கருதப்படுவான். உண்மையான இறைஅன்பு என்பது இந்நாட்டில் இருக்காது. எல்லோரையும் நேசியுங்கள் என்று ஸ்பினோஸா கூறியது விவிலியத்தை எதிர்ப்பதாக அமைந்துவிட்டது.

ஸ்பினோசாவுக்கு ஏற்பட்ட நிலைபக்தி இலக்கிய காலத்தில் (பக்தி இயக்க காலத்தில்) தமிழ்நாட்டில் சமண பௌத்த துறவிகளுக்கும் ஏற்பட்டது. சைவவைணவர்கள் சமயவாதம் என்ற பெயரில் அனல்வாதம் புனல்வாதம் போன்றவற்றை நடத்தி புறச்சமயத்தைச் சேர்ந்த சமணபௌத்தர்களை நாக்கை அறுத்தும் கழுவில் ஏற்றியும் மலையிலிருந்து உருட்டிவிட்டு கொன்றனர். இதனால் பல நூற்றாண்டுகளாக மக்களிடம் செல்வாக்குடன் விளங்கிய சமணபௌத்த மதங்கள் இருந்த இடம்தெரியாமல் அழிந்தன.

கடவுள், மனிதன், பற்றிய மெய்யியலில் திருவள்ளுவரை போல் ஸ்பினோசாவும் அன்பு, அறிவு, நீதி ஆகிய கருத்துக்களை மக்கள் முன் வைத்துள்ளார். வேதகமத்தின் மறுவாசிப்பை வலியுறுத்துகிறார். இருவரது கருத்துகளும் உலக பொதுவானவை. மக்கலாட்சித் தத்துவத்துக்கு அரண் சேர்ப்பவை. இனம் மதம் நிறப்பாகுபாடுகளற்ற அனைத்துலக மனிதனுக்கு *(universal man)* உரியவை.

ஜூன் 2, 2026 – குருபெயர்ச்சி: விண்வெளி நகர்வும்... மனித மனங்களின் வாழ்வியல் மாற்றமும்!

அண்ணாமலை சுகுமாரன்
சித்தரியல் ஆராய்ச்சியாளர்,
புதுவை



மாற்றங்கள் மட்டுமே மாறாத இவ்வுலகில், வானியல் ரீதியான கோள்களின் நகர்வுகள் எப்போதும் மனிதகுலத்தின் கவனத்தை ஈர்க்கத் தவருவதில்லை. அந்த வகையில், வரும் ஜூன் 2, 2026 அன்று நிகழவிருக்கும் குருபெயர்ச்சியானது, சமூக வலைத்தளங்களிலும் படித்த நவீன இளைஞர்கள் மத்தியிலும் கூட மிகப்பெரிய எதிர்பார்ப்பையும் அதிர்வலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏன் இந்த எதிர்பார்ப்பு? இதற்குப் பின்னால் இருக்கும் உளவியல் மற்றும் வாழ்வியல் உண்மைகள் என்ன?

- ***கூட்டுநனவிலி மனநிலை (Collective Consciousness) மற்றும் புதிய நம்பிக்கை***

மனித மனம் எப்போதும் ஒரு புதிய தொடக்கத்தை அல்லது மாற்றத்தை நோக்கியே பயணிக்க விரும்புகிறது. அறிவியல்பூர்வமாக, நம்மைச் சுற்றி நடக்கும் நேர்மறையான கூட்டு அதிர்வுகள் நம்முடைய சிந்தனைத் திறனை மேம்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இந்த குருபெயர்ச்சி என்பது வெறும் பஞ்சாங்கக்கணிப்பு மட்டுமல்ல; ஒட்டுமொத்தசமூகமும் ''நல்ல மாற்றம் வரப் போகிறது'' என்று கூட்டு மனதாக நம்பும் ஒரு புள்ளி. இந்த கூட்டு நம்பிக்கை, தொய்வடைந்து கிடக்கும் பொருளாதார மற்றும் தொழில்சந்தைகளில் ஒரு புதிய புத்துணர்ச்சியையும், முதலீட்டு ஆர்வத்தையும் விதைக்கிறது.

- ***தேக்க நிலையை உடைக்கும் 'ஆற்றல் மாற்றம்' (Energy Shift)***

கடந்த சில காலமாகவே தொழில் தடையாலோ, சரியான அங்கீகாரம் கிடைக்காததாலோ அல்லது தவறான நிதிமேலாண்மையாலோ முடங்கிப் போயிருந்த பலருக்கு, இந்த விண்வெளி நகர்வு ஒரு 'மறுதொடக்கம்' (Reset Button)

போன்றது. நவீன உலகம் இதனை ஒரு 'ஆற்றல்மாற்றம்' (Energy Shift) என்று அழைக்கிறது. நமது மூளையின் செயல் திறனை, மந்த நிலையிலிருந்து மாற்றி, இலக்குகளை நோக்கிச் செலுத்தும் ஒரு உளவியல் ஊக்கியாக இந்த காலகட்டம் பார்க்கப்படுகிறது.



- **படித்த நவீன சமூகத்திற்கான வழிகாட்டி**

இன்றைய இளையதலைமுறை எதையும் தர்க்கரீதியாகவும் (Logical), தரவுகள் (Data) அடிப்படையிலும் அணுக விரும்புகிறது. அவர்களுக்கு இது ஒரு சடங்கு அல்ல; மாறாக தங்களின் தற்போதைய நிலையை சுய பரிசோதனை செய்து, தங்களின் தனித்திறமைகளை (Skill sets), ஆளுமைப் பண்புகளை மற்றும் நிதிப் புத்திசாலித் தனத்தை (Financial Intelligence) வளர்த்துக் கொள்வதற்கான ஒரு சிறந்த கால அளவு (Timeframe).

"எதிர்பார்ப்பு தான் வாழ்வின் உந்துசக்தி." அந்தவகையில், இந்த 2026 குருபெயர்ச்சி ஒட்டு மொத்தமக்களுக்கும் வெறும் நம்பிக்கையை மட்டும் தராமல், அதனைத் தொழில் வெற்றியாகவும், பண வரவாகவும் மாற்றுவதற்கான புதிய உத்திகளையும், மன முதிர்ச்சியையும் தரப்போகிறது.

வாருங்கள், இந்த பிரபஞ்ச ஆற்றல் உங்கள் ராசியில் என்ன மாதிரியான தொழில்முறை மற்றும் பொருளாதார மாற்றங்களை நிகழ்த்தப்போகிறது என்பதை, அடுத்தடுத்த பகுதிகளில் விரிவாகவும், நூல்கள் படியும், சுவையாகவும் காண்போம்! இதுவும் ஒரு நம்பிக்கை விதைக்கும் முயற்சிதான்.

1. **மேஷம் (Aries) – 'மறு சீரமைப்பு, பணப் பெருக்கம் மற்றும் புதிய தொடக்கம்'**

மேஷம் 2026 – உங்கள் மூளைக்கான புதிய மென்பொருள் பதிவிறக்கம்! நிதி மற்றும் தொழில் புரட்சிக்குத் தயாராகுங்கள்!

பொதுவாக மேஷ ராசியினர் எப்போதும் அதிவேகமாகச் செயல்படக் கூடியவர்கள். இந்த குருபெயர்ச்சி உங்கள் வேகத்தைக் குறைத்து, விவேகத்தைக் கூட்டப் போகிறது. அறிவியல் ரீதியாகச் சொன்னால், இது உங்கள் மூளையின் சிந்தனைத் திறனை மறுசீரமைப்பு செய்யும் ஒரு காலகட்டம். பணவரவு மற்றும் நிதிமேலாண்மை: இதுவரை இருந்த தேக்கநிலை மாறி, புதிய வழிகளில்

வருமானம் வரத் தொடங்கும். உங்களின் பொருளாதாரத் திட்டமிடல் வெறும் ஆசையாக இல்லாமல், தரவுகள் சார்ந்ததாக *(Data-driven)* மாறும். பழைய கடன்களை அடைப்பதற்கான சூழல் உருவாகும். திடீர் பணவரவுகள் இருந்தாலும், அவற்றை ஆடம்பரமாகச் செலவழிக்காமல், எதிர்காலப் பாதுகாப்பிற்கான முதலீடுகளாக மாற்றுவீர்கள். உங்கள் முதலீட்டுப் பழக்கத்தில் ஒரு முதிர்ச்சி ஏற்படும்.

தொழில் வெற்றி மற்றும் ஆளுமை வளர்ச்சி:

பணியிடத்தில் அல்லது சுயதொழிலில் இதுவரை இருந்த மனக்குழப்பங்கள் நீங்கி, தெளிவு பிறக்கும். தேவையற்ற எண்ணங்களை நீக்கும் 'மனத்துாய்மை' நிகழும். உங்களின் தலைமைப் பண்பு *(Leadership Skills)* அடுத்த நிலைக்குச் செல்லும். புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் இருந்த தயக்கங்கள் நீங்கி, துணிச்சலுடன் களம் இறங்குவீர்கள். தொழில் கூட்டாளிகளுடன் இருந்தகருத்து வேறுபாடுகள் மறைந்து, சுமூகமான சூழல் நிலவும்.

இளைஞர்களுக்கான செய்தி:

உங்கள் இலக்குகளை நோக்கிச் செல்லும் போது ஏற்படும் தடைகளைக் கண்டு அஞ்சாதீர்கள். இந்த மாற்றம் உங்கள் ஆளுமையை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும் ஒரு தற்காலிகப் பயிற்சிப்பாசறை. உங்களின் உழைப்பிற்கான அங்கீகாரமும், அதற்குரிய பணபலனும் உங்களைத் தேடிவரும்.

2. ***ரிஷபம் (Taurus)* – 'ஆற்றல் பெருக்கம், வணிக விரிவாக்கம் மற்றும் சமூகத்தொடர்பு'**

ரிஷபம் 2026 – சமூக வலைத்தளத் தொடர்புகளும், புதிய தொழில் வாய்ப்புகளும்!

ரிஷப ராசியினருக்கு இந்த குருபெயர்ச்சி, தங்களின் தனிப்பட்ட திறமைகளைச் சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமையப் போகிறது. உங்கள் எண்ண அலைகள் நேர்மறையான ஆற்றலோடு செயல்படத் தொடங்கும்.

பணவரவு மற்றும் நிதிமேலாண்மை:

உங்களின் வருமானத் தளங்கள் பல்கிப்பெருகும். ஒரே ஒரு வருமானத்தை மட்டும் நம்பியிருக்காமல், மாற்று வருமான வழிகளை (Multiple Streams of Income) வெற்றிகரமாக உருவாக்குவீர்கள். நண்பர்கள் அல்லது தொழில் முறைத் தொடர்புகள் மூலமாகப் பெரிய நிதி உதவிகள் கிடைக்கும். உங்களின் சேமிப்புக்கணக்கு உயருவதோடு, அசையா சொத்துக்கள் வாங்குவதற்கான யோகமும் கைகூடி வரும்.

தொழில் வெற்றி மற்றும் ஆளுமை வளர்ச்சி:

தொழில் மற்றும் பணியிடத்தில் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொண்டு, உங்களை நீங்களே புதுப்பித்துக் கொள்வீர்கள். தகவல் தொடர்புத்திறன் பெருமளவில் மேம்படும். இதனால் புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் பெரிய வணிக ஒப்பந்தங்கள் உங்களைத் தேடிவரும். உங்கள் கூட்டு உழைப்பு மிகப்பெரிய வெற்றியைத் தரும். மேலதிகாரிகள் மற்றும் முதலீட்டாளர்களின் நன்மதிப்பைப் பெற்று, உங்கள் தொழிலை அடுத்தகட்டத்திற்கு (Scalability) எடுத்துச் செல்வீர்கள்.

இளைஞர்களுக்கான செய்தி:

சுற்றியுள்ள மனிதர்களிடம் இருந்து நல்ல விஷயங்களையும், வணிக உத்திகளையும் மட்டும் உறிஞ்சிக் கொள்ளும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கும். சமூக ஊடகங்களை வெறும் பொழுது போக்காகப் பயன்படுத்தாமல், உங்கள் தொழில் வளர்ச்சிக்குரிய முதலீடாக மாற்றுவீர்கள்.

3. ***மிதுனம் (Gemini) – 'உளவியல் முதிர்ச்சி, அசுர தொழில் வளர்ச்சி மற்றும் நிதி நுண்ணறிவு'***

மிதுனம் 2026 – இலக்குகளை வெல்லும் மதிநுட்பம்! உங்கள் பொருளாதாரப் பாதையில் ஒரு புதிய வெளிச்சம்! இருவேறு சிந்தனைகளால் எப்போதும் ஊசலாடும் மிதுன ராசியினருக்கு, இப்போது இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு, இந்த இடமாற்றம் ஒருநிலைத் தன்மையைக் கொடுக்கப் போகிறது. உளவியல் ரீதியாகநீங்கள் மிகவும் முதிர்ச்சியடைந்த ஒரு மனிதராக மாறுவதை உணர்வீர்கள்.

பணவரவு மற்றும் நிதிமேலாண்மை:



பொருளாதார ரீதியாக மிகவும் அற்புதமான காலகட்டம் இது. வரவு மற்றும் செலவுகளைத் திட்டமிட்டுச் செய்யும் 'நிதி மேலாண்மை' தானாகவே கைக்கூடும். வீண் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, நீண்டகால முதலீடுகளில் *(Long-term Investments)* கவனம் செலுத்துவீர்கள். முடங்கிக் கிடந்த பணப்புழக்கம் சீராகும். நீங்கள் எடுக்கும் நிதிசார்ந்த முடிவுகள் அனைத்தும் லாபகரமான பலன்களைக் கொடுக்கும்.

தொழில் வெற்றி மற்றும் ஆளுமை வளர்ச்சி:

தேவையற்ற அலைச்சல்கள் குறைந்து, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இலக்கின் மீது உங்கள் கவனம் முழுமையாகக் குவியும். சுயதொழில் செய்பவர்களுக்குப் புதியகிளைகள் அல்லது புதியதளங்களில் வணிகம் செய்யும் வாய்ப்புகள் அமையும். உங்களின் முடிவெடுக்கும் திறன் கூர்மையடையும். குழப்பமான சூழலில்கூட, சரியான பாதையைத் தேர்ந்தெடுக்கும் மனவலிமை உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

இளைஞர்களுக்கான செய்தி:

மனதில் இருந்த தேவையற்ற அச்சங்கள் நீங்கி, தெளிவான திட்டமிடுதலுடன் செயலாற்றுவீர்கள். இந்த குருபெயர்ச்சி உங்களை ஒரு சிறந்த மேலாளராகவும், பொருளாதார ரீதியாகத் தற்சார்பு உடையவராகவும் மாற்றப் போகிறது.

இந்த பலன்கள் உங்களுக்கு உவப்பாக உள்ளதா ?

உங்கள் கருத்துகளை கூறுங்கள்.

இதன் தொடர்ச்சி நாளை வரும் .

அவிழும் முடிச்சுகள் – சுலாவேசி பாறை ஓவியங்கள் ஓர் பார்வை

அ.திவ்யகுமாரி கண்ணம்மா, D IA E

ஐயை உலகத்தமிழ் மகளிர் மன்றம்

*இந்தோனேஷியாவின் **சுலாவேசி** (**Sulawesi**) தீவில் கண்டறியப்பட்ட குகை ஓவியங்கள், மனித வரலாற்றையும், கலைகளின் பரிணாமத்தையும், நம் கண்ணோட்டத்தையும் முற்றிலும் மாற்றி அமைத்திருக்கின்றன.*

"கலைகளின் தொட்டில் ஐரோப்பா தான்" என்ற உலகளாவிய எண்ணத்தை உடைத்து, ஆசியாவின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றியவை இந்த ஓவியங்கள்.

ஆய்வாளர்கள் சுலாவேசியின் வெவ்வேறு குகைகளில் உள்ள ஓவியங்களை லேசர் முறையில் பரிசோதித்தபோது இரண்டு முக்கியக் காலக்கட்டங்கள் கண்டறியப்பட்டன:

i. *சுலாவேசியின் தென்கிழக்கு பகுதியில் உள்ள 'லியாங் மெடண்டுனோ' (Liang Metanduno) குகையில் கண்டறியப்பட்ட, விலங்கின் நகங்களைப் போன்ற வடிவத்தைக் கொண்ட மனிதக் கை குறி ஓவியம் குறைந்தது 67,800 ஆண்டுகள் பழைமையானது என்று கண்டறியப்பட்டுள்ளது. இதுதான் தற்போது உலகிலேயே மனிதர்களால் வரையப்பட்ட மிகப்பழைமையான பாறை ஓவியமாக கருதப்படுகிறது.*

ii. *இதே தீவின் 'லியாங் கரம்புவாங்' (Leang Karampuang) குகையில் ஒரு காட்டுப் பன்றியை மூன்று மனித உருவங்கள் சூழ்ந்திருப்பது போன்ற ஒரு காட்சி வரையப்பட்டுள்ளது. இதன் வயது குறைந்தது 51,200 ஆண்டுகள் ஆகும். மனித வரலாற்றில் ஒரு கதையை விவரிக்கும் வகையில் வரையப்பட்ட உலகின் மிகப் பழைமையான 'கதை சொல்லும் ஓவியம்' (Narrative Art) இதுவேயாகும்.*

இங்குள்ள சில குகை ஓவியங்கள் சுமார் ***44,000*** **முதல்** ***51,200*** **ஆண்டுகள் வரை** பழமையானவை என்று நவீன ஆய்வுகள் கூறுகின்றன. இது பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினில் உள்ள புகழ்பெற்ற குகை ஓவியங்களை விடவும் பழமையானது!

இங்குள்ள ஓவியங்களில் இரண்டு முக்கியமான விஷயங்கள் அதிகம் காணப்படுகின்றன.

கைத்தடங்கள் (Hand Stencils) மனிதர்கள் தங்களின் கைகளை பாறையின் மீது வைத்து, வாயால் அல்லது குழல் மூலம் வண்ணங்களைத் தெளித்து உருவாக்கிய கை அச்சுகள். ஒரு குறிப்பிட்ட இனக்குழு தங்களின் எல்லையை அல்லது தங்களின் பிராந்தியத்தை நிலைநாட்ட இதைப் பயன்படுத்தியிருக்கலாம்.

பழங்குடி மக்கள் பாறைச் சுவர்களைத் தங்களின் உலகிற்கும் ஆன்மீக உலகிற்கும் இடைப்பட்ட ஒரு நுழைவாயிலாகக் கருதினர். பாறையின் மீது கையை வைத்து வண்ணம் ஊதுவது, அந்தப் பாறையின் வழியே இயற்கையோடும் ஆவிகளோடும் தங்களை இணைத்துக் கொள்ளும் ஒரு சடங்காக இருந்திருக்கலாம்.

சுலாவேசி கைத்தடம்

உலகெங்கிலும் உள்ள சில பாறை ஓவியங்களில், இந்தக் கைக்குறிகள் விண்மீன் கூட்டங்களின் அமைப்புகளுக்கு *(Constellations)* அருகிலோ அல்லது குறிப்பிட்ட திசைகளை நோக்கியோ வரையப்பட்டுள்ளன. இவை காலமாற்றத்தைக் கணிக்கவோ அல்லது வழி செலுத்தலுக்கோ *(Navigation)* கூடப் பயன்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் ஆய்வுகள் நடந்து வருகின்றன.

ஆதிமனிதர்கள் வேட்டையாடும்போது, விலங்குகள் தப்பித்து விடக்கூடாது என்பதற்காகச் சத்தம் போடாமல் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியிருந்தது. அதற்கு அவர்கள் கைச்சமிக்ஞைகளை *(Sign Language)* பயன்படுத்தியிருக்கலாம். விலங்கு "இந்தத் திசையில் செல்கிறது," "ஆபத்து இருக்கிறது," "இங்கு தண்ணீர் உள்ளது" என்பது போன்ற தகவல்களை விரல்களை வெவ்வேறு விதமாக மடக்குவதன் மூலம் அவர்கள் தெரிவித்திருக்கலாம்.

குகைச் சுவர்களில் இப்படிப்பட்ட சமிக்ஞைகளைப் பதிவு செய்வது, அந்த சமூகத்தின் பிற உறுப்பினர்களுக்கு அல்லது அடுத்த தலைமுறைக்கு இந்த "இரகசிய மொழியைக்" கற்றுக் கொடுக்கும் ஒரு அடையாளமாக இருக்கலாம். ஃபிரான்ஸில் உள்ள 'கான்க்வெர்' (Conquer) மற்றும் 'கார்காஸ்' (Gargas) போன்ற குகைகளில் உள்ள நூற்றுக்கணக்கான கைத்தடங்களில் இப்படி விரல்கள் மடக்கப்பட்டு, வெவ்வேறு "முத்திரைகள்" போலக் காணப்படுகின்றன.

உலகின் மிகப் பழமையான கதை சொல்லும் ஓவியம்

சுமார் **51,200 ஆண்டுகள் பழமையானது** எனப் புதிய லேசர் தொழில்நுட்ப (LA-U-series) Laser-Ablation Uranium-Series Imaging ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது மனித வரலாற்றிலேயே ஒரு கதையை விவரிக்கும் விதமாக வரையப்பட்ட மிகப் பழமையான ஓவியமாகும். இந்த ஓவியங்களில் வரையப்பட்டிருப்பது சாதாரணப் பன்றி அல்ல; அந்தத் தீவிற்கே உரிய **"சுலவேசி மருக்கள் பன்றி" (Sus celebensis)** எனப்படும் காட்டுப் பன்றி வகையாகும். அதன் முகத்தில் இருக்கும் தனித்துவமான மருக்கள் (Warts) மற்றும் முதுகில் உள்ள அடர்ந்த முடிகள் போன்றவற்றை அந்தக்கால மனிதர்கள் மிகத்துல்லியமாக வரைந்துள்ளனர்.

இந்த 51,200 ஆண்டுகள் பழமையான ஓவியத்தில், ஒரு பெரிய காட்டுப்பன்றியைச் சுற்றி மூன்று மனித உருவங்கள் மனித-விலங்கு கலந்த உடலமைப்பு போன்ற தோற்றம் உடையவை - Therianthropes இருப்பது போல வரையப்பட்டுள்ளது. மனிதர்கள் கையில் குச்சிகளைப் போன்ற ஏதோ ஒரு பொருளை வைத்துள்ளனர். இது ஒரு வேட்டைக் காட்சியையோ அல்லது அந்த விலங்குடன் மனிதர்கள்தொடர்புகொள்வதையோ ஒரு கதையைப் போல விவரிக்கிறது.

இந்த ஓவியங்கள் அனைத்தும் **செம்மண் சாந்து (Red Ochre)** எனப்படும் இயற்கை கனிம நிறமிகளைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும் இந்த நிறம் அழியாமல் குகைப் பாறைகளில் அப்படியே நிலைத்து நிற்கிறது.

இது ஏன் இவ்வளவு முக்கியம்?

மனிதர்களுக்குக் கற்பனைத் திறனும், கலை உணர்வும் ஐரோப்பாவில் தான் முதலில் தோன்றியது என்று வரலாற்று அறிஞர்கள் நம்பினர். ஆனால், சுலாவேசி ஓவியங்களின் கண்டுபிடிப்பு, ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறிய ஆதிமனிதர்கள் ஆசியாவிற்கு வந்தபோதே மிகச்சிறந்த கலைஞர்களாகவும், சிந்தனையாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதை ஆதாரத்துடன் நிரூபித்துள்ளது.

இந்த ஓவியங்களின் வயதைக் கண்டறிய ரேடியோ கார்பன் முறையைப் பயன்படுத்த முடியாது (ஏனெனில் இதில் கரிமப் பொருட்கள் இல்லை). அதற்குப் பதிலாக, ஓவியங்களின் மேல் பலஆயிரம் ஆண்டுகளாகப் படிந்திருந்த சுண்ணாம்புப் பாறைப்படிவங்களை (Cave Popcorn) **யுரேனியம் தொடர் காலக்கணிப்பு முறைக்கு (Uranium-series dating)** உட்படுத்தி இதன் வயதை துல்லியமாகக் கண்டறிந்தனர்.

சுருக்கமாகச் சொன்னால், மனித நாகரிகத்தின் ஆதிப் புள்ளிகளில் ஒன்றை நமக்குக் காட்டும் காலப்பெட்டகம் இந்த சுலாவேசி குகை ஓவியங்கள்.

பிரான்சின் லஸ்கோ குகை *(Lascaux Cave)*

சுமார் 17,000 ஆண்டுகள் பழமையான இந்த குகையில் உள்ள ஓவியங்களை ஆய்வு செய்த விண்வெளி ஆராய்ச்சியாளர்கள், அங்கொரு மிகத் துல்லியமான நட்சத்திர வரைபடம் (Star Map) இருப்பதை உறுதி செய்துள்ளனர்.



உலகின் பழமையான விண்மீன் வரைபடம்

கார்த்திகை விண்மீன் கூட்டம் (Pleiades) இந்த குகையின் 'காளைகளின் கூடம்' (Hall of the Bulls) என்ற பகுதியில் ஒரு பெரிய காட்டெருதின்

(Taurus) ஓவியம் உள்ளது. அந்த எருதின் தோள்பட்டைக்குச் சற்று மேலே, துல்லியமாக ஆறு புள்ளிகள் வட்டமாக வரையப்பட்டுள்ளன. இது வானில் உள்ள 'கார்த்திகை விண்மீன் கூட்டத்தைக்' குறிப்பதாகும்.

கோடை கால முக்கோணமும் *(Summer Triangle)* அதே பகுதியில் வரையப்பட்டுள்ள ஒரு மனிதன் மற்றும் பறவையின் உருவங்களுக்கு அருகில் இருக்கும் புள்ளிகள், வானின் பிரகாசமான நட்சத்திரங்களான வேகா *(Vega)*, டெனெப் *(Deneb)* மற்றும் அல்தேர் *(Altair)* ஆகியவற்றை உள்ளடக்கிய 'கோடை கால முக்கோணத்தை' அப்படியே பிரதிபலிக்கின்றன.

புதுக்கோட்டையின் ஆளுருட்டி மலை

இவ்வளவு பிரம்மாண்டமான உலக நாகரிகங்களைப் பற்றியும், பல்லாயிரமாண்டுப் பழமை வாய்ந்த தொல்லியல் எச்சங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கும் போது, திடீர் என நம்ம புதுக்கோட்டைக்கு அருகில் இருக்கும் 'ஆளுருட்டிமலை'யைப் பற்றிப் பேசுகிறேனே என்று நினைக்க வேண்டாம்.

பிரான்சின் குகை ஓவியங்களுக்கும், இந்தோனேசியாவின் சுலாவேசி நாகரிகத்திற்கும் உலக அளவில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு—ஏன், அதை விடவும் ஒரு படி மேலாக—போற்றப்பட வேண்டிய உன்னதக் கலைப்பெட்டகம் நம்ம புதுக்கோட்டை ஆளுருட்டி மலைபாறை ஓவியங்கள்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்தத்தளம் இன்னும் முறையான புரிதல் இல்லாமலும், ஆய்வாளர்களின் போதிய கவனத்தைப் பெறாமலும் கால ஓட்டத்தில் மங்கி மறைந்து கொண்டிருப்பது உண்மையிலேயே வேதனைக்குரிய விஷயம். பல ஆய்வாளர்கள் இதைப் பற்றிப் பேசியும், எழுதியும் இருந்தாலும் கூட, இதற்கான உலகளாவிய அங்கீகாரமும் பொது மக்களிடையேயான விழிப்புணர்வும் இன்னும் போய்ச் சேரவில்லை என்பதே வேதனைக்குரியது.

பூமியின் **வடஅரைக் கோளத்தில்** *(Northern Hemisphere)* உள்ள அத்தனை விண்மீன் மண்டலங்களையும் *(Constellations)*, தங்களின் கூர்மையான வானியல் அறிவால் கணித்து, அதை அப்படியே பாறை ஓவியங்களாக இந்த மலையில் ஆதிக்குடிகள் வடித்து வைத்திருக்கிறார்கள். இது வெறும் ஓவியம் மட்டுமல்ல அன்றைய ஆதி மனிதரின் அசாத்தியமான பிரபஞ்ச அறிவையும், அவர்களின் உலகளாவிய கடல் வணிக

மேலாண்மைக்கு அடித்தளமாக அமைந்த வானியல் வழிகாட்டி திறனையும் பறைசாற்றும் அசைக்க முடியாத சான்றாகும் புதுக்கோட்டை மாவட்டம்.



வட அரைகோள விண்மீன் திரள்.

வானத்தின் வடக்கு அச்சை *(North Axis)* மையமாகக் கொண்டு, வடமுனை விண்மீனான போலாரிஸ் *(Polaris/* துருவநட்சத்திரம்*)* மிகத்துல்லியமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த போலாரிஸை முதன்மையாகக் கொண்டு, அதன் அருகிலுள்ள சப்த ரிஷி மண்டலம் *(Ursa Major),* விண்வெளியின் மிகப்பெரிய விண்மீன் கூட்டமான ட்ராகோ *(Draco),* வேடன் வடிவிலான ஓரியான் *(Orion)* மற்றும் பிரகாசமான சீரியஸ் *(Sirius), Auriga,* ரிஷபம் *(taurus, cetus)* ஆகிய அனைத்தும் அப்பட்டமாக, ஒரு முழுமையான வானியல் வரைபடமாக *(Ultimate Celestial Map)* இங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, வட அரைக் கோளத்தின் *(Northern Hemisphere)* நட்சத்திரத் தொகுதிகளை நம் முன்னோர்கள் கவனித்து, அப்படியே பாறைகளில் வரைந்து வைத்திருப்பது அவர்களின் உன்னதமான வானியல் அறிவுக்குச் சான்றாகும்.

பண்டைய காலத்தில் பௌத்தர்களுக்கும் சைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மதக்கிளர்ச்சிகள் மற்றும் ஆட்சிமாற்றங்களின் போது, பௌத்தத்துறவிகளும் முனிவர்களும் தங்களைக் காத்துக் கொள்ள இந்த ஆளுருட்டி மலையின் குகைகளிலும் பள்ளிகளிலும் தஞ்சம் புகுந்தனர். தொன்று தொட்டே ஆன்மீக மற்றும் அறிவியல் தொடர்பு கொண்ட இடமாக விளங்கிய இந்தமலை, பௌத்தம், சமணம் மற்றும் ஆசீவகம் போன்ற நெறிகளைச் சேர்ந்தவர்களின் புகலிடமாக மாறியது.

இயற்கையை ஆழமாக அறிந்த இத்துறவிகளின் வானியல் மற்றும் காற்றின் திசைகள் சார்ந்த பேராற்றலுக்குச் சான்றாக, இந்த மலைக்கு கைகள் காலம் காலமாக ஒரு *'வானியல் உற்றுநோக்கல் கூடமாக' (ancient observatory)* செயல்பட்டு வந்துள்ளது.

இருப்பினும், இந்தமலைக்கு ஒரு கொடூரமான வரலாற்றுப் பின்னணியும் உண்டு. மதகிளர்ச்சியின் உச்சகட்ட மோதலின் போது, இந்தமலையின் உச்சியில் தங்கியிருந்த பௌத்தத் துறவிகளை எதிரிகள் இங்கிருந்து கீழே உருட்டி விட்டுக் கொலை செய்ததாக

வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. ஆதி குடிகளின் உன்னதமான அறிவியல் களமாகவும், அதே வேளையில் பன்னெடுங்காலமாக பயன்பாட்டுத் தளமாக இருந்துள்ளது.

இங்கு சுந்தர பாண்டியர் கால கல்வெட்டு ஒன்று சமண, பௌத்த துறவிகளுக்கு இவ்விடத்தை பள்ளிச் சந்தமாக (வரியற்ற நிலமாக) வழங்கியது பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுப் பதிவு, இப்பகுதியில் பௌத்தர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் இருந்த மிக நெருங்கிய வரலாற்றுத் தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

புதுக்கோட்டை ஆளுருட்டி மலையில், வட அரைக்கோளத்தின் (Northern Hemisphere) துருவ நட்சத்திரம் (Polaris) வரை நீளும் 'வட அரைக்கோள விண்மீன் கூட்டங்கள் எவ்வாறு வரையப்பட்டுள்ளனவோ, அதே போலவே 'தென் அரைக்கோள' விண்மீன் அமைப்புகள் சுலாவேசியில் வரையப்பட்டிருப்பது தான் நாம் இங்கு உற்றுநோக்க வேண்டிய முக்கியப் புள்ளியாகும்.

சுலாவேசி (Sulawesi) பாறை ஓவியங்கள் வெறும் மனித வாழ்க்கையைத் தாண்டி, அவர் தம் இடப்பெயர்வுப் பயணத்தின் முதன்மையான மையப் புள்ளியாகத் திகழ்கின்றன.

இந்த ஓவியங்களின் சிறப்பு என்னவென்றால், இந்தோனேசிய வானில் இருந்து மட்டுமே காண சாத்தியமான தனித்துவமான வானியல் விண்மீன் வரைபடங்களை அவர்கள் அங்கு துல்லியமாக வரைந்து வைத்துள்ளனர்.

இப்பாறை ஓவியத்தில், விலங்கு ஒன்றின் மீது அமர்ந்திருக்கும் மனிதன் ஒருவன், தன் கையில் வளைந்த 'வளரி' போன்ற ஆயுதத்தை ஏந்திப் பறவை ஒன்றை வேட்டையாடுவது போன்ற காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

சுலாவேசி பாறை ஓவியங்கள்.

இவ்வளரி வடிவ ஆயுதம் தமிழ்நாடு மற்றும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களிடையே காணப்படும் பொதுவான பண்பாட்டுத் தொடர்பாகும்.

ஆய்வாளர்கள் தொடக்கத்தில் இப்பறவையைக் 'கோழி' என்றே குறிப்பிட்டுவந்தனர். கோழியை ஒரு மனிதன் வேட்டையாடுவது போன்ற ஓவியம் என்றும் விலங்குகளை பழக்கப்படுத்துவது போன்ற ஓவியம் என்றும் விவரித்து வந்தனர். ஆனால், நவீன லேசர்

பகுப்பாய்வுத் தொழில் நுட்பத்தின் *(Laser Tracing)* போது, அந்தப் பறவையின் பின்புறத்தில் விரல் முட்டுகளை மடக்கி வைக்கப்பட்ட மனிதக் கைஅச்சு *(Hand Stencil)* கண்டறியப்பட்டது. ஐந்து விரல்களின் இப்பதிவு பறவையின் தோகையைப் போல் காட்சியளிப்பதால், இது கோழியாக அல்லாமல் மயில் உருவமாக இருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. இப்பறவையின் இடப்பக்கமிருந்த சில ஓவியங்கள் காலப் போக்கில் அழிந்து போயுள்ளன.

மேலும் உற்று நோக்கினால், வேட்டையாடும் மனித உருவத்திற்குச் சற்று மேலே இரண்டு கூட்டல் *(+)* குறியீடுகள் காணப்படுகின்றன. ஒரு மனித உருவம் மிருகத்தின் மீது வளரி போன்ற ஆயுதம் இரண்டு கூட்டல் குறி ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி பார்க்கும் பொழுது இந்த கூட்டல் குறி.. ***Crux*** *(தென்னகச் சிலுவை / Southern Cross):* தென் அரைக்கோள மாலுமிகளுக்கு திசைகாட்ட உதவிய மிக முக்கியமான, மிகச் சிறிய விண்மீன் கூட்டம். சென்டாரஸ் விண்மீன் கூட்டத்திற்கு கீழே இது அமைந்திருக்கிறது. இது தென்துருவப் புள்ளிக்கு மிக அருகில் இருக்கும்.

இரண்டாவதாக ஒரு கூட்டல் குறியீடு. இது *Musca (முஸ்கா)* விண்மீன் மண்டலம். *Crux* சிலுவைக்குத் தெற்கே இருக்கும் ஒரு சிறிய விண்மீன் கூட்டம்.

இந்த மூன்று கூறுகளையும் மையப் புள்ளியாகக் கொண்டு ஆராயும்போது, இதுவொரு அரிய வானியல் வரைபடம் *(Star Map)* என்பது புலனாகிறது.

இங்குள்ள மயில் உருவம் 'பாவோ' (Pavo) விண்மீன் கூட்டத்தையும்,

விலங்கின் மேல் அமர்ந்து துரத்தும் மனிதன் 'தனுசு' (Sagittarius) விண்மீன் மண்டலத்தையும் குறிக்கின்றன.



அவன் கையில் உள்ள வளரி வடிவம் 'கொரோனா ஆஸ்ட்ராலிசிஸ்' (Corona Australis) விண்மீன் கூட்டத்தோடு கச்சிதமாகப் பொருந்துகிறது.

இது வெறும் வேட்டைச் சமூகத்தின் அன்றாடப் பதிவாக இருக்க வாய்ப்பில்லை, ஏனெனில், ஒரு சிறிய பறவையை வேட்டையாடத் தூர எறியும் வளரியைப் பயன்படுத்துவது சாத்தியக்கூறுகள் குறைவு. இதற்கு வலுசேர்க்கும் மற்றொரு சான்றாக, தனுசு மற்றும் பாவோ மண்டலங்களுக்கு மேலே காணப்படும் இருகூட்டல் குறிகள், தென் அரைக்கோளத்தின் அடையாளமான 'சதர்ன்கிராஸ்' எனப்படும் 'க்ரூக்ஸ்' (Crux) விண்மீன் கூட்டத்தைக் குறிக்கின்றன.

இதன் மூலம், நம் ஆதிமனிதர்கள் தென் அரைக்கோளத்து (Southern Hemisphere) விண்மீன் கூட்டங்களை மிகத்துல்லியமாகக் கவனித்து ஆவணப்படுத்தியுள்ளான் என்பது தெளிவாகிறது.

லேசர் ஆய்வின்படி, கோழி வடிவம் முதலில் வரையப்பட்ட காலமும், பிற்காலத்தில் அதன் மேல் கைஅச்சு மூலம் தோகை சேர்க்கப்பட்ட காலமும் வெவ்வேறானவை என்பது, தலைமுறைகள் கடந்தும் இந்த வானியல் குறியீடுகள் தொடரப்பட்டுள்ளதைக் காட்டும் மிக முக்கியமான புள்ளியாகும்."

இவ்வோவியத்தின் கீழ் பகுதியில், ஒரு மனித உருவம் தலைகீழான நிலையில் (inverted posture) வரையப்பட்டிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. அவ்வுருவத்தின் இரு கரங்களில், ஒரு கையில் ஆயுதம் போன்றதொரு பொருளும், மற்றொருகையில் ஒளியை உமிழும் அல்லது ஒரு குறிப்பிட்ட குறியீட்டைக் காட்டும் பொருளும் இடம் பெற்றுள்ளன. இந்தத் தனித்துவமான சித்தரிப்பு நவீன வானியலில் நாம் குறிப்பிடும் 'கும்ப விண்மீன் மண்டலத்தின்' (Aquarius Constellation) பண்டைய குறியீட்டுவடிவமே.

அக்கால மனிதர்கள் இந்த விண்மீன் கூட்டத்தைத் தலைகீழாக வரைந்திருப்பதன் மூலம், அவர்கள் தென்னரைக் கோளத்தின் *(Southern Hemisphere)* விண்வெளிப் பரப்பை முற்றிலுமாக, மிகத் துல்லியமாக கணித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

குறிப்பாக, நீண்டதூரக் கடல் பயணம் மேற்கொண்ட பண்டைய மாலுமிகளுக்கு, திசையறிவதற்கும் வழிகாட்டுதலுக்கும் தென்னரைக் கோளத்தின் விண்மீன் கூட்டங்கள் குறித்த ஆழமான அறிவு இருந்ததை இந்த பாறை ஓவியங்கள் ஆணித்தரமாக மெய்ப்பிக்கிறது.

தென் அரைகோள டச்சுகால ஓவியம்.

தெற்கு அரைக்கோளத்தின் *(Southern Hemisphere)* நட்சத்திர வரைபடத்தை உருவாக்கியவர்கள் டச்சு கடல் பயணிகளான **பீட்டர் டிர்க்ஸூன் கெய்சர்** *(Pieter Dirkszoon Keyser)* மற்றும் **பிரடெரிக் டி ஹவுட்மேன்** *(Frederick de Houtman). 1595-1597* ஆண்டுகளில் டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் முதல் கடல் பயணத்தின்போது பெட்ரஸ் பிளான்சியஸ் *(Petrus Plancius)* கொடுத்த வழிகாட்டுதலின்படி, அது வரை வரைபடமாக்கப்படாத தெற்கு வானத்தின் நட்சத்திரங்களை இவர்கள் ஆய்வு செய்து துல்லியமாகப் பதிவு செய்தனர். இந்தத் தரவுகளைக் கொண்டு பிளான்சியஸ் *1598*-ல் புதிய வானியல் குளோப்பை உருவாக்கினார்.

1603-ல் பிரடெரிக் டி ஹவுட்மேன் தனது நட்சத்திரப் பட்டியலை அதிகாரப் பூர்வமாக வெளியிட்டார்; இதில் டூக்கான் *(Toucan)*, மயில் *(Pavo)*, பறக்கும் மீன் *(Volans)* உள்ளிட்ட *12* புதிய விண்மீன் கூட்டங்கள் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பழங்குடி கதைகள் மூலமோ அந்நாட்டு மக்களின் கலாச்சாரத்திலோ இதன் படிமங்களை கண்டவர்கள் புதிதாக வெளியிட்டிருந்தாலும் பல ஆயிரம் ஆண்டுகள் முன்பே இவை பயன்பாட்டில் இருந்துள்ளது.

#பேரறிஞர்_அண்ணா

தாமும் ஓர் எழுத்தாளராக இருந்தாலும் மற்றைய எழுத்தாளர் பலரையும் வேடிக்கையாக ஆறு வகையினராகப் பாகுபடுத்திக் குறிப்பிட்டுள்ளார். அவை.....

1. தம் மனத்தில் தோன்றியதை எழுதி, யாருக்கு எது தேவையோ அதனை எடுத்துக் கொள்ளட்டும் என எழுதும **#அலைஎழுத்தாளர்கள்**

2. புராணக்கதை மூலம் கற்பனை கலந்து எழுதும் **#கலைஎழுத்தாளர்கள்.**

3. இவ்வளவு பணம் கொடுத்தால் இப்படி எழுதுவேன் என ஊதியத்திற்கு ஏற்றவாறு எழுதும் **#விலைஎழுத்தாளர்கள்.**

4. ஒருநாள் எழுதாவிட்டாலும் ஊதியம் கிடைக்காது. வீட்டில் உலை கொதிக்காதே என வருந்தும் **#உலைஎழுத்தாளர்கள்.**

5. அழகிய நடையில் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து ஆதாயம் தேடும் **#வலைஎழுத்தாளர்கள்.**

6. உண்மை நிலையில் நின்று எழுதும் **#நிலைஎழுத்தாளர்கள்**.

எழுத்தால் பேச்சால் மக்களைக் கவர்ந்த பேரறிஞர் அண்ணா இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மனிதராக விளங்கினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தார். அவரால் தமிழ் மொழியின் நிலை உயர்ந்தது. தமிழ் இனத்தின் தலை நிமிர்ந்தது.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கொண்டு வாழ்நாள் முழுவதும் உழைத்தார்.

மருத நில நெல் வேளாண்மைக் கலைச்சொற்கள்

பொதிகை குடும்பன் சண்முகக்குமார்.
வெல்லம், தென்காசி

1. நாளேரிடுதல் = நல்ல நாளில் முதன் முதலில் ஏர்பூட்டி உழவு தொடங்குவது நாளேரிடுதல் எனப்படும்.
2. அணைகட்டி = வயலை உழும்போது ஏர்கலப்பையின் இருபுறமும் வந்து விழும் சிறிய மண்கட்டிகள்
3. இரும்புக் கலப்பை = களிமண் நிலத்தில் உழுவதற்குப் பயன்படும் கூரிய கொழுவுடைய இரும்புக்கலப்பை
4. உழவுப்பூட்டு = உழவின் போது மாட்டை நுகத்தடியில் இணைக்கப் பயன்படும் கயிறு
5. ஏர்க்காத்தாடி = கலப்பையை நுகத்தடியின் மையத்தில் இணைக்கும் மூங்கில்கழி
6. ஏடு = மாடு பூட்டப்பட்டுள்ள ஏர்க்கலப்பை, உழும்நிலையில் இருப்பது.
7. ஏற்றம் இறைத்தல் = வயலுக்கு நீர்பாய்ச்சுவதற்குப் பயன்படும் கருவியால் நீர் இறைத்தல்.
8. கட்டைக்கலப்பை = மரக்கட்டையால் செய்யப்பட்ட தடிமனான கலப்பை
9. கங்கு புரட்டியடித்தல் = கதிரில் உள்ள நெல் முழுவதும் உதிர்வதற்க்கு சாய்த்து அடித்தல்.
10. கடுத்தேர் = உழும்போது முதலில் வரும் ஏருக்குப் பின்னால் வரும் ஏர்.
11. குறுக்குச்சால் = வயலைகுறுக்காக/ அகலப்பக்கமாக உழுதல்.
12. குடங்கை =கைகளை அகலவிரித்து நெஞ்சோடு சேர்த்து அள்ளும் வைக்கோலின் அளவு.
13. கொல்லைக் கலப்பை = புன்செய் நிலத்தை உழுவதற்குரிய உறுதியான கலப்பை.

14. *தலைக்கயிறு = மாட்டை திசைதிருப்ப கழுத்தில் கட்டப்படும் நீளக்கயிறு.*
15. *தார்க்குச்சி= மாடுகளை ஓட்டுவதற்குப் பயன்படுகின்ற நுனியில் ஆணியுள்ள மூங்கில் குச்சி.*
16. *தாளில்லாமல் உதறுதல் = கதிரடித்த பின்பு வைக்கோலை நன்றாக உதறுதல்.*
17. *தூற்றுதல் = காற்றில் நெல்லின் தூசிகளைப் போக்குதல்.*
18. *நல்லேர் பூட்டுதல் = உழவு தொடங்குவதற்கு முன் நல்லநாள் பார்த்து ஏர் பூட்டுதல்.*
19. *நுகத்தடி = வண்டியின் முன்பகுதியில் மாட்டைப் பூட்டும் தடித்த கட்டை.*
20. *நோம்புதல் = நெல், பயிறு முதலியவற்றிலுள்ள சிறுகற்களை முறத்தினால் அரித்தல்.*
21. *படி = தானியத்தை அளக்கும் சிறு முகத்தல் அளவைக் கருவி.*
22. *படுகைக்கயிறு = வைக்கோல் தாள்களினால் கையில் திரிக்கப்படும் கயிறு.*
23. *புடைத்தல் = தானியங்களின் தூசுகளை முறத்தினால் நீக்குதல்.*
24. *மேழி = கலப்பையின் உச்சிக்கைப் பிடிப்பகுதி.*
25. *வடக்கயிறு = தடித்த நீண்ட உறுதியான கயிறு.*
26. *சூடுஅடித்தல் = வைக்கோலுடன் உதிராமல் இருக்கும் நெல்லை உதிரச் செய்வதற்காக நெல் அறுத்த மறுநாள் மாடுகளின் துணையுடன் வைக்கோலை நன்கு மிதிக்கச்செய்து நெல்லைச் சேகரிப்பது. இதனைச் சூடுமிதித்தல் என்றும் சொல்வார்கள்.வைக்கோல் போரடித்தல் என்றும் சொல்வார்கள்.*

"மாடுகட்டி போரடித்தால் மாளாது செந்நெல் லென்று
யானைகட்டி போரடித்த அழகான தென்மதுரை"

என்று இதனை நாட்டுப் புறப்பாடல் குறிப்பிடுகின்றது

27. *அம்பாரம் = களத்தில் தூற்றிய நெல்லைக் குவித்து வைத்திருப்பது.*
28. *அலகுகதிர் = நெல்வயலில் முதலில் கிழக்குத் திசையில் அறுக்கப்பட்ட கதிரை நாள்கதிர் என்பர். அவற்றில் இறைவனுக்குப் படைக்கப்படும் கதிரை அலகுகதிர் என்பர்.*
29. *அடிராசி = நெல்களத்தில் நெல் அளக்கும்போது களத்தில் தரையுடன் எஞ்சியிருக்கும் தானியங்கள். இது அடிராசி எனப்படும். இதனைக் களம் கூட்டுபவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.*

30. அரி = அரிந்து போடப்பட்ட கதிர் தாள்கள்.
31. அரிமதிக் கோல் = நெல்கட்டை அவிழ்த்து கைக்கொண்ட அளவாக அடித்தபின்பு அதில் தங்கியிருக்கும் நெல்லை உதிரும்படி தடியால் அடித்தல். இந்ததடி அரிமதிக் கோல் எனப்படும்.
32. இராச வெள்ளாமை = நெல் வேளாண்மையையே இராச வேளாண்மை என்று சொல்வது வழக்கு.
33. இறைக்குடை = நீர் இறைக்க மூங்கில் நாரால் பின்னப்பட்ட கூடை.
34. இறைப்பொட்டி = நீர் இறைக்க இரும்பால் செய்யப்பட்ட பெட்டி.

35. உருளைக்கட்டை = சாலுடன் இணைக்கப்பட்ட தோலும், வால்கயிறும் உருண்டு செல்ல பயன்படும். இது மரத்தால் ஆனகருவி. உருளை வடிவத்தில் இருப்பதால் இதற்கு உருளைக்கட்டை என்று பெயர்.
36. ஊடுசால் = புஞ்சை வேளாண்மையின் இடையில் துவரை, தட்டப்பயிறு, மொச்சை, போன்ற பயிறு வகைகளைப் போடுதல் ஊடுசால் ஆகும். அதாவது ஊடுபயிராக போடுதல் ஊடுசால் ஆகும்.
37. ஊற்றாணி = கலப்பையை ஏர்க்காலில் சேர்க்கும் இடத்தில் பதிக்கும் மரத்தாலான ஆணி.
38. எருக்கூடை = நிலத்தில் எருவைக் கொட்டி பரப்புவதற்குப் பயன்படும் கூடை.
39. கமலை = நீர் இறைக்கப் பயன்படும் கமலை வண்டி, சால், உருளைக்கட்டை இவைகளை கிணற்றினுள் செலுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒருவகை தொழில்நுட்பம். இது பெரும்பாலும் மரத்தால் செய்யப்பட்டிருக்கும்.
40. கமலை வண்டி = கமலையின் மேல் பொருத்தப்பட்ட ஒருவகை சக்கரம் போன்ற அமைப்பு. இது பெரும்பாலும் மரத்தால் அமைக்கப்பட்டிருக்கும். இதன் மேல் வடகயிறு உருண்டு செல்லும்படியாக அமைக்கப்பட்டிருக்கும்.
41. கங்களவு = நெல் நடவுக்கு பின் ஒருநாள் விட்டு ஒருநாள் நீர்பாய்ச்சுதல் கங்களவு ஆகும். இவ்வாறு செய்வதால் நெற்பயிர் நீரில் அழுகாமல் வேர்பிடித்து வளரும்.
42. கால உழவு = ஆடி மாதத்தில் உழும் உழவை கால உழவு என்பர்.

43. கிடைவைத்தல் = வேளாண் நிலங்களில் ஆடுமாடுகளைப் பட்டியில் அடைத்து வைப்பது.
44. கீழ் உரம் = இலை, தழை, சாணம், குப்பைகள் போன்றவை கீழ் உரங்கள் ஆகும்.
45. கீழ் நோக்குநாள் = மண்ணுக்குக் கீழே விளைகின்ற கிழங்கு, கடலைப் பயிர்களை பயிரிடும் நல்ல நாள்.
46. கிடைக்கல்லு = காலில் இருந்து வரும் தண்ணீர் கொட்டுவதற்காக அமைக்கப்படும் கல்லாகும்.
47. கோடை உழவு = சித்திரை மாதம் பெய்கின்ற மழையில் நிலத்தை உழவு செய்து தயார்ப்படுத்துதல் கோடை உழவு எனப்படும்.
48. கோட்டை கொண்டு போதல் = நெற்கதிர்களை இறைவனுக்கு படைப்பதற்காக வைக்கோல் பிரிக்குள் நெல்லை கொட்டி பிரியை முறுக்கி மூடி கோயிலுக்குத் தலைமீது சுமந்து எடுத்துச்செல்லுதல். இதனைத் திருநாள் கதிர் என்றும் அழைப்பதுண்டு.
49. கொழுவாணி = கலப்பை முனையில் கொழுவை வைத்துத் தைத்திருக்கும் ஆணி.
50. களை வெட்டி = சிறிய மண்வெட்டி.

51. கொத்துக்காரர் = நெல் அறுவடை செய்யும் ஆட்களைத் திரட்டுபவர்.
52. கொத்து = அறுவடை முடிந்தபின்பு வேலையாட்களுக்கு கிடைக்கும் நெல்ஊதியம்.

53. கலப்பையின் அடியில் பொருத்தப்பட்ட இரும்புக் கருவி.

54. பரம்படித்தல் = நெல் வயலில் நடுகைக்கு முன்பு பரம்பு என்ற ஒருவகை நிலமட்டப் பலகையால் வயலைச் சமப்படுத்துதல். இது பரம்படித்தல் என்று அழைக்கப்படுகிறது.

55. நெற்களம் = வயலில் அறுவடை செய்த நெற்கதிர்களை ஓரிடத்தில் கொண்டு சேர்க்கும் பகுதி.

56. வைக்கோல் படப்பு = வைக்கோலைப் போராக சேமித்து வைத்திருக்கும் முறை ஆகும். இது வைக்கோல் போர் என்றும்அழைக்கப்படும்.

57. பண்ணரிவாள் = நெல் மற்றும் புல் அறுக்க மட்டுமே பயன்படும் அரிவாளாகும். இதனை கருக்கருவாள் என்றும் கதிர் அருவாள் என்றும் சொல்வர். பண்ணை என்றால் மருதநில நெல்வயல் ஆகும். இதன் அடிப்படையிலேயே இச்சொல் வழக்கிலிருக்கின்றது.

58. மடைக்காவலர் = ஏரி, குளங்களின் மடைக்காவலர். இவரை நீராணிக்கர், மடைக்குடும்பர் என்றும்அழைப்பதுண்டு.

59. பால்கதிர் = நெல்கதிர் முற்றத் தொடங்குவதற்கு முன் உள்ளநிலை.

60. பாத்திகட்டுதல் = நெல் வேளாண்மை தவிர்த்து பிற வேளாண்மையில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஏற்படுத்தப்படும் நில அமைப்பு பாத்தி எனப்படும்.

61. பிள்ளை அரி = நெல் அறுவடைக்கு வரும் பெண்கள் குழந்தையோடு வந்தால் அக்குழந்தைக்கு என ஒரு கட்டு நெல்கதிர் கட்டிக் கொள்வார்கள். இது பிள்ளை அரியாகும்.

62. பிணையல்பூட்டுதல் = சூடு அடிப்பதற்காக மாடுகளை ஒன்றுடன் ஒன்று இணைத்துக்கட்டுதல் ஆகும். ஒவ்வொரு மாட்டின் கழுத்திலும் கயிறால் இணைத்துக் கட்டுதல் பிணையல் எனப்படும்.

63. பூட்டாங்கயிறு = நுகத்தோடு மாடுகளை ஏரில் பிணைக்கும் இரண்டு கயிறுகள்.

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார். **இராம இளங்கோவன்,**
பொருளாளர்,
பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்.

பாடம்: 42.
சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா *என்பது சில தாழிசைகள் பயின்று வருவதால* ***(சில + தாழிசை = சிஃறாழிசை)*** *இப் பெயர் பெற்றது. தாழிசை என்று இப்பாடல் பெயர் பெற்றிருந்த போதும் பாடலின் தொடக்கத்தில் நான்கடித் தரவும் வரும். முதலில் அளவடிக் கொண்ட காய்ச்சீர்களைப் பெற்று தரவு வரும். பின்னர் ஒரு தனிச்சொல் வரும். அடுத்து, மூன்றடித் தாழிசை இரண்டு வரும்.*

மீண்டும் தனிச்சொல் பெற்று வரும். அடுத்தொரு தாழிசை வரும். தொடர்ந்து தனிச்சொல் பெற்று வரும். பாடலின் இறுதியில் ஏழடிக் கொண்ட ஆசிரியச் சுரிதகம் வந்து பாடல் நிறைவுறும். ஆசிரியச் சுரிதகத்தின் ஈற்றயலடி சிந்தடியாக முச்சீர் பெற்று, ஈற்றடியில் ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும். ஆசிரியச் சுரிதகத்தைத் தவிர்த்து மற்ற தரவு, தாழிசைகளின் சீர்கள் இயற்சீர் காய்ச்சீர்கள் பயின்று வரும்.

இப்பாடலில் இடையிடையே தனிச்சொல் பெற்று வந்ததால் இது ***சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா*** *ஆயிற்று. தனிச் சொற்கள் பயின்று வரவில்லையெனில் இது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாக மாறிவிடும். தரவை விட சுரிதகம் மிகுந்த அடிகள் பெற்று வந்ததால* ***சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா*** *ஆயிற்று. தரவோடு சுரிதகம் ஒத்து வந்தால் அது ஒத்தாழிசைக் கலிப்பாவாக மாறிவிடும். தரவு, சுரிதகத்தில் இரண்டடிக்கோர் எதுகைப் பெற்று, தாழிசைகள் மூன்றடிக்கோர் எதுகைப் பெற்று வரும். எல்லாப் பாடல்களின் ஒவ்வோரடியிலும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமையும்.*

கீழே சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவில் ஒரு எடுத்துக் காட்டுப் பாடல் காண்போம்:

முடியாதது எதுவுமில்லை முயன்றேதான் முன்னேறு!
(சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா)

நான்கடித் தரவு:
என்னாலே இதுவுந்தான் இயலாமல் போகுமென்றே
தன்னையுமே எண்ணாமல் தகுந்ததொரு வகையினிலே
இன்பமான முடிவெடுத்தே எளியதாக அடைந்திடவே
என்றென்றும் பயணத்தை ஏற்பதுதான் அரும்பயனே!

தனிச்சொல்: *இஃதுணர்ந்து,*

மூன்றடித் தாழிசை:1.

முயற்சியுங் கொண்டுமே முன்னேறும் பறவையாய்
அயற்சியு மின்றியேதான் அன்றாடம் பாடுபட
வியப்புறும் வகையினிலே விரைந்துநாளும் உயர்கவே!

மூன்றடித் தாழிசை:2.

ஆற்றினிலே துள்ளுகின்ற அயிரமீனாய்த் துடிப்புடனே
ஊற்றுமது பெருக்கெடுக்கும் உவகையுடன் பேராற்றல்
ஏற்றுமேதான் முன்னேற ஏதுவாழ்வில் இன்னலுமே!

தனிச்சொல்: *அதனால்,*

மூன்றடித் தாழிசை:3.

உலைகொதிக்கத் துள்ளுகிற உணவாகும் அரிசியாக
அலையாடும் நீரினிலே ஆற்றலுடன் மீன்கொத்தும்

கலைகொண்ட மீன்கொத்திக் கள்வரென உலகிலுண்டே!

தனிச்சொல்: *இஃதறிந்து,*

ஏழடி ஆசிரியச் சுரிதகம்:

சீர்கள் நடந்தால் சீராய்ப் பாட்டும்,
ஏர்தான் நடந்தால் என்றும் உணவும்,
நூலும் நடந்தால் நூலா டையும்,
பாலும் நடந்தால் பாங்காய் நெய்யும்,
எண்கள் நடந்தால் எண்கள் கூடும்;
கண்கள் நடந்தால் காட்சியே;
கால்கள் நடக்க கனிந்துழை உயர்வே!

சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா *என்னும் பா வகையின் யாப்பிலக்கணத்துடன் எடுத்துக் காட்டுப் பாடலும் பயின்று அறிந்தோம். அடுத்த பாடத்தில்* ***பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா*** *பா வகையின் யாப்பிலக்கணமும் எடுத்துக் காட்டுப் பாடல்களும் பயின்று பயிற்சி எடுப்போம்.*

- *யாப்பிலக்கணம் வளரும்.*
- *நெருப்பலையார்.* ***இராம இளங்கோவன், பொருளாளர்,*** *பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்.*
- *18.06.2026.*

தமிழ்ப்புலவர் சரித்திரம்
சி .வை .தாமோதரம் பிள்ளை

பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி)

புது நாற்றாண்டு பிறந்து யாவும் இனிது செல்லும் என்றெண்ணி எதிர்பார்த்து நின்ற நந்தந் தமிழுலகம் பெரிதும் துன்புறத்தக்கதோர் நிகழ்ச்சி கேட்டு நடுநடுங்குகின்றது. அந்தோ ! புது நூற்றாண்டு பிறந்த அற்றை ஞான்றே செந்தமிழுலகிற் செம்மை சான்று விளங்கிய எமது றாவ்பஹதூர் - சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவபிரான் றிருவடி நீழலிற் சென்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை!!

தமிழ்ப்புலவ ரில்லங்களிற் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்து தவித்த செந்தமிழணங்கு நல்லாடையுடுத்தத் தெலுங்கு, கன்னடமாகிய பாங்கிமாரோடு அச்சுவாகனமேறி நாடெங்கும் உலாவருமாறு செய்தற்கட் பேரூக்கமெடுத்து உழைத்து நின்ற நம் பிள்ளையவர்கள் காலஞ் சென்றன ரென்பதுணர்ந்த யாவரே தமது அவல மெய்ப்பாட்டினை யடக்க வல்லார்? அவ்வாறாக யாம் எமது துன்பத்தை யடக்கப் புகுதலெவன்? மனத்தின்கணுள்ள துக்கம் வாய்விடுத்துக் கூறுமிடத்துச் சிறிது தணியுமன்றே. அங்ஙனங் கூறுதற்கட் குறை நிகழுமாயினும் உலகம் எம்மைப் பொறுக்க.

வாழ்க்கை :

நமது தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தூர் - வைரவநாத பிள்ளையவர்களது குமாரர். இவர் கி. பி. 1832 - ஆம் வருடம் பிறந்தனர். ஆண்டுள்ள யாழ்ப்பாணத்துக் கல்லூரியில் ஆங்கிலமும்; சுன்னாகம் முத்துக்குமாரசுவாமி பிள்ளையவர்களிடம் தமிழ்க்கலையும் பயின்றனர். 1852- ஆம் வருடம் அக்கல்லூரியினின்றும் பரீட்சையிற்றேறிப் பட்டம் பெற்று வெளிப் போந்தனர். பின்னர்க் கோப்பாயிலுள்ளதோர் கல்விச் சாலையிற் போதகாசிரியராய் அமர்ந்தனர். அக்காலத்துச் சென்னையில் விளங்கிய பெர்ஸிவல் துரையவர்களால் அழைக்கப்பட்டுச் சென்னைக்குப்

போந்து தினவர்த்தமானி யென்றதோர் தமிழ்ப் பத்திரிகையை நாடோறும் பதிப்பித்து வந்தனர். அங்ஙனம் பதிப்பித்தற்கண் நமது பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ் நூற்பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்க புகழ் விளைத் தன. இஃதுணர்ந்த துரைத்தனத்தார் பிள்ளையவர்களை இராசதானிக் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராய் அமரும்படி வேண்டிக்கொண்டனர்.



அங்ஙனம் அக்கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தி வருபவர் 1857-ஆம் வருஷத்து முதன் முதலில் ஏற்பட்ட சென்னைச் சர்வ கலாசாலைப் பிரவேச பரீட்சையில் தேறினார். பின்னர் அவ்வாறு தேறி நான்கு திங்கள் கழியுமுன், 1858- ஆம் வருடத்தில் நிகழ்ந்த பி. ஏ. பட்டப் பரீட்சையிலுந்தேறினார். எனவே நமது தமோதரம் பிள்ளையவர்கள் சென்னைச் சர்வகலாசாலையில் முதலிற் பி. ஏ. பட் டம் பெற்ற இருவருள் ஒருவராவர், பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக்கோட்டைக் கல்விச் சாலையில் உதவி உபாத்தியாயரா யனுப் பப்பட்டனர்

. ஆண்டிருந்து சென்னைக் கோட்டையில் உயரியதோர் உத்தி யோகத்தி லமர்ந்து பல துரைகளாலும் தமது வாய்மை, நேர்மை, மேற்கொண்ட கடமை தவறாமை ஆகிய நற்குணங்கள் காரணமாகப் புகழப் பெற்று விளங்கி, 1882-ஆம் வருடம் உபகாரச் சம்பளம் பெற்று வேலையி னீங்கினார். இடையில் இவர் கோட்டையில் வேலையிலமர்ந்திருக்கும் போழ்தே 1871 - ஆம் வருடம் பி. எல். பரீட்சையிலுந் தேறியிருந்தனர்.

ஆகவே தாம் வேலையினீங்கினவுடனே 1884-ஆம் வருடம் குடந்தையம்பதியில் நியாயவக்தரவாய் அமர்ந்தனர். அதன்மேற் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் நியாயாதிபதியாயிருந்து உலகிற்கு நன்மை செய்வாராயினர். அக்காலத்தில் அவர்க்கு மகப்பிரிவு நேரிட்டமையின் வேலையை விடுத்துச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

தமிழ்நூற் பதிப்பு :

இது நிற்க. குடந்தையிலிருந்த பொழுது அச்சிடப்படாத பல அருமையான தமிழ் நூல்களைப் பனையோலைச் சுவடிகளைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினர். அவ்வாறு அவர் பதிப்பித்த நால்களுட் பெரும்பாலன சாமானிய சனங்கள் பயிலாதனவும் அதிகமாய் விலைப்படாதனவுமாகிய இலக்கண நூல்களாம். தமிழின் மீது ஆர்வம்மிகுந்த இற்றை ஞான்றிலும் அவைகள் பெரிதுங் கவனிக்கப்படுகின் றிலவாமாக அங்காட்களில் அவை விலைப்பட்டில என்பதோர் ஆச்சரியமன்று. அன்னணம் அவர் பிரசுரித்த இலக்கண நூல்கள் தொல்காப்பிய நச்சினார்க்கினியம், தொல்காப்பியச் சேனாவரையம், வீரசோழியம், இறையனாரகப் பொருளுரை, இலக்கண விளக்கவுரை என்பனவாம். சங்க நூல்களில் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய கலித்தொகையும் இவர் பதிப்பித்ததே. பின்னர்த் தமிழிலக்கியங்களுட் பெரிதும் திரிசொற்களான் யாக்கப்பட்ட தணிகைப்புராணமும் சிறு காப்பியங்களுள் ஒவ்றெனக் கருதப்படும் சூளாமணியும் பிள்ளையவர்கள் முயற்சியால் வெளிப்போந்தன. இவை தம்முட் பல பகுதிகள் பிரதம கலாபரீட்சைக்கும், பி ஏ., எம். ஏ., பரீட்சைகட்கும், அவ்வக் காலங்களிற் பாடங்களாய் ஏற்படுத்தப்பட்டன. இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச் செய்யுட் பழக்கத்தினையும், நுணுகியுணருங் கூரிய மதியினையும், ஆராய்ச்சி வன்மையினை பெரிதும் புலப்படுத்துகின்றன. அவ்வந் நூல்களின் பதிப்புரைக்கட் பல அரிய பெரிய விடயங்களைச் சிக்கறவாராய்ந்து தெள்ளிதிற் றெரித்தாளர்.



இவர் தமது இறுதிக்காலத்தில் எட்டுத் தொகையு ளொன்றாகிய அகநானூற்றினைப் பரிசோதித்து வந்தனர். ஐயகோ ! அகப்பாட்டு அகப்பாட்டாகவே நின்றது.

புலவர் மதிப்பு :

இவ்வாறு மிகப் பெருமை வாய்ந்த நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தமை காரணமாக இவர்க்குப் புகழ் மிகுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களிடத்து மிக்க நன்கு மதிக்கற்பாடுற்றனர். பற்பல நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும் இவரைச் சலஞ்சலத்தைச் சூழும் வலம்புரியெனச் சூழ்வாராயினர்.



பரீட்சிக்குந் திறமை :

இத்தகைய புலவர் பெருமானது ஆற்றலும் நல்லொழுக்கமுங்கண்டு சென்னைச் சர்வகலாசாலையார் இவரைப் பரீட்சைக் கர்த்தராகப் பல்லாண்டுகளில் நியமித்தனர். இவர் அங்ஙனம் அத்தொழில் புரியுமிடத்துத் தமக்கியல்பாயுள்ள நேர்மையும் மாணவரிடத்து இரக்கமுங் காட்டியே வந்தனர். சென்னைச் சர்வ கலா சாலையில் தமிழ்ப் பரீட்சைக் கர்த்தர்களாயிருந்த கனவான்களெவரும் இவரது கல்விக்கு ஈடாலாரல்லர். இவர் பரீட்சை வினாக்களெல்லாம் மாணாக்கரது நுட்பமதியினைப் புலப்படுத்துவனவாம். மாணாக்கர் இயல்பறிந்தும் வகுப்பின் தரமறிந்தும் குறித்த காலவளவறிந்தும் வினாப்பத்திரிகை கொடுக்கும் பரீட்சாதிகாரியை யிழந்த தமிழ் மாணாக்கரின் துரதிர்ஷடத்தை யென்னென்பேம்! இத்துணை நலம் வாய்ந்த இவர் நம் சென்னைச் சர்வகலாசாலை யலயுவிகளுள் ஒருவராகவும் மிருந்தனர்.

நூலாசிரியத் தன்மை :

பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் போகத் தாமே புனைந்தியற்றியன கட்டளைக் கலித்துறை யென்னுமோர் இலக்கண நூலும், வசன சூளாமணி யென்னுமோர் உரைநடை நூலும், சைவமகத்துவ போதம் என்னுமொரு சைவசமய நூலும், ஆறாம் வாசக புத்தகம், ஏழாம் வாசக புத்தகம் என்னும் கல்வி யறிவிற்றேரும் இளஞ்சிறார்க்கென வகுத்த வசன நூல்களும் பிறவுமாம். இவரது உரைநடை செந்தமிழ்த் திரிசொற்கள் மலிந்து சொல்லடுக்கும் பத சாலங்களும் இயைந்து கட்டுரைச் சுவைநயங்காட்டி இயல்வது. இவ்வியல்பு பற்றி யன்றே இவர்தம் வசவ சூளாமணி பிரதமகலா பரீட்சைப் பாடமாயேற்பட்ட தூஉ மென்க.

ஒழுக்கம் :

இவரால் ஆதரிக்கப்பட்டோரும் இவர்க்கு நண்பராய் நண்ணினோரும் பலதிறத்தினர். தென்னாடெங்கும் இவரை யறியாதார் எவருமில்லை. இவர் உண்மைதோன்ற வாதஞ் செய்வுழித் தமது நண்பர்களுக்காகச் சார்ந்து பேசியும் பிறருக்காக விலகிப் பேசியும் ஒழுகுறு மியல்புடைய சில போலி மாக்கள் போலாது எப்பொழுதும் நடுவு நிலைமை குன்றாதவாறு நடந்து வந்த நற்றமிழாளர். தவறுநர் நண்பரேயாயினும் நொதுமலரே யாயினும் அவரை நல்லறி வூட்டித் தெருட்டுவார் இவர். நம் பிள்ளையவர்களும் திவான் பஹதூர் வி. கிருஷ்ணமா சாரியரவர்களும் நண்பர்களே யாயினும் மாறுபட்ட இடங்கள் பலவுள. இன்னும் இவர் தற்காலத்துப் பிறர் வன்மை கண்டு அழுக்காறடையும் புன்மக்கள் போலாது பிறரது பேராற்றல் கண்டுழி யெல்லாம் அன்னாரை வியந்தும் ஆதரித்தும் பரிசிலளித்தும் போற்றியும் கொண்டாடியும் ஒழுகி வந்தவர். அந்தோ! இத்தகைய அன்புடைப யண்ணலை இழந்த தமிழ் வாணர் பெரிதும் கறவையிற் பிரிந்த கன்றெனக் கையற்று அயர்வார்கள் என்பதொருதலை.

பட்டப் பேறு :

நமது சென்னைத் துரைத்தனத்தார் எப்பொழுதும் யோக்கியதை கண்டுழி யெல்லாம் கவனித்துத் தக்க பட்டமளித்து வருபவராதலின் நமது தாமோதரம் பிள்ளையவர்கட்கும் றாவ்பகதூர் என்ற பட்டத்தினை 1895-ஆம் வருடத் தில்அளித்தார்கள்;

அஃதன்றியும் தமக்குத் தமிழ் மொழியின் கண் ஐயப்பாடு நேர்ந்துழி யெல்லாம் அவரிடங் கேட்டும் தெளிந்தனர். இவ்வாறு இவர் துரைத்தனத்தார்க்கே யன்றிப் பிறர்க்கும் நிகழ்ந்த ஐயங்களையும் அறுத்தனர். என்வே, இவர் வாய்மொழி பலர்க்கும் மேற்கோளாயின.

இறுதிக் காலம் :

இவரது தேக சௌக்கியம் 1888-ஆம் வருஷம் நிகழ்ந்த புத்திர சோகங் காரணமாகச் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டு இறுதியிற் சென்ற ஆறு மாதமாக மார்பு நோய் கண்டு வைத்திய நூல் வல்ல பலருதவி செய்துஞ் செவ்வைப்படாது போயிற்று. ஆகவே நற்குணமும் நேரிய வாழ்க்கையு முடைய வரும், செந்தமிழ்ப் புலவரும், பல தமிழ் நூற் பதிப்பாசிரியரும் சென்னைச் சர்வ கலாசாலைப் பல்லாட்டைப் பரீட்சைக் கர்த்தரும், தமிழ் வள்ளலாரும், சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுளொருவரும், நமது ஞானபோதினிப் பத்திரிகைக்குப் பேராதாரவா யிருந்தவரும், பாவலர் நண்பரும், எம்மீது ஆர்வ முடையாரும், எம்மைத் திராவிட சாஸ்திரி யென்றழைப்பாரும் ஆகிய நமது தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலகினின்றும் நீங்கினார். இத்தகைய புலவர் கோமான் இறந்துபட்டார் என்பது தெரிந்த தமிழர் குழாம் இரங்குமாறு இற்றென எம்மாற் புனைதலியலாது. இவர் இறந்துபாடு தமிழுலகஞ் செய்த பாவமோ தேவர் தந்நயம்பற்றிச் செய்த கொடுமாயமோ? அறியேம்.

இனிக் காட்டகத்து மலர்ந்து மனிதர்க்கு இன்பம் பயவாது தாமே யழியும் மலர்கள் போலப் பல தமிழ் வித்துவான்கள் உலகில் வெளிப்போதராது காலஞ் சென்றனர்; அன்னார் கதி மிகவும் மிரங்கத்தக்கதே.

இவ்வாறன்றி நமது தாமோதரம் பிள்ளை யவர்கள் பல நூல்கள் அச்சிட்டும் சில நூல்களியற்றியும் பலரோடளவளாவியு மிருந்து காலஞ் சென்றமையின் இவர் இறந்தும் இறவாதவரே யென்பது யாவரு முணர்ந்ததே.

காமோ தி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
னாமோ து செந்தமிழி னன் னூல் பலதொ குத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்.

நூல் தலைப்பு *: தமிழ்ப்புலவர் சரித்திரம்*
ஆசிரியர் : *பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி)*

சுதந்திரத்தின் கனவிலிருந்து உலகளாவிய செல்வாக்கு வரை –

250 ஆண்டு அமெரிக்காவின் வரலாறு

முனைவர் தேமொழி

சான் பிரான்சிஸ்க்கோ

அமெரிக்கா தன்னை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தது 1776 ஜூலை 4 அன்று. பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள், 2026 ஆம் ஆண்டில் தனது 250வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. மனித வரலாற்றில் மிகப் பெரிய மக்களாட்சிப் பரிசோதனைகளில் ஒன்றாகக் கருதப்படும் அமெரிக்கா, இரண்டரை நூற்றாண்டுகளாக அரசியல், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் உருவாக்கம்:

அமெரிக்காவின் பிறப்பு ஒரு சாதாரண அரசியல் மாற்றம் அல்ல. "அனைத்து மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர்" என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு விடுதலை அறிவிப்பு. இந்த அறிவிப்பு உலகெங்கும் மக்களாட்சி இயக்கங்களுக்கு ஊக்கமளித்தது. விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குப் பின்னர், அமெரிக்க அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதித்துவம், அதிகாரப் பிரிவு மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட குடியரசு அமைப்பு நிறுவப்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் திருப்புமுனையான புரட்சியான பல வரலாற்று நிகழ்வுகளின் மூலம் உருவாகி, இன்று தன் அடையாளத்தைப் பெற்றுள்ளது. புரட்சிப் போராட்டம், மேற்கு நோக்கிய விரிவாக்கம், உள்நாட்டுப் போர், தொழில்துறை வளர்ச்சி ஆகியவற்றைக் கடந்து, பின்னர் உலக அளவில் ஒப்பற்ற நாடாக உயர்ந்துள்ளது. அதாவது அமெரிக்காவின் வரலாறு என்பது போராட்டம், பொறுமை, மறுசீரமைப்பு, முன்னேற்றம் ஆகியவற்றின் சிக்கலான பின்னலாகும்.

அமெரிக்காவை வடிவமைத்த மிக முக்கிய நிகழ்வுகள்:

1. அமெரிக்கப் புரட்சி)1775–1783)

பிரித்தானிய அரசால் தங்கள் மீது திணிக்கப்பட்ட "பிரதிநிதித்துவமின்றி விதிக்கப்பட்ட வரிவிதிப்பு" என்ற நிலையினை எதிர்த்த பின்னணியில், அமெரிக்க மண்ணின் பதின்மூன்று குடியேற்றங்கள் (காலனிகள்) பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் அறிவித்தன. 1776 ஜூலை 4 அன்று சுதந்திர அறிவிப்பு கையெழுத்தானது. இது சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்ற தேசியக் கொள்கைகளை நிறுவியது.

2. மேற்கு நோக்கிய விரிவாக்கம்)1803–1890களில்(

லூசியானா கொள்முதல் அமெரிக்காவின் பரப்பளவைப் பெரிதும் அதிகரித்தது. 'வெளிப்படையான விதி' ("Manifest Destiny") என்பது 19 ஆம் நூற்றாண்டு அமெரிக்காவின் கொள்கையாக இருந்தது. இது, வட அமெரிக்கக் கண்டம் முழுவதும் தனது மக்களாட்சியை நிறுவி ஆட்சிக்குள்ளான நிலப்பரப்பையும் விரிவுபடுத்துவதாக அமைந்தது. இப்பணிக்காகக் கடவுளால் அமெரிக்கா தெய்வீகமாக நியமிக்கப்பட்டுள்ளது என்று கருதிய மனப்பான்மை அந்த நூற்றாண்டு அமெரிக்க மக்களிடம் பரவலாக இருந்தது. இக் கொள்கையால் அமெரிக்கா என்ற நாடு அமெரிக்கக் கண்டம் முழுவதும் விரிவடையத் தொடங்கியது. ஆனால் இந்த விரிவாக்கம் மண்ணின் பழங்குடி மக்களின் மரபையும் வாழ்வையும் அழித்தது.

3. அமெரிக்க உள்நாட்டுப் போர்)1861–1865):

அடிமைத்தனம் தொடர்பான அரசியலுக்கும் அறநெறி வழி ஆட்சி என்ற கொள்கை மாறுபாட்டாலும் இந்தப் போர் வெடித்தது. அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களில் செல்வந்தர்கள் கறுப்பின மக்களை அடிமையாக்கி தங்கள்

பண்ணைகளையும் செல்வத்தையும் வளர்த்துக் கொண்டனர். உழைப்பை உறிஞ்சும் மனித நேயமற்ற இச்செயலை அமெரிக்காவின் வடக்கு மாநிலங்கள் கண்டித்தன. இருதரப்பின் எதிரெதிரான கருத்துக்களால் அமெரிக்க உள்நாட்டுப் போர் ஆபிரகாம் லிங்கன் காலத்தில் நடந்து, அடிமை முறை ஒழிக்கப்பட்ட பின்னர் நாடு ஒன்றுபட்டது. இருப்பினும் சமத்துவத்திற்கான போராட்டம் தொடர்ந்தது.

4. தொழில்துறை மற்றும் முற்போக்கு காலம்)1800களின் பிற்பகுதி முதல் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை:(

தொழிற் புரட்சி அடுத்த மாற்றத்தைக் கொண்டு வந்தது. வேகமான தொழில் வளர்ச்சியும் நகரமயமாக்கலும் அமெரிக்காவைப் பொருளாதார வல்லரசாக மாற்றின. தொழிலாளர் உரிமைகள், பெண்கள் வாக்குரிமை என்று ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்தவர் கோரிக்கைகளை அங்கீகரிக்கும் இயக்கங்கள் மூலம் நாட்டில் அரசியல் சீர்திருத்தங்கள் உருவாயின.

5. பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் 'நியூ டீல்' (1929–1939):

அமெரிக்கப் பங்குச்சந்தை 1929இல் சரிந்ததால் இவ்வீழ்ச்சி உலகளாவிய பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியதுஅதனால் ஏற்பட்ட உலகளாவிய . பொருளாதார மந்தம், அரசின் பொருளாதார நிலையையும் மாற்றியது . மக்களுக்காக'நியூ டீல்' என்ற சமூக நலத்திட்டங்கள் மற்றும் நிதி ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

6. இரண்டாம் உலகப்போர்)1941–1945):

இரண்டு உலகப் போர்களிலும் முக்கிய பங்கு வகித்தது அமெரிக்கா. இருப்பினும் இரண்டாவது போரில் முதலில் நடுநிலை வகித்த அமெரிக்கா, பின்னர் டிசம்பர் 1941 ஆம் ஆண்டில் ஹவாயில் உள்ள பேர்ல் துறைமுகம் மீது ஜப்பான் நடத்திய தாக்குதலால் அச்சு நாடுகளுக்கு எதிரான போரில் நேச நாடுகளுடன் இணைந்து போரில் நுழையும் நிலை ஏற்பட்டது. அமெரிக்கா போரில் இணைந்து, பொருளாதார மந்தநிலையிலிருந்த நாட்டை மீட்டதுடன், உலகின் முக்கிய இராணுவ மற்றும் தொழில்துறை வல்லரசாக உயர்ந்தது . போருக்குப் பிறகு ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவாக்கத்திலும் அமெரிக்கா .முன்னிலை வகித்தது

7. குடியுரிமைப் போராட்டம்)1950–1960களில்(

மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் போன்ற கறுப்பினத் தலைவர்கள் இன வேறுபாடு மற்றும் பிரிவினைச் சட்டங்களுக்கு எதிராகப் போராடினர் . இப்போராட்டத்தின் விளைவாக1964ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டமும் 1965ஆம் ஆண்டின் வாக்குரிமைச் சட்டமும் உருவாகின.

8. செப்டம்பர் 11 தாக்குதல்கள் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்)2001)

அமெரிக்க மண்ணிலேயே நிகழ்த்தப்பட்ட அயல்நாட்டின் இந்தப் பயங்கரவாத தாக்குதல்கள் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை, உள்நாட்டுப் பாதுகாப்பு, கண்காணிப்பு ஆகியவற்றை அடிப்படையாக மாற்றின.

9. பராக் ஒபாமா ஆட்சி)2009 – 2017)

பெரும் பொருளியல் நிலைத் தேக்கத்தை (Great Recession-2007 –2009) அமெரிக்கா எதிர்கொண்ட பொழுது 2008ஆண்டில் நடந்த தேர்தல் அமெரிக்க வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. பெரும் பொருளாதார மந்தத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நெருக்கடியான சூழலில் ஒரு கலாச்சார மாறுதலாக, முதல் கறுப்பின அமெரிக்க அதிபர் என்ற வரலாற்றுத் திருப்புமுனையுடன் பராக் ஒபாமாவிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஒபாமா பெரும் பொருளாதார மந்தநிலைக்கு எதிரான ஊக்கத் திட்டங்களை அறிவித்தார். சுகாதாரத் துறையில் தேவையான மறுசீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். ஒரே பாலினத் திருமணத்திற்குத் தேசிய அளவில் சட்ட அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. அமெரிக்காவிற்கு அழிவு ஏற்படுத்தினால் விளைவு என்னவாக இருக்கும் என்று எச்சரிக்கை செய்யும் விதமாகச் செப்டம்பர் 11 தாக்குதலுக்குக் காரணமான ஒசாமா பின் லாடன் மீது அதிரடி நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

அமெரிக்காவின் சிறந்த அதிபர்கள்:

இதுநாள் வரை முதலாம் அதிபர் ஜார்ஜ் வாஷிங்டனில் தொடங்கி இன்றைய அதிபர் டொனால்ட் டிரம்ப் வரை 46 அமெரிக்க அதிபர்கள் நாட்டை வழி நடத்தியுள்ளார்கள். இவர்களில் ஆகச் சிறந்த அமெரிக்க அதிபர்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் மூவரைக் குறிப்பிடுவார்கள். தொடர்ந்து நடக்கும் இந்த ஆய்வுகளின் தரவரிசைப் பட்டியலில் ஜார்ஜ்

வாஷிங்டன்(1789 –1797) முதல் அதிபர்; ஆபிரகாம் லிங்கன் (1861–1865) 16ஆவது அதிபர்; பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் (1933–1945) 32ஆவது அதிபர் என இந்த மூவரும் வரிசை மாறினாலும் முதல் மூன்று இடங்களில் தொடர்ந்து இடம் பிடிப்பவர்கள். சிறந்த அதிபர் மதிப்பீடுகளில்; நாட்டின் அக்கால நெருக்கடி நிலையைச் சமாளித்து வழிநடத்துவது, பொருளாதாரத்தை மறுவடிவமைப்பது மற்றும் குடிமை உரிமைகளை விரிவுபடுத்துவது ஆகிய மூன்று செயல்பாடுகள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகிறது.

பிரசிடென்சியல் கிரேட்னஸ் ஆய்வுத் திட்டம் (‘Presidential Greatness Project’) என்ற 2024 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வின் முடிவின் மதிப்பீட்டில் 1. ஆபிரகாம் லிங்கன் (95.03), 2. பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் (90.83), 3. ஜார்ஜ் வாஷிங்டன் (90.32) ஆகியோர் சிறந்த அதிபர்களாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள். (இதில் 10.92 என்ற மதிப்பீட்டுடன் இறுதி இடம் பெறுபவர் இன்றைய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்; டொனால்ட் டிரம்ப் மிகவும் பிளவுபடுத்தும் அதிபராகக் கருதப்படுகிறார்). இந்த மதிப்பீட்டில் ஜார்ஜ் வாஷிங்டன் மிகக் குறைவாகப் பிளவுபடுத்தும் தலைவராக மதிப்பிடப்பட்டுள்ளார்.

சிறந்த அதிபர்கள் ஆய்வில், வரலாற்றாசிரியர்களும் அரசியல் வல்லுநர்களும் அதிபர்களின் செயல்பாடுகளை மதிப்பிடும் அளவுகோல்களாக எடுத்துக் கொள்ளும் அலகுகள்: 1. நாட்டின் நெருக்கடி நிலை வளர்ச்சிக்கான மேலாண்மை, 2. நன்நெறிமுறைத் தலைமைத்துவம், 3. சீரிய பொருளாதார மேலாண்மை, 4. மக்களுக்குச் சம உரிமைகள்

வழங்குவதில் முன்னேற்றம், 5. அமெரிக்கச் சட்டசபையுடன் இணைந்து பணியாற்றும் திறன், 6. அயல்நாட்டு உறவுகளைக் கையாளும் தன்மை ஆகியன. இந்த அடிப்படையில்;

- **ஜார்ஜ் வாஷிங்டன்** – புதிய குடியரசின் அடித்தளத்தை அமைத்தார்; புதிய நாட்டுக்கான சிறந்த முன்னோடியாக வழிகாட்டியாகச் செயல்பட்டார்.
- **ஆபிரகாம் லிங்கன்** – பிளவுபட்ட ஒன்றியத்தை ஒருங்கிணைத்துக் காப்பாற்றினார்; அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.
- **பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட் .**– பெரும் பொருளாதார பெரும் மந்த நிலையையும் உலகப்போரையும் திறமையாகச் சமாளித்தார்.

என்று இவர்களின் சாதனையில் சிறந்த அதிபர்களாகத் தேர்வு செய்கிறார்கள்.

மற்ற முக்கிய தலைவர்கள்:

இவர்கள் தவிர்த்து;

- **தாமஸ் ஜெஃபர்சன்**லூசியானா கொள்முதல் மூலம் அமெரிக்காவின்) (பரப்பளவை இரட்டிப்பாக்கியவர்;
- **தியோடர் ரூஸ்வெல்ட்** பெருநிறுவன ஏகபோகங்களை உடைத்தவர்); சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தவர்(;
- **டுவைட் ஐசன்ஹோவர்**நெடுஞ்சாலை அமைப்பை) முன்னெடுத்தவர், பள்ளிகளில் இனவெறி ஒழிப்பை அமல்படுத்தியவர்(;
- **லிண்டன் ஜான்சன்**) 1964 இல் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்தவர் ; முதியோருக்கும், இயலாதவருக்கும் சுகாதார உதவிக்கு வழிவகுத்தவர்(

ஆகியோரும் முதல் பத்து இடங்களில் இடம் பிடிப்பவர்கள்

உலகளாவிய செல்வாக்கு:

இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்கா தொழில்துறை வல்லரசாக வளர்ந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அசைக்க முடியாத ஓர் உலக வல்லரசாக உருவெடுத்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளின் உருவாக்கத்திலும் அதன் பங்கு குறிப்பிடத்தக்கது. பனிப்போர் காலத்தில் சோவியத் ஒன்றியத்துடன்

போட்டியிட்ட அமெரிக்கா, விண்வெளிப் போட்டியில் நிலவிற்கு மனிதனை அனுப்பி வரலாறு படைத்தது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் அமெரிக்காவின் பங்களிப்பு அளப்பரியது. இணையம், கணினி புரட்சி, உயிரியல் மருத்துவ முன்னேற்றங்கள், செயற்கை நுண்ணறிவு ஆகிய பல துறைகளில் அமெரிக்க நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் உலக முன்னணியில் உள்ளன. உலகின் சிறந்த ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் மாணவர்களை ஈர்க்கும் நாடாகவும் அமெரிக்கா திகழ்கிறது.

அதே நேரத்தில், அமெரிக்காவின் வரலாறு குறைபாடுகள் அற்றதல்ல. இன வேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு, அரசியல் பிளவுகள், குடியேற்றக் கொள்கைகள் மற்றும் உலகளாவிய இராணுவ தலையீடுகள் போன்றவை தொடர்ந்து விவாதப் பொருள்களாக இருந்து வருகின்றன. இருப்பினும் தன்னைத்தானே விமர்சித்துத் திருத்திக்கொள்ளும் திறன் அமெரிக்க மக்களாட்சியின் முக்கிய பலமாகக் கருதப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு கொண்டாடப்படும் 250வது ஆண்டு விழா, அமெரிக்காவின் சாதனைகளை மட்டுமல்லாது அதன் பயணத்தில் ஏற்பட்ட தவறுகளையும் நினைவுகூரும் தருணமாகும். சுதந்திரம், சமத்துவம், வாய்ப்புகள் மற்றும் மக்களாட்சியின் மீதான நம்பிக்கை ஆகியவை இன்னும் அமெரிக்க அடையாளத்தின் மையக் கருத்துக்களாக உள்ளன. இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவான ஒரு குடியரசு இன்று உலகின் மிகுந்த செல்வாக்கு மிக்க நாடுகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. 250 ஆண்டுகளை எட்டும் இந்த நேரத்தில், அமெரிக்கா தனது கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, மேலும் சமத்துவமான, நிலையான மற்றும் மனிதநேயமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க வேண்டிய கட்டத்தில் நிற்கிறது.

சுதந்திரத்தின் கனவிலிருந்து உலகளாவிய செல்வாக்கு வரை — 250 ஆண்டுகள் அமெரிக்காவின் வரலாறு, மனித முயற்சி, மாற்றம் மற்றும் ஜனநாயகத்தின் தொடர்ச்சியான தேடலின் கதை ஆகும்.

உதவிய ஆய்வறிக்கை:

Assessing Presidential Greatness in a Polarized Moment: Analyzing the 2024 Presidential Greatness Project Survey

Brandon Rottinghaus, Justin Vaughn; 26 April 2026 https://doi.org/10.1111/psq.7004

ஆபன்னூர் தமிழி நடுகல் கல்வெட்டு

சி. அபிஷேக்

இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆர்வலர்

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம் முதுகுளத்தூர் அருகில் உள்ள ஆண்டியேந்தல் (ஆப்பனூர்), அரிய நாச்சியம்மன் திருக்கோயிலில் இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பழமையான கல்வெட்டும், இம்மாவட்டத்தில் கிடைத்த முதல் தமிழி கல்வெட்டும் இதுவாகும். இதனை முதன் முதலில், 29.05.2026 அன்று தனது கள ஆய்வில் கண்டுபிடித்தவர் திரு. முனியசாமி அவர்கள். அதன்பின், ஆய்வாளர்களிடம் தெரியப்படுத்தி கல்வெட்டில் உள்ள தகவல்களை படித்து 02.06.2026 அன்று செய்தியாக வெளியிடப்பட்டது. இக்கல்வெட்டானது, அரிய நாச்சியம்மன் திருக்கோயில் வளாகத்தில், அரிய நாச்சியம்மன் சன்னதியின் இடது பக்கம் அமைந்துள்ள மாணிக்கவள்ளி என்ற சன்னதியின் பின்பக்க ஓடை மரத்தடியில் உள்ளது.

- கல்வெட்டு அளவுகள்:

இது 3.6 அடி நீளமும், 1.7 அடி அகலம், 6 இன்ச் – 1.4 அடி கனமும் கொண்டது.

- கல் வகை :

தமிழிகல்வெட்டு உள்ள பாறையானது, குவார்ட்ஸ் வகையைச் சேர்ந்தது. இதனை இப்பகுதி மக்கள் சீனிக்கல், ஸ்படிக கல் என்று அழைக்கின்றனர். இயற்கையாகவே, இவ்வகையான கற்கள் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி கோட்டைமேடு குண்டாற்றுப் படுகையில் கிடைக்கின்றன. இதே வகையான கற்களைக் கொண்டே கமுதி சிவன் கோயில் கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது என்பது

தமிழி கல்வெட்டை 31.05.2026 அன்று முதன்முதலில் கண்டுபிடித்த திரு. முனியசாமி அவர்கள்

குறிப்பிடத்தக்கது. இந்த வகையான கற்கள், எளிதில் நொறுங்கும் தன்மை கொண்டது. இக்கற்களை உடைத்து சில இடங்களில் கோலப்பொடி செய்வதாகும் கூறப்படுகிறது.

- கல்வெட்டு செய்தி :

மூன்று வரிகளில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டின், முதல் வரியில் 7 எழுத்துக்களும், இரண்டாவது வரியில் 11 எழுத்துக்களும் மற்றும் இறுதி வரியில் 7 எழுத்துக்களும் மொத்தம் 25 எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

இதனை,

- வரி 1 : (ஆ) (ப) (ன) (னூ) (ர) (ஏ) (றி)
- வரி 2 : (ய) (மா) (ண) (டு) (வி) (ழு) (ந) (த) (அ) (த) (தி)
- வரி 3 : (ய) (ன) (கீ) (ர) (ன) (க) (ல)

ஆபன்னூர் ஏறி
ய் மாண்டு விழுந்த அத்தி
யன் கீரன் கல்

என்று படிக்க முடிகின்றது. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (15) என்பது தொல்காப்பிய விதியாகும். மெய் எழுத்து ஒரு சொல்லின் இடையில் வந்தாலும் கடையில் வந்தாலும் புள்ளி பெற்று அமைதல் வேண்டும். ஆனால், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெரும்பாலான தமிழி கல்வெட்டுக்களில் புள்ளியின்றியே எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழகத்தின் பழமையான நடுகல் கல்வெட்டாக

அறியப்படும் புலிமான்கோம்பை நடுகல்லிலும் கூட புள்ளிகள் இல்லை. இதற்கு காரணம், கல்வெட்டு சேதடைதல் அல்லது இடர்பாடாக இருக்கலாம். அதே, போல்தான் ஆப்பனூர் கல்வெட்டிலும் புள்ளி இன்றியே கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் வரியில் – ''ஆப்பனூர் ஏறி'' என்று உள்ளது. இதில் குறிப்பிடப்படும் ஆப்பனூர் என்பது ஒரு ஊரின் பெயராகும். இவ்வூர் இன்றளவும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகில் அமைந்துள்ளது. இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், கல்வெட்டு கிடைத்துள்ள ஊரின் அருகிலேயே தான் ஆப்பனூர் அமைந்துள்ளது. இக்கல்வெட்டு கிடைத்ததன் மூலமாக,ஆப்பனூர் என்ற இவ்வூரின் பெயரானது 2100 ஆண்டுகள் பழமையானது என்றும், இன்றும் அதே பெயரில் வழக்கத்தில் உள்ளது என்பதும்அறிந்துக்கொள்ளமுடிகின்றது. ஏறி + ய் – ஏறிய் இதில் ய் என்ற எழுத்து இரண்டாவது வரியின் முதலாவதாக உள்ளது. இதன் பொருள் ஏறுதல் அல்லது வருதல் என்பதாகும். ஆப்பனூர் ஏறி / வந்து என்பது இதன் விளக்கம். இவ்வரியின் இறுதியில் எட்டாவதாக ஒரு எழுத்து சேதமடைந்த நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் வரி – ''ய் மாண்டு விழுந்த அத்தி'' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இதில், மாண்டு என்றால் இறந்த என்றும் விழுந்த – விழுதல் என்பதும் பொருள். இறுதியில் வரும் அத்தி + யன் – அத்தியன் என்பது ஆண் பால் பெயர். 'யன்' என்ற எழுத்துக்கள் மட்டும் மூன்றாவது வரியில் பொறிக்கப்பட்டுள்ளது. இறுதியாக, இறந்து விழுந்த அத்தியன்... என்பது பொருள்படும்.

மூன்றாம் வரியில் – ''யன் கீரன் கல்'' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதில் கீரன் என்பது ஆண் பால் பெயர், கல் என்பது அந்த கல்லையே குறிக்கும். இறுதியாக,

• ஆபன்னூர் – ஊர் பெயர்

• ஏறிய் – ஏறுதல் / வருதல்

• மாண்டு – இறத்தல்

• விழுந்த – விழுதல்

• அத்தியன் – ஆண்பால் பெயர்

• கீரன் – ஆண்பால் பெயர்



• கல்

ஆப்பனூர் ஏறிய / வந்து, இறந்து விழுந்த அத்தியன் கீரனுக்காக எடுக்கப்பட்ட கல் என்பது இதன் பொருளாகும். இதில், அத்தியனின் மகன் கீரன் என்று பொருள் கூறப்படுகின்றது, இவன் ஆப்பனூரைச் சேர்ந்தவராதல் இருத்தல் முடியாது.

***அத்தியன்** : பெயர்ச்சொல் –'அத்தி' என்ற சொல்லின் அடியாகப் பிறந்த பெயராக கருதப்படுகிறது. அத்தி என்னும் பெயருடன் ஆண்மகனைக் குறிக்கும் 'அன்' விகுதி சேர்ந்து 'அத்தியன்' என்று வரும். இதற்கு ''அத்தி மரத்தின் சிறப்புடையவன்'', ''யானை போன்ற வலிமை உடையவன்'' என்று பொருள் கொள்ளப்படுகிறது.*

***கீரன்** : 'கீரன்' என்பது சங்க காலப் புலவர்களுக்கும், மக்களுக்கும் வழங்கப்பட்ட ஒரு பாரம்பரியப் பெயர் (எ.கா : நக்கீரன், கீரந்தையார்).*
கூட்டுப் பொருள் (அத்தியன் கீரன்) : இவ்விரண்டு பெயர்களும் இணைந்து 'அத்தியன் கீரன்' என்று வரும்போது, அது தமிழ் இலக்கணப்படி இருபெயரொட்டுப் பண்புத்தொகை போலவோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபரின் இயற்பெயராகவோ அமையும்.

[எ.கா : மல்லிகைப் பூ – மல்லிகை (சிறப்புப் பெயர்) + பூ (பொதுப் பெயர்) = மல்லிகை ஆகிய பூ.
மாமரம் – மா (சிறப்புப் பெயர்) + மரம் (பொதுப் பெயர்) = மா ஆகிய மரம்.]

- *அத்தியன் கீரன் : அத்தியன் (குடிப்பெயர்/சிறப்புப் பெயர்) + கீரன் (பொதுவான இயற்பெயர்) = அத்தியன் ஆகிய கீரன் என்றும் பொருள் கொள்ளலாம்.*

இப்பெயர் எதைக் குறிக்கிறது என்பதை அறுதியிட்டு கூற முடியாமல் இருப்பதாலும், மனித மனதிற்கு ஏற்ப இது பயன்படுத்தப்படுவதாலும், ஆபன்னூர் ஏறிய் மாண்டு விழுந்த அத்தியன் கீரனுக்காக எடுக்கப்பட்ட கல் என்றே நாம் இதை பொருள் கொள்வது சரியானதாக அமையும்.

- ***ஆபன்னூர்~ ஆப்பனூர் :***

இன்றைய இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் முதுகுளத்தூர் அருகில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு

பழமையான சிவன் கோயில் ஒன்று அமைந்துள்ளது.

- **அரியநாச்சியம்மன் திருக்கோயில் :**

அரிய நாச்சியம்மன் கோயில், இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானத்திற்குப் பாத்தியப்பட்ட திரு உத்தரகோசமங்கை மங்களநாத சுவாமி திருக்கோயிலின் உபக் கோயிலாக இக்கோயில் உள்ளது. அரிய நாச்சியம்மன், ஆப்பனூர் உட்பட 448 கிராம மக்களுக்கு குலதெய்வமாக விளங்குவதாக தகவல்கள் கிடைக்கிறது. தற்போது உள்ள கோயில், புதியதாக கட்டப்பட்டு 2022 ம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. முன்பிருந்த கோயில் சிதைந்தநிலையில் இருந்ததனால் இது மாற்றப்பட்டுள்ளது. கருவறையில் வடக்குப் பார்த்த நிலையில் அரிய நாச்சியம்மன் திருமேனி உள்ளது. அதன் அருகிலேயே, இடது பக்கத்தில் அம்மனின் பழைய திருமேனியும் வைக்கப்பட்டுள்ளது.

- **மாணிக்கவள்ளி** :

அம்பாளின் கருவரைக்கு இடது பக்கத்தில், ஒடை மரத்தடியில் இருந்த நடுகல்லை மாணிக்கவள்ளி என்ற பெயரில் மக்கள் பல ஆண்டுகளாக வழிபட்டு வந்ததாக கூறப்படுகிறது. இது, சிலபேருக்கு குல தெய்வமாகவும் இருந்துள்ளது. குடமுழுக்கு நேரத்தில் பழைய கல்லை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக புதியதொரு சிற்பம் எடுப்பிக்கப்பட்தாக தெரிகின்றது. இதனால், அந்த நடுகல் ஒடை மரத்தடியில் சாத்தி வைக்கப்பட்டுள்ளது. மாணிக்கவள்ளி ஆப்பனூர் கிராம மக்கள் சிலருக்கு குலதெய்வமாக விளங்குகிறாள். அவர்கள், அரிய நாச்சியம்மன் திருக்கோயிலில் இருந்து பிடிமண் எடுத்து சென்று, ஆப்பனூர் கிராமத்தின் கண்மாய்கரையில் தற்போது புதியதொரு கோயில் எழுப்பி வழிபட்டு வருகின்றனர்.

- **சேதுபதி மன்னர்கள் கால கல்வெட்டுகள் :**

இக்கோயிலின் வடமேற்கு மூலையில் பழைய கோயிலின் கட்டுமான கற்கள் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. இதன் துண்டு கற்களில் சேதுபதி மன்னர்கள் கால கல்வெட்டுகள் உள்ளன. பிடாரியேந்தலில் உள்ள இக்கோவில் பண்டாரங்களுக்கு நிலங்களை பிரித்து வழங்கியது

பற்றிக் இக்கல்வெட்டுகளில் தகவல்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் ஆவணம் இதல் 30 ல் வெளிவந்துள்ளது. இக்கல்வெட்டானது சக ஆண்டு 1553 ம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிகரான தற்போதைய ஆண்டு 1553 + 78 = 1631 ஆகும். இத்தானத்தை அளித்தவர் தளவாய் சேதுபதி ஆவார். இக்கல்வெட்டு நான்கு துண்டுகளாக உடைந்து முதல் கல்லில் 42 வரிகளும், இரண்டாவது துண்டில் 17 வரிகளும் மூன்றாவது துண்டில் 4 வரிகளும் உள்ளது. பதிவு செய்யப்படாத நான்காவது துண்டில் 8 வரிகள் கொண்ட கல்வெட்டு உள்ளது. இதன் தொடர்ச்சி கிடைக்கப் பெறவில்லை. இவை பழைய கோயிலின் நிலைக்கால் கல்வெட்டுகளாகும். முதல் பகுதி 165 செ.மீ. நீளமும் 27 செ.மீ. அகலம்23 செ.மீ. தடிமனும் ; இரண்டாம் பகுதி 64 செ.மீ. நீளம், 28 செ.மீ. அகலம், 29 செ.மீ. தடிமனும் ; மூன்றாவது பகுதி 67 செ.மீ. நீளமும் 28 செ.மீ. அகலமும் நான்காவது பகுதி 33 செ. மீ. நீளமும் 28 செ. மீ. அகலம், 22செ.மீ. தடிமனும் கொண்டது.

- **தமிழி கல்வெட்டு கண்டுபிடிப்பு :**

திரு. முனியசாமி அவர்கள் பதிவு : இராமநாபுரம் மாவட்டத்தின் தொன்மையைத் தேடி பல பயணங்கள் செய்திருக்கிறேன். ஆனால் இந்தப் பயணம் எதிர்பாராத ஒன்றாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும் அமைந்தது. நமது மாவட்டத்தில் சங்ககாலத் தடயங்களைத் தேடி கமுதி, முதுகுளத்தூர் மற்றும் கடலாடி பகுதியில் சில நாட்களாக களப்பயணம் மேற்கொண்டேன். இதன் பொருட்டு ஆப்பனூர் அருகே உள்ள அரியநாச்சியம்மன் கோவிலில் சில கல்வெட்டுகளைத் தேடிய போது இந்த சங்காலத் தமிழி நடுகல்லை கண்டறிந்தேன். இக்கல்லில் கல்வெட்டு இருக்கும் என யாரும் யூகித்திருக்க முடியாது. எளிதில் நொறுங்கக் கூடிய குவார்ட்சைட் கல்லில் இக்கல்வெட்டு செதுக்கப்பட்டிருந்தது. இப்பாறைகள் பெரும்பாலும் கோட்டைமேடு பகுதியில்தான் அதிகம் காணப்படுகின்றன.

இக்கோவில் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் ஆப்பனூர் மற்றும் பிடாரி யேந்தலுக்கு இடையில் ஆண்டியேந்தலில் அமைந்துள்ளது.முதல் நாள் அக்கோவிலுக்குச் நான் சென்ற போது சேதுபதி மன்னர்கால கல்வெட்டுகள்தான் கிடைத்தது. அடுத்தநாள் அதன் தொடர்ச்சியைக் கண்டுபிடிக்க ஒவ்வொரு கல்லாக புரட்டிய போது இத்தமிழிக் கல்வெட்டை கண்டறிந்தேன். முதலில் ஒருசில எழுத்துகளே தெரிந்தது. நன்கு கழுவிய பின்பு முழு கல்வெட்டும் தெளிவாகத் தெரிந்தது. அந்த நொடி மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இதற்கு முன்பு தேரிருவேலி மற்றும் அழகன்குளம் அகழாய்வுகளில் கிடைத்த சங்ககாலப் பானைகளில் பல்வேறு தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. முதன்முறையாக ஒரு கல்லில் தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருப்பது இதுவே முதன் முறை ஆகும். மேலும் பிறமொழிக் கலப்பில்லாமல் தூயத் தமிழில் பொறிக்கப்பட்டிருப்பது இதன் தனிச்சிறப்பு ஆகும். தமிழ் நாட்டில் கிடைத்த புலிமான் கோம்பை, தாதப்பட்டி நடுகற்களைப் போல் இக்கல்வெட்டும் இனி வரலாற்றில் சிறப்பிடம் பெறும்.

- ***தனிச்சிறப்பு :***

பாண்டிய நாடான இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைத்துள்ள முதல் தமிழி நடுகல் கல்வெட்டு இதுவாகும். 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆப்பனூர் என்ற பெயர் வழக்கத்தில் இருந்துள்ளது என்பதற்கு இக்கல்வெட்டு சான்றாக விளங்குகிறது. தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள ஓரிரு தமிழி நடுகல்லில் இதுவும் ஒன்றாக இனி திகழும். இதுசங்கத் தமிழர்களின் மரபு, வழிபாட்டு பண்பாடு மற்றும் சமூக வரலாற்றை வெளிச்சமிட்டுக் காட்டும் அரிய ஆதாரமாகவும், பிறமொழி கலப்பில்லாத தூய தமிழில் இந்த தமிழி நடுகல் கல்வெட்டு அமைந்துள்ளது.

- ***நடுகல் வழிபாடு :*** பண்டைய காலத்தின் நடுகல் வழிபாடு பற்றியும் அதன் முறைகள் பற்றியும் சங்க இலக்கியங்களில் தகவல்கள் விரவிக் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் இறப்பு தொடர்பானதாகவே உள்ளன.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று, இருமூன்று மரபின் கல்லோடு புணர" என்ற தொல்காப்பிய மரபுக்கேற்ப இந்த நடுகல் காணப்படுகின்றது. இயற்கையை வணங்கிய காலத்திற்கு அடுத்தபடியாக முன்னோர் வழிபாட்டை போற்றியவர்கள் நம் பண்டைய தமிழர்கள். பெருங்கற்படை காலத்தில் ஓவியமாய் வரைந்தவை நாளடைவில் நடுகற்களாயின. இறந்தவருக்கு அவரது நினைவாக எடுக்கப்பட்டுள்ள நடுகல்லிற்கும், எண்ணத்தில் அவர்களுக்கு பிடித்ததை படையலாக இட்டு வழிபட்டனர். இவற்றுடன் உயிர் பலி கொடுப்பதும், கள்ளைப்படைத்து வணங்கி வழிபடுவதும் மரபாக இருந்தது. பழந்தமிழ் இலக்கணநூலான, தொல்காப்பியம் நடுகல் எடுப்பிக்கும் முறையை ஆறு நிலைகளாக விளக்குகின்றது. அவை,

1) காட்சி

2) கால்கோள்

3) நீர்ப்படை

4) நடுகல்

5) பெரும்படை

6) வாழ்த்து.

1. **காட்சி** – இது முதல் நிலையாகும். இதில் தமக்கு தேவையான கல்லை தேர்வு செய்கின்றனர். பிறகு அதனை வெட்டி எடுத்து வரப்படுகிறது. அதுவே நடுகல்லாகும்.
2. **கால்கோள்** – எடுத்தக் கல்லை நடுவதற்குரிய நாளைப் பார்ப்பதும் இடத்தைக் குறிப்பதும் கால்கோள் எனப்படுகிறது. எந்த ஒரு செயலை செய்வதற்கு முன்பாகவும் நல்ல நாள், நல்ல நேரம் பார்ப்பது தமிழர்களின் மரபு.
3. **நீர்ப்படை** – நீர்ப்படை என்றால் நீராடுதல் என்று பொருள் கொள்ளலாம். இது எடுக்கப்பட்ட கல்லைத் தூய்மைப்படுத்தும் சடங்காகும். இவ்வழக்கம் தற்போது, தெய்வ விக்ரகங்களை அல்லது சிலைகளைப் புதிதாக வடிவமைக்கும் போது, அவை ஒரு மண்டலம் (48 நாட்கள்) தண்ணீரில் ஊற வைக்கப்படுகின்றன. சிலையில் உள்ள குறைகளை கண்டறிதல், கற்சிலைகளின் வெப்பத்தைத் தணித்தல் மற்றும் இறையருளை நிலை நிறுத்துதல் ஆகியவை இதன் முக்கிய காரணங்களாக உள்ளது.
4. **நடுகல்** – வீரன் வீழ்ந்துபட்ட இடத்திலோ அல்லது வேறொரு இடத்திலோ தயார் செய்த கல்லை நடுதல். அக்கல்லில் வீரனின் உருவம், பெயர், புகழையும் கூட பொறிக்கலாம்.
5. **பெரும்படை** – எடுத்த நடுகல்லிற்கு படையலிட்டு வணங்கி வழிபடுதல். இவ்வழக்கம், தற்போதும் நடைமுறையில் உள்ளது. யாராவது ஒருவர் இறந்தால், குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து, இறந்தவர் விரும்பிய பொருட்களைப் படைத்து வழிபடுவர்.
6. **வாழ்த்து** – இது கடை நிலையாகும். இறந்தோரை நினைத்து வருந்தாமல் அவரை வாழ்த்தி வழிபட்டு வருதலை இது குறிக்கின்றது.

இதுவே இறந்த வீரருக்கான நடுகல் வழிபாடாக தொல்காப்பியம் வகுத்துள்ள இலக்கணமாகும்.. ஆபன்னூர் தமிழி நடுகல் கல்வெட்டு தொல்காப்பியம் கூறிய வழக்கத்தை அப்படியே பிரதிபலிக்கின்றது. இதன் காரணமாக, அக்கல்வெட்டு தமிழ் வரலாற்றிற்கு முக்கிய சான்றாக உள்ளது.


இக்கல், குவார்ட்ஸ் (Quartz) வகையைச் சேர்ந்தது. இது இயற்கையாகவே கமுதி கோட்டைமேடு குண்டாற்றுப் படுகையில் கிடைக்கின்றன.

ஆபன்னூர் நடுகல், இறந்துபோன அத்தியன் கீரனுக்காக எடுக்கப்பட்டுள்ளது. இவன் ஆபன்னூர் (ஆப்பனூர்) கிராமத்தைச் சேர்ந்தவனாக இருத்தல் முடியாது. கல்வெட்டு அடிப்படையில், ஆபன்னூர் ஏறிய் / வந்து / சண்டையிட்டு மாண்டான் என்பதுதான் இதன் பொருள். ஆபன்னூர்காராக இருக்கும் பட்சத்தில் இறந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

"மாண்டு விழுந்தான் " – என்ற சொல்லின் பொருள், சாதாரண இறப்பை குறிக்குமா ? அல்லது கொலையைக் குறிக்கின்றதா ? என்று பார்த்தால், இதன் பொருளின் தன்மையானது "போர்க்களத்தில் அல்லது ஒரு போராட்டத்தில் வீரமாகப் போராடி மடிந்தான்" என்பதையே குறிப்பதாக அமைகின்றது. இது ஆநிரைகளைக் கவர்தல் சண்டையாக இருத்தல் வேண்டும்.

இந்தச் சொல்லின் ஆழமான பொருள்,

• **மாண்டு** : மடிந்து, இறந்து அல்லது அழிந்து என்று பொருள்.

• **விழுந்தான்** : கீழே சாய்ந்தான் (இங்கே போர்க்களத்தில் / சண்டையில் வீழ்வதைக் குறிக்கிறது).

மாண்டு விழுந்தான் என்பது வீரமரணம், போரில் வீழ்தல், நாடு, மொழி, அல்லது ஒரு உயர்ந்த லட்சியத்திற்காகப் போரிட்டு, எதிரிகளுடன் சண்டையிட்டு வீரமாக உயிர்த்தியாகம் செய்வதைக் குறிக்கும் சொல்லாக இது பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. இறுதியாக, அத்தியன் கீரன் என்பவன் ஆபன்னூர் ஏறிய் சண்டையிட்டு மாண்டு விழுந்தான் என்பது இதன் பொருள். அவனது வீரம் / நினைவிற்காக எடுக்கப்பட்டது அந்த நடுகல்.

புறம் 335 வது பாடலில், பூக்களில் சிறந்தவை குரவம், தளவு, குருந்து, முல்லை ஆகியவைதான் என்றும், உணவுப் பொருட்களில் சிறந்தவை வரகு, தினை, கொள், அவரை ஆகிய நான்கு மட்டுமே என்றும், குடிகளில் சிறந்த குடிகள் துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்கு குடிகளே என்றும், இறந்த வீரர்களின் நடுகல்லைத் தவிர,

வழிபடுவதற்கேற்ற கடவுள் வேறு எதுவும் இல்லை என்றும் நடுகல் பற்றிய சிறப்பு பற்றிய தன் கருத்தை இப்பாடலில் புலவர் மாங்குடி கிழார் பதிவு செய்கிறார். இதன் மூலம், நடுகல்லின் அக்கால நிலையை அறிந்துகொள்ள முடிகிறது. இந்நடுகல்லை, இனி தொல்காப்பியம் கால நடுகல் நிலைகளோடு ஒப்பிட்டு பார்ப்போம்.

1. காட்சி – ஆபன்னூர் நடுகல் *Quartz* வகை கல்லைச் சார்ந்து. இது ஸ்படிக கல், சீனிக்கல், உதிரி கல் என்று பல பெயர்களில் அறியப்படுகின்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இவ்வகையான கற்கள் கமுதி கோட்டைமேடு குன்டாற்றுப் படுகையில் மட்டுமே கிடைக்கின்றன. இவ்வகையான கற்கள், அப்பகுதியில் பாறை வடிவில் கிடைக்கின்றன.

ஆபன்னூர் நடுகல் கிடைத்த இடத்தில் இருந்து இப்பகுதியானது தோராயமாக 23 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில், வேறெங்கும் இவ்வகையான கற்கள் பெரிய அளவில் கிடைப்பதில்லை என்பதாலும், இது கல்வெட்டு கிடைத்துள்ள இடம் அருகாமையில் இருப்பதாலும், நடுகல்லிற்கு தேவையான கல், கோட்டைமேடு பகுதியில் இருந்தே வெட்டி எடுத்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

2. **கால்கோள்** – இப்போது கல்லை நடுவதற்கான இடம் தேர்வு செய்தல் வேண்டும். அத்தியன் கீரனுக்காக எடுக்கப்படும் இக்கலானது, அவன் இறந்த இடம் ஆபன்னூர் (ஆப்பனூர்) என்பதால், எடுத்த கல்லை இவ்வூருக்கு கொண்டு வருதல் வேண்டும்.
3. நீர்ப்படை – இத்தகவல் உள்ள சான்றிற்கு 2000 ஆண்டுகளைக் கடந்த நாம், நீர்படை என்பதற்கான சரியானப் பொருளை கூறுவது என்பது முடியாத காரியமாகும். ஏனெனில், அதற்கான தெளிவான விளக்கங்கள் அன்றைய காலத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதாலே. அதனால், உள்ள சொல்லின் பொருளின் அடிப்படையிலும், கிடைக்கப்பெற்ற பிற சான்றுகளின்படியும், அதன் இன்றைய பரிணாம நிலையின் அடிப்படையையும் ஒப்பிட்டு, ஒரு கருதுகோளை உருவாக்க முடியும். அந்தவகையில், ஒருவர் இறந்தால் அவரை நீர் கொண்டு சுத்தம் செய்து, புத்தாடை அணிவிக்கப்படுவது இன்றைய வழக்கமாக உள்ளது. அதுபோல் தான், இறந்த நபருக்காக எடுக்கப்பட்ட கல்லிற்கும் சில சடங்குகள் இருந்துள்ளது. அவையே, நீர்ப்படை என்பதாகும். இங்கு, எடுத்த கல்லை நல்ல நீர் கொண்டு சுத்தம் செய்து அதனை நடுவதற்காக தயார் செய்வது என்று பொருள் கொள்ளலாம்.

4. நடுகல் – காட்சியிட்டு, கால்கோள் குறித்து, நீர்ப்படை செய்த கல்லை நடுதல் முறையேநடுகல்லாகும். ஆபன்னூர் நடுகல், குறுகிய உருளை வடிவ அடிப்பகுதி தரையில் நடபட்டு, தற்போதைய கல்லின் அகலமான தலைப்பகுதியில், மீனின் செதில்கள் மாதிரியான உதிரிகளை நீக்கி கல்லை சமச்சீர் செய்து, அதன் மேலிருந்து கீழாக மூன்று வரியில் பழந்தமிழ் எழுத்துக்கள் கொண்டு ; நடுகல் எடுத்ததற்கான விவரத்தையும் ஆதாரமாக பொறித்து வைத்துள்ளனர்.

இதில், ‘‘ஆபன்னூர் ஏறியய் மாண்டு விழுந்த அத்தியன் கீரன் கல்’’ என்ற தகவல் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு உள்ள இந்த வகையான சீனிக்கற்கள் மிகவும் மென்மையான தன்மைக் கொண்டதுடன், விரைவில் உடையக்கூடயது. இருப்பினும், அதில் நேர்த்தியாக கல்லெழுத்துக்கலை பொறித்த தச்சரின் பணி அவரின் அனுபவத் திறமைக்கு சான்றாக உள்ளதுடன், இவ்வாறு பொறிப்பதற்கு முன்பாகவே இவ்வகையான கற்களின் தன்மை மற்றும் அதில் எழுத்துக்கள் பொறிப்பதில் தச்சன் புலமை பெற்றவராக இருந்திருத்தல் வேண்டும். அப்படியானால் ! இதே போன்ற பல கல்வெட்டுகள் அக்காலத்தில் உருவாயிருக்க வேண்டும் என்பதை சிந்திக்க வைக்கின்றது.

(• கூடுதல் தகவல்: இராமநாதபுரம் மாவட்டத்தில் இயற்கையாக கிடைப்பது இரண்டு வகையான பாறை கற்கள் மட்டுமே. i)கடலோரங்களில் கிடைக்கும் மணப்பாறை / பவளப்பாறை / சுண்ணாம்பு பாறை கற்கள். ii) கமுதி கோட்டைமேடு குன்டாற்றுப் படுகையில் கிடைக்கும் குவாட்ச் / சீனிக்கல் / ஸ்படிக கல் / உதிரிக்கல் பாறைகள்.

i) மணப்பாறை கற்களைப் பயன்படுத்தி இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பல கோயில்களில் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

ii) குவாட்ச் / சீனிக்கல் பாறையை பயன்படுத்தி கமுதி சிவன் கோயிலின் கட்டுமானங்கள் சில கட்டப்பட்டுள்ளது.)

5. பெரும்படை – எடுக்கப்பட்ட நடுகல்லிற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, படையலிட்டு வழிபடுதல் பெரும்படை என்பதாகும். இவ்வழக்கம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. யாராவது ஒருவர் இறந்தால், இறந்தவரின் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக சேர்ந்து, அவர் விரும்பிய பொருட்களைப் அவரின் புகைப்படம் எதிரே படைத்து வழிபடுவர். பிறகு சடங்குகள் முடிந்ததும் படைக்கப்பட்ட பொருட்களை தங்கள் குடும்பத்தினருடன் பகுத்துண்பர். இவ்வாறே நடுகல்லிற்கும் படைக்கப்பட்டிருக்கும்.

6. வாழ்த்து – ஆபன்னூர் ஏறிய் மாண்டு விழுந்த, அத்தியன் கீரனை எண்ணி குடும்பத்தினர் வாடமல், அவரை வாழ்த்தி வழிபட்டு வருதலை இது குறிக்கின்றது. கடந்து 15 ஆண்டுகளுக்கு முன்பு வரையில் இந் நடுகல் மாணிக்கவள்ளி என்ற பெயரில் வழிபாட்டில் இருந்துள்ளது. பின்னர் கடைசியாக நடைபெற்ற குடமுழுக்கு அன்று நடுகல்லை எடுத்துவிட்டு புதியதாக தெய்வ உருவம் செய்து பிரதிஸ்டை செய்யப்பட்டு, தற்போது மக்கள் வழிபாட்டில் உள்ளது. (அகற்றப்பட்ட நடுகல், அதன் அருகில் உள்ள ஒடை மரத்தடியில் சாற்றி வைக்கப்பட்டது) இத்தெய்வம், ஆப்பனூர் கிராம மக்கள் உட்பட, பல நபர்களுக்கும்குலதெய்வமாக விளங்குகின்றது. இக்கோயிலில் இருந்து பிடி மண் எடுத்துச் சென்று தற்போது ஆப்பனூர் கண்மாய் கரையில், மாணிக்கவள்ளி என்ற பெயரில் ஒரு புதிய ஆலயமும் அவ்வூர் மக்களால் எழுப்பப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. இதுவே, நடுகல்லில் இருந்து உருவ வழிபாடாக மாறிய முன்னோர் வழிபாட்டின் நீட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

தேனி மாவட்டம் புலிமான்கோம்பை நடுகற்கள் இந்தியாவில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் பழமையானது. இதன் காலம் கி.மு. 3ம் நூற்றாண்டுக்கு முன்பு என்று ஆய்வாளர்களால் காலம் கணிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களும், பழமையான இடுகாட்டில் இருந்து தான் கிடைக்கப் பெற்றன.

அதேபோல், தற்போது கிடைத்துள்ள ஆபன்னூர் தமிழி நடுகல்லும் இறப்பு தொடர்பானதாகவே உள்ளது. இக்கல், இறந்து போன ஒரு நபருக்காக எடுக்கப்பட்டது. பின்னாளில் அது வழிபாட்டிலும் இருந்துள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக தான் அதற்கு வழிபாடு செய்யப்படவில்லை என்று இக்கோயில் பூசகர் தெரிவிக்கின்றார்.

எழுத்துடை நடுகல் :

நடுகல்லுக்கு இலக்கணம் வகுத்த முதல் நூல் தொல்காப்பியம் ஆகும். அது வகுத்தாற்போலே ஆபன்னூர் நடுகல் அமைந்திருப்பது, தமிழர்களின் நடுகல் மரபு என்பது கற்பனையல்ல, அது நூற்றுக்கு நூறு உண்மை வரலாறு என்பதை மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்துள்ளது. சங்க இலக்கியம், பல இடங்களில் நடுகற்கள் பற்றிய அரிய குறிப்புகளை தருகின்றது. அதில் சில பாடல்களில் நடுகல் தொடர்பான முக்கியத் தகவல்களை நமக்கு கொடுக்கின்றன. அக்தாவது,

அகம் 35 வது பாடலில், தலைவனோடு சென்ற மகள், என்னையும் அவளது பிறந்த வீட்டையும் நினைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. அவள் செல்லும் கொடிய பாலை வழியில் அவளைக் காக்கும் நடுகல் தெய்வமே! அந்த நடுகல் கடவுள் இருக்கும் வழியில் செல்லும் என் மகளைக் காப்பாற்று. என்னை விட்டுப் பிரிந்த என் மகளை, அவளை அழைத்துச் சென்ற தலைவன் தன் மார்பில் கிடத்தி அவளுக்குத் துணையாகத் தூங்க வைக்க வேண்டும் என்று தாய் உருகி வேண்டுவதன் மூலம், அக்காலங்களில் நடுகல் தெய்வமாக வழிபடப்பட்டத்தை உறுதி செய்ய முடிகின்றது.

அடுத்த பாடல் ஒன்றில்,

*‘‘**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்***
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்” (அகம் 67)

என்று அகநானூறு பாடல் குறிப்பிடுவதன் மூலம், அக்காலத்தில் எழுத்து பொறிக்கப்பட்ட நடுகல் இருந்துள்ளதை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

எழுத்துப் பொறிப்பு:

பழங்காலத் தமிழர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த வீரர்களை மறக்காமல் இருக்க, அவர்களின் பெயரையும் புகழையும் (பீடும்) கல்லில் எழுதும் வழக்கம் (நடுகல்) கொண்டிருந்தனர் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

வழிபாடு :

போர்க்களத்தில் உயிர்நீத்த வீரர்களைத் தெய்வமாக மதித்து, மயிலிறகு (பீலி) சூட்டி வழிபட்டதை இவ்வடிகள் காட்டுகின்றன.

அகம் 53 வது பாடல், பாலை நிலம் வழியாக செல்லும் போது, வழியில் உள்ள நடுகற்களைப் பார்த்துச் செல்வதாக கூறுவதுடன்,

" எழுத்துடை நடுகல் இன் நிழல் வதியும்"

என்ற வரியின் மூலமாக, எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நடுகல் இருந்துள்ளது என்பதையும், அதனை எழுத்துடை நடுகல் என்று அழைக்கப்பட்டுள்ளதையும், அகநானூறுபாடல்வரிகள் மிகத்தெளிவாக காட்டுகிறது.

புறநானூறு 232 வது பாடல்,

"நடுகல் பீலி சூட்டி, நார் அரி
சிறு கலத்து உகுப்பவும்"

என்ற வரிகள், அதியமானின் நடுகல்லைப் பார்த்து ஔவையார் பாடுவதாக அமைந்துள்ளது. அதில், காலை மாலை என்னும் இரண்டு வேளைகளும் இனி எனக்கு இல்லாது ஒழியட்டும். என் வாழ்நாள் முழுவதும் இருண்டு போகட்டும். ஊரார் இவன் நடுகல்லுக்கு மயில்பீலி சாத்தி அழகுபடுத்துகின்றனர். கள்ளை ஊற்றிப் படையல் செய்கின்றனர் என்ற வரிகளின் மூலமாக, நடுகல்லுக்கு மயில் பீலி சாத்தி அழகு படுத்தியதையும், கள்ளை ஊற்றி படையல் செய்ததையும் வெளிப்படுத்துகின்றது. இவ்வழிபாடே பின்னாளில் காவல் தெய்வங்களாக மாறியது என்றால், அது மிகையாகாது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, "சங்க இலக்கியம் நடுகற்கள் பற்றிக் கூ றுகிறதே தவிர, ஆனால் தமிழகத்தில் அப்படிப்பட்ட நடுகற்கள் கிடைக்கவில்லையே" என்ற ஒரு கேள்வி வரலாற்று ஆய்வாளர்களிடையே இருந்தது.தமிழகத்தில் முதல் முறையாக, 2006 ம் ஆண்டு தேனி மாவட்டம் புலிமான்கோம்பையில் முதல் தமிழி நடுகல் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டதுடன், சங்க இலக்கியங்கள் வெறும் கற்பனை அல்ல, அவை தமிழர்களின் மரபு சார்ந்த மெய் என்பதை நிரூபித்தது. அதன் பின்னர், திண்டுக்கல் மாவட்டம் தாதப்பட்டியிலும், புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டையிலும் நடுகற்கள் கிடைக்கப் பெற்றன. இதன் தொடர்ச்சியாக, தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஆண்டியேந்தல் கிராமத்தில் கிடைத்துள்ள தமிழி நடுகல் கல்வெட்டு, தமிழ் வரலாற்றிற்கான மற்றொரு மயில் கல்லாக உள்ளது.

காலம் :

இக்கல்வெட்டின் எழுத்துக்கள் அடிப்படையில் இதன் காலம் பொ.யு..மு. 1ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது. புலிமான்கோம்பை நடுகற்களின் எழுத்துக்களுக்கும், இதற்கும் வேறுபாடுகள் உள்ளதை பார்க்க முடிகின்றது. அதனால், இக்கல்வெட்டானது, புலிமான்கோம்பை நடுகற்களுக்கு பிந்தைய காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று அறியலாம். மதுரை திருப்பரங்குன்றம் கல்வெட்டுக்களில் உள்ள 'அ' என்ற எழுத்தும், ஆபன்னூர் கல்வெட்டில் உள்ள எழுத்தும் ஒன்றுபடுகின்றன.

இத்துடன் மேலும் சில எழுத்துக்களும் ஒத்துப்போவதை பார்க்க முடிகின்றது. திருப்பரங்குன்றம் கல்வெட்டு கி.மு. 1 ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், ஆப்பனூர் கல்வெட்டும் பொ.யு.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் கல்வெட்டின் காலக்கணிப்பு மற்றும் உண்மைத்தன்மை குறித்து கல்வெட்டு நிபுணர்களான சுப்பராயலு, மார்க்சியகாந்தி மற்றும் ராஜகோபால் ஆகியோரின் கருத்துகளும் பெறப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதாக, பாண்டிய நாட்டு பண்பாட்டு மையம் திரு. சாந்தலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு :

இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தைய கல்வெட்டும், முதல் தமிழி நடுகல் கல்வெட்டும்இது என்பதனால், விரைவில் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யும்படியாகவும் மற்றும் ஒவ்வொருவரும் இதன் பெருமையை அறியும் வண்ணம், அதன் வரலாறு அடங்கிய தகவல் பலகை அமைக்கும்படியும் தமிழகத் தொல்லியல் துறையை கேட்டுக்கொள்கிறேன்.

முடிந்தவரையில், கல்வெட்டு கிடைத்துள்ள கோயில் வளாகத்தின் உள்ளேயே மேடை அமைத்து பாதுகாத்திட வேண்டுகிறேன். இருப்பிடம் கோயில் என்பதனால், கல்வெட்டு எந்த வகையிலும் சேதமடைந்துவிடாத வகையில் மிகவும் பாதுகாப்பான ஏற்பாடுகள் செய்தால் நன்றாக அமையும். அப்படி பாதுகாக்க முடியாத பட்சத்தில், கல்வெட்டின் முக்கியத்துவம் கருதி இராமநாதபுரம் அருங்காட்சியகத்தில் ஒப்படைக்க வேண்டும். அதுவரையில் கோயில் நிர்வாகம் இக்கல்வெட்டை பாதுகாத்திட இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு – இக்கல்வெட்டை கண்டுபிடித்து, அதனை வாசித்து பிறகு அதன் பொருள் கண்டறிந்தது ஆகிய அனைத்து வேலையும் செய்தது திரு. முனியசாமி அவர்கள் என்பதனால், மற்ற பிற நபர்களின் பெயர்கள் இங்கு குறிப்பிடவில்லை.

நன்றி ! * பேரையூர் திரு. முனியசாமி (கல்வெட்டை கண்டுபிடித்தவர்))

1. இராமநாதபுரம் மாவட்ட அருங்காட்சியகம் காப்பாளர் திரு. சிவக்குமார்
2. இராமநாதபுரம் மாவட்ட தொல்லியல் துறை அதிகாரி திரு. சுரேஷ்
3. தொல்லியல் துறை உதவியாளர் திரு. வேங்கை வேந்தன்
4. பாண்டிய நாடு பண்பாட்டு மையம், திரு. தமிழ் உதயன்
5. திருக்கோயில் பூசகர்கள்
6. பூசகர் திரு. இராஜேஸ்வரன் சகோ
7. இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம் பொறியாளர்திரு. தமிழ்செல்வன்
8. நண்பர் மணிகண்ட பிரபு (முதுகுளத்தூர்)
9. நண்பர் திரு. கதிர்வேல் (கமுதி)
10. கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள்.

தகவல்கள் – கள ஆய்வு, தமிழி நூல், தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு
கள ஆய்வு நாள் – 03.06.2026
உடன் – திரு. இராஜேஸ்வரன், திரு. சுரேஸ் மற்றும் திரு. வேங்கை வேந்தன்.
நன்றி ! இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆர்வலர் சி. அபிஷேக்.

தமிழி நடுகல் கண்டெடுப்பு

மதுரை, ஜூன் 2–

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே ஆப்பனூர் கிராமத்தில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழி (தமிழ் பிராமி) கல்வெட்டை மதுரை தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம் தலைமையிலான குழு கண்டறிந்தது.

இங்குள்ள ஆண்டியேந்தல் பகுதி அரியநாச்சியம்மன் கோயில் வளாகத்தில் இக்கல்வெட்டு மண்மூடிக் கிடந்தது. 2 ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேக திருப்பணியின்போது கண்டெடுக்கப்பட்டது. ஆனால் அது கல்வெட்டு என அறியாமல் மரத்தின் கீழ் வைத்திருந்தனர். இங்கு சுவாமி கும்பிட வந்த மதுரை மாவட்டம் பேரையூர் ஆசிரியர் முனியசாமி இக்கல்லை பார்த்து மதுரை பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மைய செயலாளர் சாந்தலிங்கத்திற்கு தகவல் தெரிவித்தார். சாந்தலிங்கமும், உதவி ஆய்வாளர் உதயகுமாரும் நேரில் சென்று கல்வெட்டை படிஎடுத்து படித்தனர்.

இக்கல்வெட்டு பண்டைய தமிழ் எழுத்தான தமிழியில் எழுதப்பட்டிருந்தது. வெங்கச் செங்கல் என்னும் வகையைச் சேர்ந்த கல், புள்ளிகள் எதுவுமின்றி கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளது.

■ முதுகுளத்தூர் அருகே ஆப்பனூரில் கண்டெடுக்கப்பட்ட நடுகல்லை படியெடுத்த மதுரை தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம், உதவி ஆய்வாளர் உதயகுமார்.

'ஆபன்னூர் ஏறி ய் மாண்டு விழுந்த அத்தியன் கீரன்கல்' என்பது இக்கல்வெட்டின் வாசகம்.

இதன் பொருள், ஆப்பனூர் மேல் சண்டையிட்டு மாண்டு விழுந்து போன வீரன் அத்தியன் கீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் என்பதாகும். அத்தியன் என்பது தந்தை பெயராகவும் அவனது மகன் கீரன் என்பது இறந்து போன வீரன் பெயராகவும் உள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்திலேயே இதுதான் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நடுகல்வெட்டாகும்.

இதுகுறித்து சாந்தலிங்கம் கூறியதாவது: கல்வெட்டின் காலத்தை அறிய அதில் நிபுணத்துவம் பெற்ற சுப்பராயலு, மார்க்சியகாந்தி, ராஜகோபால் ஆகியோரிடம் கருத்து கேட்கப்பட்டது. அவர்களும் இக்கல்வெட்டின் உண்மைத் தன்மையையும், காலத்தையும் உறுதி செய்தனர்.

ஆப்பனூர் என்ற பெயரே 2000 ஆண்டுகளுக்கு முன்பே வழக்கத்தில் இருந்துள்ளது பெருமைக்குரிய செய்தி. பாண்டிய நாட்டில் பாடப்பெற்ற 14 சிவத்தலங்களில் இத்தலமும் ஒன்று என்றார்.

தினமலர் 02.06.2026

2,000-year-old Tamil Brahmi inscribed hero stone found in Ramanathapuram

Ragu.Raman
@timesofindia.com

Chennai: A 2,000-year-old Tamil Brahmi-inscribed hero stone was found in Appanur village in Ramanathapuram. Epigraphists say the writings on the stone could belong to 1st century BCE, making it one of the earliest Tamil Brahmi-inscribed hero stones in the state.

The inscription was engraved on the quartz stone in three lines, and the script is legible.

It reads "appanur eri mandu vizhuntha atthiyan kiran kal". It means the stone was erected in the memory of Kiran, son of Aththiyan, who fought against Apannur and died.

"This is the first time we found a Tamil Brahmi-inscribed hero stone in Ramanathapuram district. It is very difficult to write on this stone. Only a highly skilled craftsman could have engraved these letters," said C Santhalingam, secretary, Pandyanadu Centre for Historical Research.

TOI

HONOURING A MARTYR: The inscription says that the stone was erected in the memory of Kiran, son of Aththiyan, who fought against Apannur and died

"This is a landmark discovery; it is evidence of the early writing system that existed 2,000 years back in Pandya region," he added.

Muniyasamy, a teacher from Peraiyur near Kamuthi, found the inscription at Ariyanachhi Amman temple in Appanur village.

Senior epigraphist Y Subbarayalu said the Tamil Brahmi inscription has developed characters and could belong to 1st century BCE. "Earliest Tamil Brahmi discoveries like Mangulam inscriptions near Madurai belong to 2nd century BCE. This one might have been inscribed slightly later," he said.

Another hero stone with ancient Tamil Brahmi inscriptions was found in Pulimankombai in Theni district, which was considered from 3rd century BCE. "For the first time, we have found an inscription on a quartz rock. They could have used a sharp chisel to engrave these letters," said professor K Rajan, academic and research adviser to the Tamil Nadu State Department of Archaeology.

கற்றதும் பெற்றதும் -2
வரச் சொன்னார்கள்... வந்தார்கள்... வென்றார்கள்...

ஆசிரியர்- வரலாற்று ஆய்வாளர் ஜெ திவான்
நாணல் பதிப்பகம் வெளியீடு
டிசம்பர் 2025

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
தமிழணங்கு, சக்தி, பெண்ணிதழ் ஆசிரியர்

காரட்டூனிஸ்ட் மதன் எழுதிய வந்தார்கள் வென்றார்கள் என்ற நூலுக்கு எதிராக இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. மதன் எழுதிய வந்தார்கள் வென்றார்கள் நூல் தைமூர் முதல் அவுரங்கசீப் வரை இந்தியா வந்து ஆட்சி செய்த இஸ்லாமிய மன்னர்களைப் பற்றி விளக்குகிறது. இந்தியாவில் முஸ்லிம் மன்னர்கள் இந்து கோவில்களை இடித்து இந்தியர்களை / இந்துக்களைக் கொடுமைப்படுத்தி அவர்களைச் சித்திரவதை செய்து மதம் மாற்றி பல கொடுமைகளுக்கு ஆளாக்கினர் என்ற கருத்துப் பரப்பப்படுகிறது. இந்நூலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்லாமிய மன்னர்கள் மண்ணாசை, பொன்னாசை காரணமாகத் தானாகப் படை எடுத்து வரவில்லை. இந்தியாவிலிருந்து இந்து மன்னர்கள் இசுலாமிய மன்னர்களிடம் உதவி கோரி இங்கு வரும்படி அவர்களை அழைத்தனர். இவர்களுக்கு உதவவே இஸ்லாமிய மன்னர்கள் வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்தனர் என்று திவான் தன் நூலில் நூல் ஆதாரங்களுடன் விளக்குகிறார்.. எனவே இந் நூலின் தலைப்பு வரச் சொன்னார்கள் வந்தார்கள் வென்றார்கள் என்பதாகும்.

கிபி 12ஆம் நூற்றாண்டில் ராஜபுத்திர மன்னன் ஜெயச்சந்திரன் முகமது கோரியை வரவழைத்தான். கிபி 14 ஆம் நூற்றாண்டில் டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியிடம் கெஞ்சி அவரது தளபதி மாலிக்காபூரை சுந்தரபாண்டியன் மதுரைக்கு வரவழைத்தான். 16 ஆம் நூற்றாண்டில் தான் பஞ்சாபுக்கு மன்னராக வேண்டும் என்ற ஆசையில் அங்கு ஆளுநராக இருந்த ராணா சங்கா பாபரை டெல்லிக்கு வரவழைத்தார். இதுவே இவர்கள் வரவழைத்த வரலாறும் அவர்கள் வந்து வென்ற கதையும் ஆகும்.

இஸ்லாமிய மன்னர்கள் பற்றி முழு உண்மையையும் கூறாமல் பகுதி உண்மையைக் கூறி அவர்கள் இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் இங்குப் படையெடுத்து வந்தார்கள் என்ற தவறான கருத்தை பலரும் பரப்பி வருகின்றனர். இந்து முஸ்லிம் பகையை உருவாக்கும் முயற்சியில் இஸ்லாமிய மன்னர்கள் மீது வெறுப்பை தூண்டும் வகையில் இங்குத் தொடர்ந்து பொய் பிரச்சாரம் நடந்து வருகிறது. இப்பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

நூலாசிரியர் திவான் பல வரலாற்று நூல்களில் இருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறார். பையாண்டகான் *(Paiyanda Khan)* என்பவர் துருக்கி மொழியில் மொழிபெயர்த்த பாபரின் சுயசரிதை பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. அந்த நூலின் *(Beveridge* ன்*)* ஆங்கில மொழிபெயர்ப்பை இவர் படித்துப் பல செய்திகளை இந்நூலில் கொடுத்துள்ளார்.

மீர்சா ஹைதர் தவுலத் என்பவர் எழுதிய தாரிக் ரஷீதி என்ற நூலில் பாபரின் வீரச் செயல்கள் விளக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் வின்ஸ்டன் ஸ்மித் 'பாபரது காலத்தில் ஆசியாவின் மிகச்சிறந்த இளவரசர் அவர்' என்றும் 'எக்காலத்திற்கு உரியதும் எந்நாட்டிற்கு உரியதுமான அரசர்களுக்கிடையில் மிக உயர்ந்த

இடத்தை பெற தகுதி உள்ளவர் பாபர்' என்றும் பாராட்டி உள்ளார் ரஷ்புரூக் வில்லியம்ஸ் என்பவர் எழுதிய 16-ஆம் நூற்றாண்டின் 'An empire builder of the sixteenth century.. Babur என்ற நூலில் அவரை மனிதர் என்ற நிலையிலும் அரசர் என்ற நிலையிலும் வானளாவ புகழ்கின்றார். நாகரிகத்திலும் நயத்தக்க நற்பண்பிலும் பாபருக்கு மிஞ்சியவர் எவரும் இல்லை என்று இந் நூல்கள் விளக்குகின்றன.

முதலாவது அழைப்பு

கிபி 997 இல் கஜினி பகுதியில் மன்னராக முகமது என்பவர் அரியணை ஏறினார். அவர் சுமார் 33 ஆண்டுகள் ஆட்சி செய்துவிட்டு மறைந்தார். இவரை அடுத்து கோர் வம்சத்தினர் மன்னர்களாயினர். இவர் கஜினி நிலப் பகுதியை கைப்பற்றித் தன் நாட்டோடு இணைத்துக் கொண்டார். தன் தம்பியை கஜினியின் தலைவர் ஆக்கினார். இவரே முகமது கோரி என்று அழைக்கப்பட்டார்.

கோரி வாழ்ந்த காலத்தில் டெல்லி அஜ்மீர் பகுதியை ஆட்சி செய்த ராஜபுதனத்து மன்னரான பிரித்விராஜ் கண்ணோசி பகுதியை ஆட்சி செய்த ஜெயச்சந்திரனுடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்தார். ஜெயச்சந்திரனின் மகள் சம்யுக்தயை திருமணம் செய்து கொள்ள பிரித்விராஜன் விரும்பினார். இதனால் அவளைக் குதிரையில் வந்து கடத்தி சென்றார்.

ஜெயச்சந்திரன் பிரித்திவிராஜனை அழிக்க வேண்டும் அவனை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் முகமது கோரியிடம் உதவி கேட்டர். 'நீர் பெரும் படையுடன் வந்து பிரிதிவிராஜனை அழிக்க வேண்டும் என்று உதவி கேட்டார். ' நீங்கள் வரும் வழியில் யமுனை நதிப் பகுதியில் நானும் என் படைகளுடன் வந்து சேர்ந்து கொள்கிறேன்' என்று ஜெயச்சந்திரன் முகமது கோரிக்கு கடிதம் எழுதினார். என்று எஸ் எஸ் அருணகிரிநாதர் என்ற வரலாற்று ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். ஜெயச்சந்திரன் அழைத்துத்தான் முகமது கோரி பிரித்விராஜன் மீது படையெடுத்து அவனை அழித்தான் என்ற தகவலை தனது நூலில் உறுதி செய்துள்ளார்.

கோரி பிருதிவிராஜன் போரின் போது பிரித்திவிராஜனுடன் இருந்த மந்திரிகள் முகமது கோரி யுடன் சேர்ந்து கொண்டனர். இதனாலும் பிரிதிவிராஜன் தோல்வியைச்

சந்திக்க நேரிட்டது. இப்போரில் பிரிதிவிராஜன் கொல்லப்பட்டான். அவனது மாமனார் ஜெயச்சந்திரனும் கங்கா நதியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான். இங்கு வந்த முகமது கோரி இங்கேயே தங்கி ஜெயச்சந்திரன் பிரித்திவிராஜன் இருவரின் நாட்டையும் ஆட்சி செய்ய தொடங்கினான்.

பிரித்விராஜன் தோல்வியைப் பற்றி ரமிலா தாப்பர் எழுதிய *Sonnathu, the many voices of a History Viking India* என்ற நூலை தமிழில் சபி என்பவர் கஜினி முகமது சோமநாத படை எடுப்பு என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இந்நூலை பாரதி புத்தகாலயம் வெளியிட்டது. இந்நூலின் *127, 128* ஆம் பக்கங்களில் ரஜபுதன மன்னர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பகை பாராட்டியதாலும் விசுவாசமாக இல்லாததாலும் பிரிதிவிராஜனின் மாமனார் பிரிதிவிராஜன் அழிய வேண்டும் என்ற ஆசைப்பட்டு அவனை எதிர்த்ததாலும் பிரித்விராஜனின் மந்திரிகள் முகமது கோரி பக்கம் சேர்ந்ததாலும் பிரித்விராஜன் தோற்றுப் போனான் என்று குறிப்பிட்டுள்ளார். சந்த் பார்தாயி அவர்கள் எழுதிய பிரித்விராஜ் காவியம் ஜெயசந்திரனின் இழிவான செயலை விளக்குகின்றது ராஜபுதனத்தில் பிரிதிவிராஜ் பற்றி நான்கு காவியங்கள் உள்ளன. பிரித்விராஜ் ரசோ, பிரித்விராஜா விஜயம், கண் ஹாடா பிரபந்தம், ஹம்மிரா மகாகாவியம் ஆகியன அங்கு பிரித்திவிராஜன் ஒரு ஒரு நாயகனாக போற்றுகின்றன.

இரண்டாவது அழைப்பு:

பாபரை இங்கு வரவழைத்தவர்கள் மூவர். முதலாவதாக பஞ்சாப் ஆளுநராய் இருந்த தவுலத் கான் ஆவார். இவர் பஞ்சாப்பிற்கு அரசராக வேண்டுமென்ற ஆசை கொண்டு தனக்கு உதவும் படி பாபரை வேண்டினார். அதற்கு கைமாறாக பாபரைத் தமது அரசராக ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இரண்டாவது மேவார் நாட்டு மன்னரான ராணா சங்கா. இவரும் இந்தியாவின் மீது படையெடுக்கும்படி பாபரை தூண்டி விட்டு இங்கு வரச் செய்தார்.

மூன்றாவது நபர் இப்ராஹிம் லோடியின் உறவினரான ஆலம் கான். இவர் தான் டெல்லிக்கு சுல்தானாக வேண்டும் என்ற ஆசையினால் பாபரைத் தொடர்பு கொண்டு அவரை இங்குள்ள இப்ராஹிம் லோடி மீது படையெடுக்கும்படி வேண்டினார். பஞ்சாபின்

கவர்னர் லோடியிடம் இருந்து பாபருக்கு அழைப்பு வந்ததை ஏ எல் ஸ்ரீவத்சவா எழுதிய த மொகல் எம்பயர் ஆக்ரா என்ற நூலின் 13 ஆம் பக்கத்தில் காணலாம்.

ரானா சங்கா தன் சகோதரனுடன் போரிட்டு ஒரு கண்ணை இழந்தார். போரில் 80 விழுப்புண்கள் பெற்றிருந்தார். இவரது வரலாறு *Maharana Sanga the Hindu put, the Last Great Leader of the Rajput race* என்ற நூலில் விரிவாக உள்ளது. மேவார் மன்னர் டெல்லி வரை வரும்படி இங்கு பாபரை முதன் முதலில் அழைத்து வந்தார். இதுவும் இந்நூலில் 118 ஆம் பக்கத்தில் உள்ளது. ஆக இவர்கள் அழைத்தார்கள் பாபர் வந்தார் என்பது இச்சான்றுகளால் உறுதிப் படுகின்றது. பாபர் புறப்பட்டு டில்லி அருகே வரும்போது ராணா சங்காவாகிய நானும் புறப்பட்டு ஆக்ரா நோக்கி வருவேன் என்று பாபருக்கு தூது அனுப்பி டெல்லி வரை வரவழைத்தவர் ராணா சங்கா.

பேராசிரியர் கோ தங்கவேலு இந்திய வரலாற்றை மூன்று தொகுதிகளாகத் தொகுத்து 1971ல் வெளியிட்டார். அதில் மூன்றாம் தொகுதியின் 21 ஆம் பக்கத்தில் பாபரின் வெற்றிக்கு ஒன்பது காரணங்களைப் பட்டியலிடுவார். அந்த 9 காரணங்களில் எட்டாவதாக அவர் குறிப்பிட்டிருப்பது ராணா சங்கா போன்ற ரசபுத்திரர்களும் லோடியின் விரோதிகளும், பாபரை வரவேற்றனர் என்பதாகும். பாபர் நீண்ட புகழ் உடையவர், அவர் மறைந்த போதும் அவருடைய புகழ் என்றும் அழியாது என்று வரலாற்று ஆசிரியர் ஸ்டான்லி லேண்பூல் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவது அழைப்பு:

உலகின் நீண்ட மன்னர் வம்சம் பாண்டிய மன்னர் வம்சம் ஆகும். கிபி 14 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்களுக்குள் தாயாதிச் சண்டை தொடங்கியது. இரு தாய் வயிற்றப்பிள்ளை இடையே வாரிசுரிமை போர் ஏற்பட்டது. மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்கு சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் என்று இரண்டு புதல்வர்கள் இருந்தனர். இவர்களில் சுந்தரபாண்டியன் பட்டத்து ராணியின் மகன். வீரபாண்டியன் மறுமனையாட்டியின் மகன். ஆனால் மன்னர் வீரபாண்டியனுக்கே கிபி 1296 இல் இளவரசுப் பட்டம் சூட்டினார். இதனைப் பொறுக்காத பட்டத்தரசியின் குமாரன் சுந்தரபாண்டியன் கிபி 1310இல் தந்தையைக் கொன்று பாண்டிய நாட்டின் தலைநகரான

மதுரை மாநகரத்தில் அரியணை ஏறினான். இத்தகவலை டி.எச். சதாசிவ பண்டாரத்தார் எழுதிய பாண்டிய வரலாறு என்ற நூலின் 113 ஆம் பக்கத்தில் காணலாம்.

சுந்தரபாண்டியன் மன்னராக பட்டம் சூட்டியதிலிருந்து ஏற்கனவே இளவரசு பட்டம் சூட்டப்பட்ட வீரபாண்டியனுக்கு தன் அண்ணன் மீது கோபமும் ஆத்திரமும் இருந்தது. எனவே அவன் தன் அண்ணனை ஒழித்து விட முடிவு செய்து பெரும் படையெடுத்து மதுரையை நோக்கி வந்தான். அவனது படை பலத்தை கண்ட சுந்தரபாண்டியன் மதுரையிலிருந்து ஓடிப்போய் டில்லியில் அலாவுதீன் கில்ஜியிடம் சரண் புகுந்தான். இத்தகவலை பாண்டியர் வரலாறு முதல் பாகத்தில் 534 ஆம் பக்கத்தில் ராஜசேகர தங்கமணி குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியைப் பணிந்து அவனது படைத்தளபதியை தனக்கு உதவும் படி மதுரைக்கு அனுப்பிவைக்க வேண்டினான். மாலீக் காபூர் என்ற தளபதியை மதுரைக்கு அழைத்து வந்தான் இங்கு வந்த பின்பு மாலிக் காபூருக்கு மதுரையின் செல்வ வளம் கண்ணை உறுத்தியதால் சுந்தரபாண்டியனை மன்னன் ஆக்காமல் தானே மன்னன் ஆனான்.

சுந்தரபாண்டியன் மாலிக்காபூரை தென்னாட்டிற்கு அழைத்து வந்து படை எடுக்குமாறு வேண்டிக் கொண்ட தகவலை பாண்டியர் வரலாறு என்ற நூலில் 77 ஆம் பக்கத்தில் டாக்டர் மு கோவிந்தசாமியும் எடுத்துரைத்துள்ளார். தனக்குள் ஏற்பட்ட சொத்துச் சண்டையில் அடுத்தவனை அழைத்து வந்து தன் அண்ணனின் மீது போர் தொடுக்கச் செய்ததால் பாண்டியர்கள் தம் நாட்டை மாலிக் காபூரிடம் பறி கொடுத்தனர்.

ஆக இங்கிருந்தவர்கள் தமது மண்ணாசையின் காரணமாக இஸ்லாமியர்களை இங்கு வேண்டி விரும்பி அழைத்தார்கள். அவர்கள் வந்தார்கள் வென்றார்கள் என்பதே வரலாற்று உண்மை.

புதிய வெளியீடுகள்









சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639